# உதயன்

24 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 091 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 13 திங்கட்கிழமை (25/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily




மண் கௌவியது பாகிஸ்தான் 23

முக்கிய தடயங்கள் கிடைத்தன 08



அமெரிக்காவில் அணுக் கசிவு 09



கிழக்கில் முதலிடும் குவைத் 17



## அரச சார்பற்ற அமைப்புகள் அமர்வில்

# அரசுக்கு எதிராக சாட்சியமளிக்க தமிழ் உறவுகள் ஜெனிவாவுக்கு

கொழும்பு, பெப்ரவரி 25

இன்று ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில், காணாமற்போனவர்களின் உறவுகளும் அடுத்த வாரமளவில் சாட்சியம் அளிக்க உள்ளனர். அவர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைச் செயற்பாட்டு அமைப்புகளும், அரச சார்பற்ற அமைப்புகளும் மேற்கொண்டுள்ளன.

ஜெனிவா மனித உரிமைகள் குறித்த ராஜதந்திர சமர்க்களத்தில் இலங்கை விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில், அரசுக்கு எதிராகச் சாட்சியமளிப்பதற்கு காணாமற்போனோரது உறவினர்களும் ஜெனிவாவுக்கும் செல்லவுள்ளனர்.

இவர்களை ஜெனிவாவுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைச் செயற்பாட்டு அமைப்புகளும், அரசசார்பற்ற அமைப்புகள் சிலவும் மேற்கொண்டு வருகின்றன.

அரசுக்கு எதிராக சாட்சியமளிப்பதற்கு இந்தக் குழுவில் காணாமற்போனோர்களின்

பார்க்க பக்கம் 04

## ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

ஜெனிவா, பெப்.25

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22வது கூட்டத் தொடர் இன்று சுவிற்ஸர்லாந்தின் தலைநகர் ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி வரை அமர்வு இடம்பெறவுள்ளது.

இலங்கை மனித உரிமை விடயங்கள் தொடரில் மார்ச் மாதம் 15ஆம் திகதி அமெரிக்கா பிரேரணை கொண்டுவரத் தீர்மானித்துள்ளது. அந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பும் அன்றையதினமே இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மனிதப் புதைகுழி: விசாரணை நடத்தக் கோருகிறது ஐ.நா.

கொழும்பு, பெப்.25

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் அடுத்தடுத்து தோண்டி எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இலங்கையிடம் ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தினுள் சுமார் நூறுக்கும் மேற்பட்ட மனித எச்சங்களும் மண்டை ஓடுகளும் அண்மையில் மீட்கப்பட்டிருந்தன. 'இது தொடர்பில் உரிய முறையில் நீதியான விசாரணை நடத்தப்பட

பார்க்க பக்கம் 04

# போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை

### மீண்டும் வலியுறுத்துகிறது ஐரோப்பிய நாடாளுமன்றம்

பெல்ஜியம், பெப்.25

இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையில், வன்னி இறுதிப் போரில் உரிமை மனித மீறல்கள் குறித்து தேசிய மட்ட விசாரணைகளுக்கு மேலாக சர்வதேச சுயாதீன மீளாய்வு விசாரணைகளும் அவசியம் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தெற்காசியப் பிராந்திய தலைவர் ஜீன் லம்பேர்ட் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் பொதுமக்களும் ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தப்படும் நிலை தொடர்கிறது. மனித உரிமை காவலர்களுக்கு உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு அதிகாரத்தில் உள்ளவர்களின் ஊக்கமும் காரணமாக அமைந்துள்ளது என்றும் ஜீன் லம்பேர்ட் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

பார்க்க பக்கம் 04

## ராஜீவ் கொலைக் கைதிகளை தூக்கிலிடுவது பெரும் தவறு

### தீர்ப்பு வழங்கிய நீதியரசர் தற்போது தெரிவிப்பு

சென்னை, பெப்.25

ராஜீவ் காந்தி கொலைக் கைதிகளுக்கு 13 வருடங்களுக்கு முன்னர் தூக்குத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த அப்போதைய உச்ச நீதிமன்ற நீதியரசர் கே.டி.தோமஸ், தற்போது அவர்களைத் தூக்கிலிடுவது அரசமைப்புக்கு முரண்பாடான செயலாக - தவறானதாக அமையும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தூக்குத் தண்டனையை

பார்க்க பக்கம் 04

## உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும்

கொழும்பு, பெப்.25

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் மரக்கறி உட்பட அனைத்து வித உணவுப் பொருள்களின் விலைகளும் விரைவில் அதிகரிக்கப்படலாம் என்று முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

எரிபொருள்களின் விலை யேற்றத்தைக் கண்டித்து அக் கட்சியின் அரசியல் பீடம் விடுத்துள்ள அறிக்கையில்-

"நடை முறைக்குவரும்

பார்க்க பக்கம் 04

## 'எங்களுக்கும் இதயம் இருக்கிறது'

### யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணம், பெப்.25

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும்-இவ்வாறு யாழ். சிவில் சமூகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா "எங்களுக்கும் இதயம் இருக்கிறது. இதற்கு மேல் எதையும் சொல்ல விரும்பவில்லை" என்று பதிலளித்தார்.

யாழ். சிவில் சமூகத்துக்கும் இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவுக்கும் இடையில் நேற்று மாலை யாழ். நகரிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது யாழ். சிவில் சமூகத்தினரால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக எடுத்துக் கூறப்

பார்க்க பக்கம் 04

## கச்சதீவில் திரண்ட யாத்திரிகர்கள்

-கச்சதீவிலிருந்து சோபா-


யாழ்ப்பாணம், பெப்.25

ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. தமது வாழ்வில் ஒளியேற்றுமாறு இறைவனிடம் கண்ணீர் மல்க மன்றாடிய பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றினர். திருவிழாவில் இலங்கை மற்றும் இந்திய யாத்திரிகர்கள் திரளாக ஒன்று கூடியிருந்தார்கள்.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் விசேட திருப்பலி பூசைகள் நடைபெற்றன.

கச்சதீவு உற்சவத்துக்கு

பார்க்க பக்கம் 04



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாதம் சிதறியது மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தருக்கு

**வளவு துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தபோதே மிதிவெடியில் சிக்கியுள்ளார்.**

தென்மராட்சி,பெப்.25

மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தரொருவர் தனது கால்ப் பாதத்தை இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாழ்- கிளாலி வீதியில் இடம் பெற்றது.

வளவு துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த கரவெட்டி கோவில் சந்தையைச் சேர்ந்த குலம் ஜெயவீரசிங்கம் (வயது -57) என்பவரே மிதிவெடியில் சிக்கியவர் ஆவார்.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட எழுதுமட்டுவாழ் - கிளாலி வீதியில் உள்ள காணியை பத்துக்கும் மேற்பட்டோர் துப்புரவு செய்து கொண்டிருந்தனர். அவ் வேளையிலேயே இந்த விபரீதம் இடம்பெற்றது.

இந்தக் காணியை அண்டிய பகுதிகளில் கடந்த வருடம் மக்கள் மீளக்குடியமர்ந்து வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

சம்பவத்தில் காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-9)

# அச்சுவேலி கைத்தொழில்பேட்டைக்கு அடிக்கல் நட்டார் இந்தியத் தூதுவர்

**அறிவிக்கப்பட்டபடி நேற்று நடந்தேறியது**





யாழ்ப்பாணம், பெப். 25

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள நிர்மாணிப்பதற்குரிய, 220 மில்லியன் ரூபா பெறுமதியான 6 ஒப்பந்தங்கள் நேற்று யாழ். நகரில் கைச்சாத்திடப்பட்டன. அத்துடன் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல்லும் இந்தியத் தூதுவர் அசோக்.கே. காந்தாவினால் நடப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கு இரண்டு நாள் பயணமாக வருகை தந்திருந்த இந்தியத் தூதுவர் அசோக்.கே.காந்தா இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

இந்திய அரசின் நன்கொடை நிதியில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்குரிய 6 ஒப்பந்தங்கள் இந்தியத் தூதுவர் அசோக். கே.காந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி முன்னிலையில் நேற்று கைச்சாத்திடப்பட்டன.

அதன் பின்னர் அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டை முன்னர் அமைந்திருந்த இடத்தில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை இந்தியத் தூதுவர் அசோக். கே.காந்தா நட்டார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைத் தவிசாளர்கள் கலந்துகொண்டனர்.

ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கருத்துத் தெரிவித்த இந்தியத் தூதுவர்-

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் கைத்தொழில்பேட்டையின் சகல வேலைகளும் முடிவுறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார். அத்துடன் வடமாகாணம் தற்போது அபிவிருத்தி ஊடாக வளர்ச்சி கண்டு வருகின்றது. இதன் மூலம் பல்வேறு துறைகளும் முன்னேற்றம் கண்டுள்ளன.

இருப்பினும் மக்களின் வாழ்வாதார தொழில் நிலைகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. போர்க் காலத்துக்கு முன்னர் இங்கிருந்த கைத்தொழில்துறை தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் துறையை மீண்டும் வளர்ப்பதன் ஊடாக இந்த மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் - என்றார்.

அடிக்கல் நடும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் இந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்படுவதாக நேற்று முன்தினம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி அறிவித்திருந்தார்.

ஆனால், திட்டமிட்டபடி நேற்று அந்த நிகழ்வு நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அவர் சார்ந்த கட்சி உறுப்பினர்கள், அமைச்சின்அதிகாரிகள் எவரும் இந்த நிகழ்வுக்குச் சமுகமளிக்கவில்லை. (ஐ-5)

## சிதம்பரத்தின் வீட்டை முற்றுகையிட முயன்றோர் கைது

சென்னை,பெப்.25

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் படுகொலையை கண்டிக்காததை எதிர்த்து சென்னையில் உள்ள மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் வீட்டை முற்றுகையிடப் போவதாக இந்து மக்கள் கட்சி (அர்ஜுன் சம்பத் பிரிவு) அறிவித்து இருந்தது.

இந்தப் போராட்டத்திற்கு பொலிஸார் அனுமதி கொடுக்கவில்லை. அதையடுத்து நுங்கம்பாக்கம், சாஸ்திரி பவன் எதிரே பைகிராப்ஸ் கார்டனில் உள்ள ப. சிதம்பரம் வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

முற்பகல் 11 மணியளவில் இந்து மக்கள் கட்சியின் சென்னை மண்டல தலைவர் முத்து ரமேஷ்குமார், தலைமை நிலைய செயலாளர் குமாரவேல் உட்பட ஏராளமானோர் முற்றுகைப் போராட்டத்திற்குத் திரண்டனர்.

அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி 45 பேரைக் கைது செய்தனர் (ஓ)

## விபத்தில் மூவர் சாவு

வாகன விபத்தொன்றில் இளைஞர்கள் மூவர் உயிரிழந்த சம்பவம் வியாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

வியாங்கொடை கும்பல் ஒலுவவில் நேற்றுக்காலை காரொன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்தச் சம்பவத்திலேயே மூவரும் உயிரிழந்தனர். (சி)

## புடைவை வியாபாரிகளாக 'றோ' இலங்கைக்குள் ஊடுருவல்

**கைதுசெய்து நாடு கடத்த நடவடிக்கை**

கொழும்பு,பெப்.25

சுற்றுலாப் பயணிகள் மற்றும் புடைவை வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்ற போர்வையில் இலங்கைக்குள் நுழைந்திருக்கும் இந்திய உளவு அமைப்பான 'றோ'வின் அங்கத்தவர்களை கைது செய்து நாடு கடத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தியுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

''றோ' வின் முகவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இவர்களை சுற்றிவளைத்துப் பிடித்து நாடுகடத்தும் நடவடிக்கைகளை இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

வடக்கு, கிழக்கில், புடைவை வியாபாரிகள், விவசாயிகள் என்ற போர்வையில் இவர்கள் ஊடுருவி உள்ளனர் என்றும் அவர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு இராணுவத்தினரின் உதவி நாடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மட்டக்களப்பில் முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில், உளவாளிகள் நபர்கள் அதிகளவில் தங்கியிருந்து செயற்படுவதாக இலங்கை குடிவரவுகுடியகல்வுத் திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே, இலங்கை இராணுத்தினராலும் பொலிஸாராலும், சிறப்பு அதிரடிப் படையினராலும் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் பலர் உடனடியாக நாடு கடத்தப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

# ஜெனிவாவுக்கு மஹிந்த சமரசிங்க ஆடை அணிந்தா செல்கின்றார்?

**கடந்த முறை வழங்கிய உறுதிமொழிகள் எங்கே? ஐ.தே.க. கேள்வி**

கொழும்பு, பெப்.25

ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அதன் முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

சர்வதேச நாடுகள் நாட்டின் இறைமையில் தலையிடுவதற்கு அரசு வழிவகுத்துள்ளது எனத் தெரிவித்த ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளரும் எம்.பியுமான ஜயலத் ஜயவர்தன, கடந்த ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை அரசு சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாதுள்ள நிலையில், இம்முறை கூட்டத்தொடரில் பங்கேற்க அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆடை அணிந்து கொண்டுதான் ஜெனிவா செல்கிறாரா என்றும் கேள்வி எழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுதான் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்டது. அந்தக் கூட்டத் தொடரில் சர்வதேசத்துக்குப் பல உறுதிமொழிகளை அமைச் சர் மஹிந்த சமரசிங்க வழங்கியிருந்தார். ஆனால் அந்த உறுதிமொழிகள் இதுவரையில் இலங்கை அரசால் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் இம்முறை ஜெனிவா கூட்டத் தொடரில் பங்கேற்கும் இலங்கைக்குழுவுக்குத்தலைமை வகிக்கும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆடை அணிந்துகொண்டுதான் அங்கு செல்கிறாரா? சர்வதேசத்துக்குக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றாது அவர் எவ்வாறு அங்கு செல்கிறார்?

இம்முறை ஜெனிவா கூட்டத் தொடரிலும் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையொன்றைக் கொண்டுவரவுள்ளது. இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அதன் முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும்.

சர்வதேச நாடுகள் நாட்டின் இறைமையில் தலையிடுவதை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். ஆனால் அவ்வாறானதொரு நிலையைத்தான் இந்த அரசு உருவாக்கியுள்ளது - என்றார் ஜயலத்.

# முள்ளியவளை ஐயனார் குடியிருப்பில் வசிப்போர் புத்தளத்தில் இருந்து வந்தவர்களுடன் முறுகல்

யாழ்ப்பாணம், பெப்.25

எங்கள் உயிர் பிரிந்த பின்னர் தான் நீங்கள் எங்கள் காணிகளுக்குள் இறங்க முடியும். இது நாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த பிரதேசம்.

இவ்வாறு முல்லைத்தீவு, முள்ளியவளை ஐயனார் குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் ஆவேசமாகத் தெரிவித்தனர்.

முள்ளியவளை ஐயனார் குடியிருப்புப் பகுதியில் 850 ஏக்கர் காட்டை அழித்து அதில் ஆயிரத்து 600 முஸ்லிம் குடும்பங்களை மீளக் குடியமர்த்தும் முயற்சிகள் கடந்த சில நாள்களாக நடைபெற்று வருகின்றன. இதனால் அந்தப் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கும் -முஸ்லிம் மக்களுக்குமிடையே கசப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அமைச்சர் ஒருவரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் குடியேற்றம் உருவாக்கும் நடவடிக்கைகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன. முஸ்லிம் மக்களை மீளக்குடியேற்றுவதற்கு வசதியாக விசேட சுற்றறிக்கைகளும் அரசினால் வெளியிடப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாகவே முள்ளியவளை ஐயனார் குடியிருப்புப் பகுதியில் முஸ்லிம் குடியேற்றம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தக் குடியிருப்பில் பூர்வீகமாக வசித்து வரும் தமிழ் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இது குறித்து அந்தப் பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்ததாவது:-

'1972 ஆம் ஆண்டு எங்களுக்கு இந்தக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. போர் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தோம். மீளக்குடியேற்றத்தின் போது நாங்கள் வேறிடத்தில் குடியமர்த்தப்பட்டு, பின்னர் எங்கள் அப்பா அம்மா வாழ்ந்த முள்ளியவளை ஐயனார் குடியிருப்புப் பகுதியில் தற்காலிக கொட்டில் அமைத்து குடியமர்ந்தோம் .

இதன்போது இந்தக் காணிகள் திணைக்களத்துக்குச் சொந்தமானவை எனத்தெரிவிக்கப்பட்டு வனத் திணைக்களத்தினர் மீள்குடியேறாது தடுத்தனர். ஆனால் நாங்கள் அதையும் மீறிக் குடியமர்ந்துள்ளோம்.

இப்போது புத்தளத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் எங்கள் பகுதிகளில் வந்து இறங்கி உள்ளனர். அவர்கள் தமக்கு இங்குள்ள 850 ஏக்கர் காணிகள் பகிர்ந்து தரப்பட்டுள்ளதாகவும் அதில் ஆயிரத்து 600 குடும்பங்கள் வரையில் குடியமரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் எங்களை இங்கிருந்து வெளியேறுமாறும் அச்சுறுத்தி வருகின்றனர்.

காடழிப்பதற்காக கனரக வாகனங்களையும் அவர்கள் கொண்டு வந்து நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். -என்று தெரிவித்தனர்.

தம்மைத் தமது சொந்தக் காணியில் மீள்குடியமர அனுமதிக்க வேண்டும் எனவும் இதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் கருத்தை அறியத் தொடர்பு கொண்டபோது அங்கிருந்து பதில் கிடைக்கவில்லை. (ஐ-5)

# பஸ்ஸில் கைபேசி திருடிய சந்தேகத்தில் இருவர் கைது

வலி. வடக்கு, பெப். 25

மாதகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் பயணம் செய்தவரிடம் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை திருடியமை சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பஸ்ஸில் பயணம் செய்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து குறிப்பிட்ட கையடக்கத் தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது என்று யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

கையடக்கத் தொலைபேசி காணாமற் போனதை அடுத்துக் குறித்த பஸ் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பொலிஸார் பஸ்ஸில் பயணித்தவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து கையடக்கத் தொலைபேசி மீட்கப்பட்டது.

இதனடிப்படையில் கையடக்கத்தொலைபேசியை திருடியவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை யாழ். நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியதை அடுத்து அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-86)

# அரியாலை கிழக்கில் மணல் அகழ அனுமதி நிறுத்தம்

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

### மணல் அகழ்வதற்கு முழுமையாகத் தடை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப்.25

அரியாலை கிழக்குப் பிரதேசத்தின் எந்தப் பகுதியிலும் மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வது, கால்நடைகளை கடத்துவது சம்பந்தமாக ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நல்லூர்ப் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.இரவீந்திரதாஸ் மற்றும் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் உட்படப் பிரதேச சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பிரதேசத்தில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் சட்டவிரோத குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், மணல் அகழ்வதற்கு முழுமையாகத் தடை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

அனுமதிப் பத்திரத்துக்கு மணல் அகழ்வது உடனடியாகவே நிறுத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அங்கு பொலிஸாரின் தீவிர ரோந்து பணியை ஆரம்பிப்பது எனவும் முக்கிய இரண்டு இடங்களில் பொலிஸ் காவலரண் அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொலிஸாரின் தீவிர கண்காணிப்பு, பிரதேசத்தில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தவும் உதவும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனைவிட பிரதேசத்தின் குடிதண்ணீர், சுகாதாரம், மின்சாரம் போன்ற அத்தியாவசிய பணிகள் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (ம-17)

# விவசாய விரிவாக்கல் சேவையாளரை கிராம மட்டத்தில் நியமிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்.25

*கிராமிய மட்டத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக விவசாய விரிவாக்கல் சேவையாளரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான தீர்மானம் கண்ணொறுவ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.*

*அகில இலங்கை விவசாய போதனாசிரியர்கள் ஒன்றியத்தின் 65 ஆவது மாநாடு கண்ணொறுவ தாவர மூல வள நிலையக் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த ஒன்றியத்தின் தலைவர் திஷா தர்மவர்த்தன தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.*

இந்த மாநாட்டில் வடக்கில் இருந்து விவசாய திணைக்களத்தின் விவசாய போதனாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் தற்போது விவசாய திணைக்களம் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட சவால்கள் மற்றும் விவசாயச் செய்கையை ஊக்குவிப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக வடமாகாணத்தில் விவசாய போதனாசிரியர்களுக்கு அரசால் வழங்கப்படும் மாதாந்தப் பிரயாணப் படி சம்பந்தமான பாகுபாடும் மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டது.

வட மத்திய மாகாண விவசாய போதனாசிரியர்களுக்கு மாதாந்த பிரயாணப் படி ஆகக் கூடிய தொகையாக நான்காயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை வடக்கில் உள்ள விவசாய போதனாசிரியர்களுக்கு இந்தப் பிரயாண படி ஆகக் கூடிய தொகையாக ஆயிரத்து 750 ரூபாவே வழங்கப்படுகின்றது.

இந்தப் பாகுபாட்டை உடனடியாக நீக்கி சகலருக்கும் ஒரே விதமான பிரயாண படியை வழங்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அதனைவிட இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய சில தீர்மானங்கள் வருமாறு:-

★ மீளவும் கிராமிய மட்டத்தில் விவசாய விரிவாக்க சேவையாளர் சேவையை உருவாக்கி கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக தலா ஒருவரை நியமித்தல் வேண்டும்.

★ உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவில் 3 பாட சித்தியில்லாத 2 பாட சித்தியுள்ள விவசாய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு தொழில்நுட்ப உதவியாளர் என்ற நியமனத்தை வழங்கி 3 வருட சேவையின் பின்பு விவசாய போதனாசிரியர்களாக உள்ளீர்த்தல்.

★ சகல விவசாய போதனாசிரியர்களுக்கும் தீர்வையற்ற மோட்டார் சைக்கிள் பெறுவதற்கான அனுமதிப் பத்திரத்தை உடனடியாக வழங்க வேண்டும்.

★ வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வழங்கப்படவுள்ள உதவி விவசாய பணிப்பாளர் நியமனத்தில் விசேட தர, வகுப்பு 1 இணை சார்ந்த விவசாய போதனாசிரியர்களிடம் இருந்து 100 பேருக்கு சேவை மூப்பு அடிப்படையில் உதவி விவசாயப் பணிப்பாளர் பதவி உயர்வு வழங்கல்.

★ விவசாய போதனாசிரியர்களுக்கெனத் தனியாக இலங்கை விவசாயப் போதனாசிரியர் சேவையை உருவாக்கல். (ம-17)

# கோட்டை பிரதான வீதியில் நடைபாதைகள் அமைப்பு



யாழ்ப்பாணம், பெப்.25

யாழ். முற்றவெளிப் பகுதியில் கோட்டையைச் சுற்றியுள்ள பிரதான வீதியோரத்தில் நடைபாதை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது கே.கே.எஸ். வீதியின் அகலிப்பு மற்றும் 'காப்பெற்' போடும் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து இந்த நடைபாதை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்க வீதியில் இருந்து கே.கே.எஸ். வீதியில் தபாலக சுற்றுவட்ட சந்திவரைக்கும் முதற்கட்டமாக நடைபாதை அமைக்கப்பட்டு வருகின்றது.

பின்னர் பண்ணை வீதி, பண்ணை சுற்றுவட்ட சந்தி ஊடாகக் கடற்கரை வீதியோரங்களில் நடைபாதையை அமைக்கவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் மக்களின் பொழுது போக்கு இடமாக இந்த முற்றவெளி பிரதேசத்தை மாற்றி அமைக்க வசதியாக இந்த நடைபாதை அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடி தோழர் சண்முகதாசன் நினைவாக சமகால அரசியல் பற்றிய கலந்துரையாடல் மாலை 4.30 மணிக்கு டி.எம்.எஸ். தனியார் கல்வி நிறுவனத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம)

**அடிக்கல் நடல்**

ஊர்காவற்றுறை பொதுச் சந்தை கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன்போது நகர எழுச்சித் திட்டத்தில் புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை கொத்திக்குள இணைப்பு வீதி, நாரந்தனை கணேசா பாடசாலை வீதி, நாரந்தனை உதராப்பிட்டி வீதி என்பன திறந்து வைக்கப்படவுள்ளன. அத்துடன் மெலிஞ்சி முனைக் கிராம மின்விநியோக அங்குரார்ப்பணமும் கடற்றொழிலாளர்களுக்கான பொதுமண்டபத்திறப்பு விழாவும் இடம்பெறவுள்ளன. (ம)

## வழக்குக்குச் சென்றவர்

# 3 தினங்களுக்குப் பின் அடிகாயங்களுடன் மீட்பு

தென்மராட்சி, பெப்.25

*சாவகச்சேரியிலிருந்து வழக்கு ஒன்றுக்காகச் சென்றவர் மூன்று தினங்களின் பின்னர் அடிகாயங்களுக்கு இலக்கான நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் மீட்கப்பட்டுள்ளார்.*

*மறவன்புலோவைச் சேர்ந்த சாவகச்சேரியில் வசிக்கும் அப்பையா இராசதுரை (வயது-63) என்பவர் மானிப்பாயில் உள்ள தனது வீடு தொடர்பான வழக்குக்காக கடந்த வியாழக்கிழமை காலை 49 சிசி மோட்டார் சைக்கிளில் மல்லாகம் நீதிமன்றுக்குச் செல்வதாகக் கூறிப் புறப்பட்டிருந்தார்.*

*இவர் வீடு திரும்பாததால் தேடிய உறவினர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்தனர்.*

*நேற்று முன்தினம் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற வேளையில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அடிகாயங்களுக்கு ஆளான நிலையில் அநாதரவாகக் காணப்பட்ட அவர் மீட்கப்பட்டார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.*

*இந்த விடயம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.*

*தாக்குதலுக்கு இலக்கான நபர் பேசமுடியாத நிலையில் உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)*

# துண்டி மயானத்துக்கு பாதுகாப்பு சுற்றுமதில்

யாழ்ப்பாணம், பெப்.25

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் புனரமைப்புப் பணிகளின் முதற்கட்டமாக மயானத்துக்கான பாதுகாப்பு மதில் அமைக்கப்பட்டுள்ளது.

மயான பரிபாலன சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த கால போரால் பெரும் அழிவைச் சந்தித்த இந்த மயானம் போதிய வசதிகள் இன்றிக் காணப்படுகின்றது.

மயானத்துக்கு பூதவுடல்களைத் தகனம் செய்யச் செல்லும் மக்கள் கொட்டகை மற்றும் இதர அத்தியாவசிய வசதிகள் இன்றிச் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் பூதவுடல்களைத் தகனம் செய்வதற்கான கொட்டகை இல்லாததால் மழை காலங்களில் சிரமப்பட்டு பூதவுடல்களை தகனம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, பாண்டியன் தாழ்வு, கொய்யாத்தோட்டம், சுண்டுக்குளி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்தப் பழைமை வாய்ந்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சித்தர்களில் ஒருவரான சிவயோக சுவாமிகளின் பூதவுடலும் இந்த மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டது.

மயானத்தில் இருந்த அதற்கான அடையாள சின்னம் போரால் அழிவடைந்துள்ளது.

இந்தச் சின்னத்தை மீண்டும் மயானத்தில் நிர்மாணிப்பதற்கு மாநகர சபை முன்வரவேண்டும் என்று கொழும்புத்துறை வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

# முழுநிலா நாள் கலைவிழா

வலி. வடக்கு, பெப். 25

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாதாந்தம் நடத்தப்படும் முழு நிலா நாள் கலைவிழா நிகழ்வுகள் இந்த முறை யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் மண்டபத்தில் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் மெல்லிசை நாடகம், இசைக் கச்சேரி, மாற்று வலுவுள்ளவர்களின் நிகழ்வுகள், இஸ்லாமிய நிகழ்வுகள், சிந்து நடைக் கூத்து, நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (ம-86)





கச்சதீவு அந்தோனியார் தேவாலயதின் வருடாந்த உற்வசத்தில் யாழ். ஆயர் திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும், அங்கு கூடி வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் பக்தர்களையும் படங்களில் காணலாம்

# மக்களை இரும்புப் பாதங்களால் நசுக்கித் தாக்கியுள்ளார் மஹிந்த

## எரிபொருள் விலை உயர்வு குறித்து ஐ.தே.க. சாடல்

கொழும்பு, பெப்.25

எரிபொருள்களின் விலை அதிகரிப்புக் குத் தமது கடும் கண்டனத்தை வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி, மக்களின் வாழ்க்கையில் அரசு மறுபடியும் ஒரு நேரடித் தாக்குதலை நடத்தியுள்ளது என்றும், ஜனாதிபதி மஹிந்தவின் இரும்புப் பாதங்களின்கீழ் அவர்கள் நசுக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தது.

''நாட்டின் பொருளாதாரக் கொள்கைக்கு நிதி அமைச்சின் செயலாளர் காரணமல்லர். நிதி அமைச்சரே காரணம் என்பதை அமைச்சர் விமல் வீரவன்ஸ ஏற்றுக்கொள்கிறாரா இல்லையா என்பதை அவர் அறிவிக்கவேண்டும்'' என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

''ஏகாதிபத்திய, மக்கள் விரோத ஆட்சி நடத்தும் மஹிந்த அரசு, நாட்டு மக்களை மறுபடியும் சட்டியிலிருந்து அடுப்பில் தள்ளியுள்ளது. வாழ்க்கைச் சுமையைத் தாங்கமுடியாமல் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்ற நிலையில், எரிபொருள்களின் விலையை மறுபடியும் அரசு அதிகரித்துள்ளது.

''நாட்டு மக்கள் ஒரு வேளை உணவைக்கூட நிம்மதியாக உண்ணமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்று நாட்டில் எவரும் பிறக்கமுடியாது. திருமணம் செய்யமுடியாது. இறக்க முடியாது. ஏனெனில், இவற்றுக்கான பதிவுக் கட்டணங்களும் ஆயிரக்கணக்கில் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த அரசினூடாக மக்கள் எல்லா விதத்திலும் தாக்கப்பட்டுள்ளனர். இந்த அரசு மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறது.

''மஹிந்த அரசின் இரும்புப் பாதங்களுக்குள் மக்கள் நசுக்கப்பட்டுள்ளனர்'' - என்றார் ஜயலத் ஜெயவர்த்தன. (சி)

## மூளாயில் நேற்றிரவு பரபரப்பு

வட்டுக்கோட்டை, பெப். 25

வட்டுக்கோட்டை, மூளாய் பிள்ளையார் கோயில் பகுதியில் தனிப்பட்ட தகராறில் சிவில் உடையில் வந்த சிலர் தலையிட்டு அங்கு கூடிநின்றவர்களைச் சரமாரியாகத் தாக்கினர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

மூளாய் பிள்ளையார் கோயில் பகுதியில் வசித்துவரும் பெண்ணொருவருக் கும் அந்தப்பகுதி மக்களுக்குமிடையில் அடிக்கடி தகராறு ஏற்படுவது வழக்கம். நேற்றும் சச்சரவு ஏற்பட்டுள்ளது. இது குறித்து வீட்டார் சம்பவத்தை இராணுவத்தினருக்குத் தெரியப் படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து அங்கு வந்த சிவில் உடையில் வந்த சிலர், கூடி நின்ற இளைஞர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதில் ஒருவர் காயமடைந்தார்.

சம்பவத்தை அறிந்து அந்தப் பகுதி மக்கள் திரண்டதையடுத்து சிவில் உடையில் வந்தவர்கள் அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டனர்.

சம்பவம் குறித்து அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

''சிவில் உடையில் சிலர் அங்கு கூடிநின்ற இளைஞர்களைத் தாக்கினர். அவர்களை நீங்கள் யார் என்று கேட்டபோது, நாம் சுழிபுரம் படைமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் எனத் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் சிவிலில் வந்திருந்ததால் யாரென உறுதிப்படுத்த முடியவில்லை.'' என்றனர். (ஐ)

## போர்க்குற்றம்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்த வேண்டும் என்று அண்மையில் ஐரோப்பிய நாடாளுமன்றம் யோசனை ஒன்றை நிறைவேற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் தொழில் வாய்ப்புகளையும் சமூக வேலைத் திட்டங்களையும் அரசு செயற்படுத்தி வருவது வரவேற்கக்கூடியது. எனினும், தமிழ் மக்களுக்கு முன்னால் இன்னும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிப்போர் தொடர்பில் இலங்கை இராணுவம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதைப்பற்றி ஐரோப்பிய நாடாளுமன்றம் விசேடமாக விவாதிக்கவில்லை.

ஆனால், பொலிஸ் படை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட வேண்டும் என்ற கருத்தை மாத்திரம் ஐரோப்பிய நாடாளுமன்றம் கவனத்தில் கொண்டுள்ளது என்றும் ஜீன் லம்பேர்ட் குறிப்பிட்டுள்ளார். (சி)

## உணவு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வகையில் பெற்றோல் லீற்றர் 3 ரூபாவாலும், டீசல் லீற்றர் 6 ரூபாவாலும், மண் ணெண் ணெய் லீற்றர் விலை 4 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தவிலை அதிகரிப்பானது மக்களை மேலும் மேலும் துன்பத்துக்குள் தள்ளும் செயலாகும். எரிபொருள்களின் விலை அதிகரிப்பு ஏனைய பொருள்களின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நடவடிக்கை ஆரம்பமும் அல்ல. முடிவும் அல்ல. இனியும் தொடரத்தான் போகின்றது-என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## ராஜீவ்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உறுதிசெய்த உயர் நீதிமன்ற குழாமிற்குத் தலைமை வகித்தது தனது துரதிர்ஷ்டம் என 'டைம்ஸ் ஒப் இந்தியா'வுக்கு அவர் கூறியுள்ளார்.

அவர் இதுதொடர்பாக அளித்துள்ள பேட்டியில், ''இந்தத் தீர்ப்பிலேயே தவறுகள் இருக்கின்றன. குற்றவாளிகளின் முன்னைய நிலைப்பாடு, இயல்பு நிலை, குணாதிசயங்கள் ஆகியவை பரிசீலனைக்கு உட்படுத்தப்படவில்லை'' - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''இந்த வழக்கு மீள ஆராயப்பட வேண்டும். எதிரிகளைத் தூக்கிலிடுவது அரசமைப்பின் 21 ஆவது விதிக்கு முற்றிலும் முரண்பாடானது'' என்றும் உச்ச நீதிமன்ற நீதியரசர் மீள வலியுறுத்தியுள்ளார்.

13 ஆண்டுகளுக்கு முன்னர் நீதியரசர் கே.டி. தோமஸ் தலைமையிலான மூன்று நீதிவான்களைக் கொண்ட குழுவே அதன் அமர்வில் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இவர்கள் மூவருக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டாலும் இவர்கள் மூவரும் 22 வருட சிறை அனுபவித்துவிட்டனர். இவர்கள் தூக்கிலிடப்பட்டால் ஒரு குற்றத்திற்காக இரண்டு தண்டனை அனுபவித்தவர்கள் ஆவர். இது அரசமைப்பிற்கு முரணானது என்றும் நீதியரசர் தெரிவித்தார்.

சமீபத்தில் அப்சல் குரு தூக்கிலிடப்பட்டார். இச்சம்பவம் நீண்டகாலமாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ராஜீவ் காந்தி கொலை வழக்கு எதிரிகளைத் தூக்கிலிடும் விடயத்தில் சட்டப்பிரச்சினையைக் கிளப்பியுள்ளது.

நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வரின் தூக்குத்தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. பின்னர் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது என்பது தெரிந்ததே.(சி)

## கச்சதீவில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தியாவில் இருந்து அதிகளவான பக்தர்கள் வருகை தந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் முகமாக நேற்று முன்தினம் குறிகாட்டுவான் பகுதிக்கு படையெடுத்திருந்த போதிலும் அவர்களுக்குரிய படகு வசதிகள் அங்கு போதியளவு இல்லாததால் பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியிருந்தனர்.

கச்சதீவு உற்சவத்தில் இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க, கடற்படை அதிகாரிகள், யாழ்.மாவட்ட அருட்தந்தையர் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களுக்கான குடிதண்ணீர் மற்றும் இதர வசதிகளை கடற் படையினர் மேற்கொண்டிருந்தனர். பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (ஓ-16-14)

## மனித..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வேண்டும் என சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் எழுந்துள்ள நிலையில், சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவான முறையில் இந்த விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மனித எச்சங்கள் தொடர்பில் விசாரணைகளை உரிய முறையில் நடத்துவதற்குத் தேவையான சகல வளங்களையும் நிதி உதவிகளையும் சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

## எங்களுக்கும்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டது. வலி.வடக்கில் மக்கள் இன்னமும் மீள்குடியமர அனுமதிக்காததால் நலன்புரி நிலையங்களில் தொடர்ந்தும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும்.

வவுனியாவில் பல தமிழ்க் கிராமங்களின் பெயர்களை படிப்படியாக சிங்களப் பெயர்களாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவற்றைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த இந்தியத் தூதுவர்,எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.-

இந்த முறை அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படும் மிகக் காட்டமான பிரேரணையில் இந்தியா எந்த மாற்றங்களும் செய்யாமல் ஆதரிக்க வேண்டும்- என்றும் சிவில் சமூகத்தின் சார்பில் கோரிக்கை விடப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர் எங்களுக்கும் இதயம் இருக்கிறது. இதற்கு மேல் எதையும் சொல்ல விரும்பவில்லை- என்றார்.

இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பாகவும் அதற்குரிய பயனாளிகள் தொடர்பாகவும் சிவில் சமூகத்தினரால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

வன்னிப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவேண்டிய வீட்டுத்திட்டம் ஆளும் தரப்பு அரசியல்வாதிகளின் அழுத்தம் காரணமாக திசைமாறிச் செல்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது .

அதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர் நீங்களும் வீட்டுத்திட்டத்தில் நேரடியாகப் பங்குபற்ற வேண்டும். தனியே அரச அதிகாரிகள் செய்வார்கள் என்றிருக்க முடியாது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச சபைத் தலைவர்கள் அடிமட்ட மக்களிடம் சென்று உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறியுங்கள்.

இந்திய வீட்டுத்திட்டத்தில் பயனாளிகள் தெரிவில் குளறுபடிகள் இருக்குமாயின், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு அறிவியுங்கள். மக்களிடம் சென்று சரியான தகவலைத் திரட்டி உண்மையான பயனாளி தெரிவுசெய்யப்படுவதை , நீங்களும் இதில் பங்கெடுத்து உறுதிப்படுத்துங்கள்-என்றார். (ஒ-5)

## அரசுக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...'

உறவினர்கள் சிலரும், காணாமற்போனோர்கள் சம்பந்தமான அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலரும் உள்ளடங்குகின்றனர்.

அரச பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் அமர்வு, அரசசார்பற்ற அமைப்புகள் கலந்துகொள்ளும் அமர்வு என ஐ.நா. மனித உரிமைப் பேரவை கூட்டத் தொடரில் இரண்டு பிரிவுகளாக அமர்வுகள் நடைபெறும்.

அதில் அரசசார்பற்ற அமைப்புகளினது அமர்வின்போது அதன் பிரதிநிதிகள் மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு, நாடுகளின் மனித உரிமை நிலவரம் தொடர்பில் விளக்கமளிப்பர். அதன்பொருட்டு அவர்கள் ஆதாரங்களை சமர்ப்பிப்பதுடன் சாட்சிகளையும் முன்னிலைப்படுத்துவர்.

அந்த அடிப்படையில் இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும்போது, சாட்சியங்களாகப் பயன்படுத்தவே காணாமல் போனோரது உறவினர்கள் ஜெனிவாவுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அதற்கான ஏற்பாடுகளை அரசசார்பற்ற நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புகளும் செய்து வருகின்றன. இவர்கள் அடுத்தவாரமளவில் ஜெனிவா நோக்கிப் பயணிப்பர் எனத் தெரியவருகிறது. (சி)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்நாட்டு அரசை நம்பி நடக்கும் போக்கை இந்தியா தவிர்ப்பது எப்போது?

இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன், இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஜே.ஆர்.- ராஜீவ்( இலங்கை - இந்திய) ஒப்பந்தத்தின் பிரகாரம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக நீக்கிவிடுவதற்கான படுபாதகமான செயலுக்கு இப்போதைய அரசு சார்பில் அத்திவாரம் வெட்டுவதற்கான முன்னோட்டம் முகிழ்க்க விடப்பட்டுள்ளது.

ஜே.ஆர்- ராஜீவ் ஒப்பந்தத்தின் பிரதான பெறுபேறாகக் கருதப்பட்ட, வடக்கு- கிழக்கு இணைப்பு மறைந்த அரசின் பதவிக் காலத்திலேயே அதன் துண்டுதலின் பிரகாரம் வழக்கின் மூலம் நீதிமன்றத்தினால் துண்டிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, இப்போது ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாகத் துவம்சம் செய்துவிட அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை, முற்றாக நீக்கிவிட வேண்டும். அதன் பொருட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோஷம் வானைப் பிளக்கும் அளவுக்கு அதிரத் தொடங்கி உள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ் விவகாரம், இப்போது சூடுபிடிக்கத் தொடங்கி உள்ளது.

மாகாணசபைக்கு ஆதரவாக இந்தியா கருத்து வெளியிட்ட பின்பு இப்பிரச்சினை சற்று அடக்கி வாசிக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்டாலும், இப்போது சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் தேவையா, தேவையில்லையா என்பதைத் தீர்மானிக்க நாட்டு மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, 13 ஆவது திருத்தம் தேவையில்லை என்று பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படுமானால் கடந்த 26 வருட கால ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் காலாவதியாகிவிடும். அரசியல் தீர்வுக்கு அடிப்படையாகக் கருதப்படும் மாகாணசபைகள் முறைமையும் இல்லாதுபோய்விடும்.

அரசமைப்புக்கான திருத்தத்தை ஒழிக்க நீதிமன்றம் செல்ல முடியாது. அதற்கு இரு வழிகளே உள்ளன. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் இதனை ஒழித்துக்கட்டலாம். அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் ஆணையைப் பெற்ற பின்பு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரலாம். சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் இந்தச் சிக்கலில் இருந்து தப்பிவிடலாம் என்று அரசு கருதுவது புலப்படுகிறது.

1957 ஜூலை 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்கான தீர்வில் பல முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்டிருந்தது. இனவாதிகளின் எதிர்ப்புக் காரணமாக அது 10 மாதங்கள் கூட நிலைக்கவில்லை. 1958 மே மாதம் அது கிழித்தெறியப்பட்டது. எனினும், அதையொத்த ஒரு தீர்வை நாடாளுமன்றம் மூலம் கொண்டுவர பண்டாரநாயக்கா நடவடிக்கை எடுத்தவேளை 1959 இல் பிக்கு ஒருவரால் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 37 அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வழி செய்யப்பட்டிருந்தது. இந்தியாவின் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களை அடியொற்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று ராஜீவ் காந்தி நம்பினார்.

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு மக்களின் ஒப்புதலைப் பெற வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு தமிழ்மொழிக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து, குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவருதல், இலங்கை இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்குதல், போராளிகள் தமது ஆயுதங்களைக் கையளித்தல், பிரிவினைவாதத்துக்கு இந்தியா ஆதரவு வழங்குவதை நிறுத்தி ஐக்கிய இலங்கைக்கு ஒப்புதல் வழங்குதல் போன்ற பல அம்சங்களை இந்த ஒப்பந்தம் உள்ளடக்கி இருந்தது.

சிங்கள இனவாதிகள் இந்த ஒப்பந்தம் தமிழருக்கு கூடிய சலுகைகளை வழங்குவதாகக் கூறி எதிர்த்தனர். அதேவேளை ஒப்பந்தம் தமிழருக்குப் போதுமான அதிகாரங்களைக் கொடுக்கத் தவறிவிட்டது என்றுதமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். எனினும் இந்த ஒப்பந்தம் 25 வருடங்கள் நீடித்துள்ளது. ஒப்பந்தம் மூலம் மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தால் இதுவும் பண்டா - செல்வா ஒப்பந்தம் போன்று குறுகிய காலத்தில் முடிவுக்கு வந்திருக்கலாம்.

அரசமைப்புக்கான 13.ஆவது திருத்தத்தையும் அதனூடாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபை ஆட்சி முறைமையையும் பாதுகாப்பது இந்தியாவின் கையில்தான் இருக்கிறது. 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தயாராக இருப்பதாக இலங்கை அரசு இந்தியாவுக்கு பல தடவைகள் உறுதியளித்திருந்தது. ஆனால் இது வெறும் வாய்ப்பேச்சோடு நின்றுவிட்டது.

இத்தகைய நிலையில், பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அளித்த வாக்குறுதி விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று மன்மோகன் சிங் இப்போது அழுத்தம் திருத்தமாக கருத்து வெளியிட்டிருக்கிறார்.

சர்வஜன வாக்கெடுப்பு என்பது 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு அரசு செய்யும் பெரும் சூழ்ச்சியாகும். அதனை ஊன்றிக் கவனத்தில் கொண்டு இந்தியா செயற்பட வேண்டும்.

மறைந்த அரசுடனான பேச்சுக்களில், மன்மோகன் சிங் அரசு இதுவரை தளர்வு மற்றும் தளம்பல் நிலையையே கைக்கொண்டது. சாய்ந்தால் சாய்கிற பக்கமே நிலைகொள்ளும் போக்கே நீடித்தது. ஆனால் இனியும் அவ்வாறு இரண்டு தோணியில் கால் வைக்கும் போக்கைத் தூரவீசி, பற்றுறுதியுடன் செயற்பட வேண்டும்.

இலங்கை அரசை ஏன் வீணாகப் பகைத்துக் கொள்ள வேண்டும்; அது அயல் நாடாய்சே என்ற ராஜதந்திரக் கேள்வியுடன் இனியும் இந்தியா இலங்கைத் தமிழர் விவகாரத்தை அணுகக் கூடாது.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் தொடர்பில், இந்நாட்டு அரசை நம்பி நடக்கும் போக்கை இந்தியா தவிர்த்துச் செயற்படுவதே நல்லது. அதன் மாய்மாலங்களை கண்டும் கேட்டும் செயற்பட முனையலாகாது.



# அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.25

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாகவுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களுக்கு உரிய ஆள்சேர்ப்புத் திட்டங்களுக்கேற்ப விண்ணப்பம் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதம செயலாளரின் அனுமதியுடன் அந்தந்த உள்ளூராட்சி சபை செயலாளர் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்று அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைகளில் காணப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் சில ஒன்றிணைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் உள்ளூராட்சி சபைகளில் இருந்து வந்த தூதுவர் பதவி காரியாலய காரியசகாயர் பதவிக்குள்ளும் நூலக தொழிலாளி பதவி வேலை/ வெளிக்கள தொழிலாளி பதவிக்குள்ளும், சுத்திகரிப்பு வேலையாள் அலுவலக தொழிலாளி, சந்தை தொழிலாளி ஆகியன சுகாதார தொழிலாளி பதவிக்குள்ளும் நூலகங்களில் உள்ள நூலக சேவகர் பதவி நூலக பரிசாரகர் பதவிக்குள்ளும் உள்ளடக்கப்படல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உள்ளடக்கப்படுவதால் உள்ளூராட்சி சபைகளின் ஆளணிகளின் எண்ணிக்கை குறைவடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மஹா சண்டி யாக இறுதியும் இலட்சார்ச்சனையும் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.25

மாசி மகத்தை முன்னிட்டு முதன் முதலாக அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில், இலங்கை மற்றும் இந்திய சிவாச்சாரியார்கள் இணைந்து நடத்திவரும் மாபெரும் மஹா சத சண்டி யாகத்தின் இறுதி நாள் ஹேமமும் இலட்சார்ச்சனையும் இன்று இடம்பெறவுள்ளன.

கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி இந்த யாகம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாசி மகத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஹோம வழிபாட்டில் 100 முறை சண்டி பாராயணமும், 10 முறை சண்டி ஹோமமும் காலை மாலை விசேட பூஜை வழிபாடுகளுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று மாசி மகத் தினத்தில் காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இறுதிநாள் பூஜை வழிபாடுகளில் மஹா சத சண்டி யாக பூஜை, ஹோமம், கன்னியா பூஜை, சுமங்கலி பூஜை, பிரம்மசாரி பூஜை, நவசக்தி இலட்சார்ச்சனை என்பன இடம்பெறும்.

மாசி மகத்தை முன்னிட்டு மாலை 5 மணிக்கு அம்பிகை சமுத்திரத்தில் தீர்த்தமாடி மீண்டும் காலை 8 மணிக்கு ஆலயத்தை வந்தடைவார். விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெறும்.

இந்த யாக வழிபாட்டில் அல்வாய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய குருக்கள் சிவபிரம்மஸ்ரீ சி.சுரேஸ்வரக் குருக்கள், லண்டன் ஹரோவ் சித்தி விநாயகர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ நா.அகஸ்தீஸ்வரக் குருக்கள், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ தெ.சண்முகசுந்தரபட்டர் உட்படப் பிரசித்திபெற்ற ஆலயங்களின் குருமார்களும் கலந்து கொள்வர்.

(ம-14)

## கல்கி சிறுவர் இல்ல பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,பெப்.25

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்லச் சிறுவர்களின் சிறுவர் வட்டப் பரிசளிப்பு விழா இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கதை சொல்லுதல், நொடி அவிழ்த்தல், புதிர் ஆக்குதல், விடுகதை சொல்லுதல், செய்து பார்ப்போம், இசையும் அசைவும், பழமொழிகள் கூறுதல், தமிழ், ஆங்கில மொழித்திறன், வினாடிக்கு வினா கேட்டல் போன்ற போட்டிகள் சிறுவர்களுக்கிடையே நடத்தப்பட்டு அதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு இன்று பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

(3)

## விசேட கல்வித் திட்ட வள நிலைய ஏற்பாட்டில் வலிகாமத்தில் ஆற்றுகை

கொழும்புத்துறை,பெப்.25

கொழும்பு திதொற நிறுவனத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் விசேட கல்வித் திட்ட வள நிலைய ஒழுங்கமைப்பில் மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் பங்கு கொள்ளும் நாடக ஆற்றுகை நிகழ்வு வலிகாமம் பகுதியில் இரு இடங்களில் இடம்பெறவுள்ளது.

மாற்று வலுவுள்ள பிள்ளைகளின் செயற்பாட்டை விருத்தி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது என்று திதொற அமைப்பின் இணைப்பாளர் கா.சுரேன் தெரிவித்துள்ளார்.

அளவெட்டி அருணோதயா கல்லூரியில் காலை 9.30 மணி தொடக்கம் 11 மணி வரையும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நண்பகல் 12 மணி தொடக்கம் 1.30 மணி வரையும் ஆற்றுகை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இடம்பெறும் நிகழ்வு கல்லூரி அதிபர் ஞா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக திதொற அமைப்பின் ஸ்தாபகர் கலாசூரி றோகணதேவவும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் விசேட கல்வித் திட்ட அதிகாரி ந.முருகானந்தன், சட்டத்தரணி மதுரநாயகம் ஜொனி, யாழ். திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரி சாந்தினி ஆகியோரும் கலந்து கொள்வர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இடம்பெறும் நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் சி.தனஞ்செயன் தலைமை வகிப்பார்.

திதொற ஸ்தாபகர் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரனும் கலந்து கொள்வர்.

வலிகாமம் பகுதி பாடசாலைகளில் மெல்லக் கற்கும் கல்வித் திட்டத்தில் இணைந்துள்ள விசேட தேவையுடைய மாணவர்கள் முற்றிலும் பங்கு கொள்ளும் வரவேற்பு நடனம், கோலாட்டம், முயல் நடன பாடல், நாடகம் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

(ம-135)

# நலம் அளிக்கும் மாசி மகம்

## இன்று அந்த நன்னாளாகும்

இந்துக்கள் கடைப் பிடிக்கும் விரதங்களில் மாசி மகம் எனும் விரதமும் ஒன்று. மாசி மாதத்தில் வரும் பௌர்ணமியுடன் கேது பகவானின் நட்சத்திரமான மக நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சரிக்கும் காலம் மாசி மகம் என்று அழைக்கப்படுகிறது.

உமாதேவியார், முருகப் பெருமான், மகாவிஷ்ணு ஆகிய மூவருக்கும் மிகவும் உகந்த நாளாக இந்த நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை விட இன்றைய இந்த நாள் பெருவிழாவாக சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதனை 'மாசி மக கடலாடு தீர்த்தம்' என அழைப்பர்.

ஆண்டு தோறும் மாசி மகம் வந்தாலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு பகவான் சிம்ம ராசியில் இருக்கும் போது வரும் மகா மகமே மிகவும் சிறப்பானது. அந்த வகையில் இந்த வருட மாசி மகம் அந்த மகா மகத்துக்கு நிகரான சிறப்பு வாய்ந்தது.

இவ்வாறான இந்த மாசி மகம் பல சிறப்புக்களை கொண்டுள்ளது. பார்வதிதேவி இந்த நாளில் தான் தக்கனின் மகள் தாட்சாயிணியாக அவதரித்தார். அத்துடன் விஷ்ணு பகவான் வராக அவதாரம் எடுத்ததும் இந்த நாளிலேயே, வருண பகவான் தனது பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கிக் கொண்டதும் இந் நாளிலேயாகும். அது மட்டுமன்றி முருகப் பெருமான் பிரணவ உபதேசம் ஈசனுக்கு செய்ததையும் மாசி மக நன்னாளிலேயாகும். இவ்வாறு பல சிறப்புக்கள் இந்த நாளில் இடம்பெற்றிருப்பதை இங்கே காணலாம்.

அது மட்டுமன்றி இந்த நாளில் காலையில் எழுந்து விநாயகரை வணங்கி படித்தால் அறிவு, ஞானம், விருத்தி என்பன ஏற்படும். இந்த நாளில் அன்னதானம் செய்வதாலும் எமக்கு முத்திக்குரிய பயன் கிடைக்குமாம்.

இந்த மகிமையான நாளில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடினால் நாம் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி நற்கதி பெறலாம் எனக் கூறப்படுகிறது. இந்த நாளில் அதிகாலை எழுந்து நீராடி துளசியால் விஷ்ணுவையும், குங்குமத்தால் அம்பிகையையும் வழிபட்டால் மோட்ச நிலை பெறலாம் என்பது ஐதீகம்.

எனவே இந்த நன்னாளில் தீர்த்தங்களில் நீராட முடியாதவர்கள் வீட்டில் நீராடி ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு அனைவரும் இறைவன் கருணை பெற்று நற்கதி அடைவோமாக.

இ.நிஷாந்தன், கிளிநொச்சி.

# அழிவடையும் நிலையில் வவுனியாவின் வீமன்கல் கிராமம் அடிப்படை வசதிகளின்றி அங்கு 9 குடும்பங்கள் மாத்திரமே

## மீளக்குடியமர்ந்தவர்கள் வெளியேறிச் சென்றதால் காணிகள் காடாகி விட்டன

வவுனியா,பெப்.25

வவுனியா, வீமன்கல் கிராமத்தில் அடிப்படைத் தேவைகளுடன் மீள்குடியமர்வு செய்யப்படாமையால் இந்தக் கிராமம் அழிந்து போகும் நிலையில் உள்ளதாக இந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவின் கிழக்குப் பக்கமாக மாமடு என்னும் சிங்களக் கிராமத்துக்கு அண்மையில் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் உள்ள வீமன்கல் கிராமம் சுமார் 250 வருடங்கள் வரலாறு கொண்ட பழைமையான கிராமங்களில் ஒன்றாகும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டமைந்த இந்தக் கிராமம் , 1976 ஆம் ஆண்டில் முதன் முதல் இடம் பெற்ற இனக்கலவரம் காரணமாக இடப்பெயர்வை சந்தித்தது. அந்தக் காலப் பகுதியில் அங்கு வாழ்ந்த 48 குடும்பங்களும் வவுனியா நகரை நோக்கி இடம்பெயர்ந்தனர். பின்னர் 4 வருடங்கள் கழித்து 1980 ஆம் ஆண்டு மீள்குடியமர்ந்த நாம் மீண்டும் 1986 ஆம் ஆண்டு இடப்பெயர்வைச் சந்தித்தோம் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அன்று இடம்பெயர்ந்து 24 வருடங்களின் பின்னர் 2010 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் மீண்டும் மீள்குடியமர்வதற்காக 69 குடும்பங்கள் வருகை தந்திருந்தன. எனினும் அப்போது போதுமான செயன்முறைகள் பின்பற்றப்படாமையினால் பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் இருந்த குடும்பங்கள் மெல்ல மெல்ல மீண்டும் வவுனியா மற்றும் ஏனைய பிரதேசங்களை நோக்கிச் செல்லத் தொடங்கியுள்ளன.

இதனால் தற்போது 9 குடும்பங்கள் மாத்திரமே அங்கு தொடர்ச்சியாக இருந்து வருகின்றன எனவும் அவர்கள் கூறினர்.

எமது கிராமம் வளமானது என்பதால் நாம் மீண்டும் எமது காணிகளை புதுப்பித்து வாழும் நோக்குடன் பலத்த எதிர்பார்ப்புடன் வந்திருந்தோம். எனினும் எமது காணிகள் காடாகக் காட்சியளித்ததனால் துப்புரவு செய்ய வேண்டியேற்பட்டது. எனினும் சிலரது முயற்சியினால் சிறு நிலப்பரப்பு துப்புரவு செய்யப்பட்டது. முழுமையாக எமது காணிகள் துப்புரவு செய்யப்படாமையினாலும் எமது காணிகளுக்குப் பின்னால் காடாக உள்ளமையாலும் நாம் குடியிருக்க முடியாதுள்ளது என அவர்கள் கூறுகின்றனர்.

> அந்தக் காலப் பகுதியில் அங்கு வாழ்ந்த 48 குடும்பங்களும் வவுனியா நகரை நோக்கி இடம்பெயர்ந்தனர். பின்னர் 4 வருடங்கள் கழித்து 1980 ஆம் ஆண்டு மீள்குடியேறிய நாம் மீண்டும் 1986 ஆம் ஆண்டு இடப்பெயர்வைச் சந்தித்தோம்.

பல குடும்பங்களை மீள்குடியமர்த்தும் நோக்குடனேயே இங்கு பாடசாலை கட்டப்பட்ட போதும் அங்கு படிப்பதற்கு மாணவர்கள் இன்மையால் அது மூடப்பட்டுள்ளது. வீட்டுத் திட்டம் தருவதாகவும் அடிப்படை வசதிகள் செய்து தருவதாகவும் நாம் மீள்குடியமர வந்த போது கூறினார்கள். ஆனால் 3 வருடங்களாகியும் இது வரை மலசலகூடமே கட்டித் தரவில்லை. எனவே மக்கள் வசிப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இந்தக் கிராமம்சில ஆண்டுகளில் அழிந்து போய்விடும் எனவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனிடம் கேட்ட போது, வீமன்கல் கிராமத்துக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். அந்த வகையில் மக்கள் மீள்குடியமர்வதற்கான வதற்கான முதல் கட்டப் பணிகளையும் மேற்கொண்டிருந்தோம். குறிப்பாக மக்கள் தமது வீடுகளை அமைப்பதற்கு வீதியோரம் இருந்த காடுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டிருந்தன. எனினும் அங்கு மக்கள் குடியமர்வதில் ஆர்வம் காட்டவில்லை. மக்கள் பலர் மீள் குடியேறுவர் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையிலேயே பாடசாலைக் கட்டடம் கூட கட்டப்பட்டது. எனினும் மக்கள் அங்கு வசிக்காமையால் அந்தப் பாடசாலையும் தற்போது மூடப்பட வேண்டியுள்ளது. மக்கள் மீள் குடியமரும் போது அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனக் கூறினார். (த)

## கடன் உதவிகள்

மன்னார், பெப்.25

மன்னாரில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக சர்வோதய அமைப்பு கடன் உதவித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னாரில் இடம் பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 பெண்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்பட்டது.

இதற்கான காசோலைகளை மன்னார் சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் வழங்கினார். (க-12)



மன்னாரை நோக்கி வந்து கொண்டிருந்த 'கூலர்' வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மன்னார் பாலத்துக்கு அருகிலுள்ள கடல் பகுதியில் தடம் புரண்ட நிலையில் காணப்படுகின்றது. (க-12)

## தும்புத் தொழிற் பயிற்சி நிலையம் யூனியன் குளத்தில்

அக்கராயன்,பெப்.25

கிளிநொச்சி மாவட்டம் யூனியன்குளத்தில் தும்புத் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று செயற்படத் தொடங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் பிரதேசத்திலுள்ள யூனியன்குளத்தில் தும்புத் தொழில் பயிற்சி நிலையம் ஒன்று கடந்த 21 ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

இலங்கை அமெரிக்கன் மிஷன் திருச்சபையால் யூனியன்குளம் கிராமத்தில் ஏற்கனவே 30 பெண்களுக்கு தும்புத் தொழில் பயிற்சி வழங்கப்பட்டு இருந்த நிலையில் இந்த நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது.

யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் சேதமடைந்த கட்டடம் ஒன்று சேவாலங்காவினால் புனரமைக்கப்பட்டு

> 30 பெண்களுக்கு தும்புத் தொழில் பயிற்சி வழங்கப்பட்டு இருந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

பெண்களுக்கான தும்புத் தொழிற்பயிற்சி நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையத்தை யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பொறுப்பான விக்ரோரியா திறந்து வைத்தார்.

யூனியன்குளம் கிராமத்தில் பெருமளவு தென்னை மரங்கள் உள்ளதால் தும்புத் தொழில் மூலமாக பெருமளவு குடும்பங்களின் வாழ்வாதாரம் உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-18)

## பஸ்களின் போட்டியால் அச்சமான மன நிலையில் பயணிகள்

நெளுக்குளம்,பெப்.25

மன்னார் வீதியில் பஸ்கள் போட்டி போட்டுக் கொண்டு ஓடுவதால் மக்கள் அச்சமான மன நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து வேப்பங்குளம், குருமன்காடு, நெளுக்குளம் ஊடாகச் செல்லும் பஸ்கள் போட்டி போட்டு ஓடுகின்றன. இதனால் இந்தப் பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவசர தேவை கருதி பயணிக்கக் காத்திருக்கும் பயணிகள் எனப் பலரையும் ஏற்றாது செல்கின்றன. இவர்களை ஏற்றிச் செல்லும் பஸ்களும் அவசர அவசரமாக அவர்களை ஏற்றுவதிலும், இறக்குவதிலும் ஈடுபடுவதால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதுடன் பயணிகள் அச்சமானதொரு மன நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-402)

## நெளுக்குளம் கலைமகளுக்கு மண்டபம் அமைத்துத் தருமாறு கோரிக்கை

### பஸிலுக்கு பாடசாலை சமூகம் கடிதம்

நெளுக்குளம், பெப்.25

வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் பிரதான மண்டபம் ஒன்றை அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் பாடசாலைச் சமூகத்தினர் இந்த வேண்டுகோளை எழுத்து மூலமாக விடுத்துள்ளனர்.

மாணவர்கள் அனைவரும் ஒன்றுகூடுவதற்கு மண்டப வசதி எதுவும் இந்தப் பாடசாலையில் இல்லாததால் மழை, வெயில் காலங்களில் மாணவர்களும், ஆசிரியர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்தப் பாடசாலையை அண்மித்த சிவபுரம், பாரதிபுரம், கற்பகபுரம், கணேசபுரம், கூமாங்குளம், விநாயகபுரம், நெளுக்குளம், சாம்பல்தோட்டம் ஆகிய கிராமங்களில் அதிகளவான மக்கள் குடியமர்ந்துள்ளனர்.

> இந்தப் பாடசாலையை அண்மித்த சிவபுரம், பாரதிபுரம், கற்பகபுரம், கணேசபுரம், கூமாங்குளம், விநாயகபுரம், நெளுக்குளம், சாம்பல்தோட்டம் ஆகிய கிராமங்களில் அதிகளவான மக்கள் குடியமர்ந்துள்ளனர்.

இதனால் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றார்கள்.

பாடசாலையின் கலாசார நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்துவதற்கும் இவற்றை அனைத்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், கண்டு களிப்பதற்கும் ஏதுவான மண்டப வசதி தற்போது இங்கு இல்லாததால் பெரியதொரு குறைபாடு காணப்படுகின்றது.

ஆகவே இந்தப் பாடசாலையில் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய வகையில் பிரதான மண்டபம் ஒன்றை அமைத்து வழங்குமாறு இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## மதுவரி உத்தியோகத்தர்களின் தேடுதலில் சிக்கிக் கொண்டனர் 15 பேர்

கிளிநொச்சி,பெப்.25

கிளிநொச்சி மாவட்ட மதுவரி நிலையத்தினர் கடந்த வாரம் நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது பலர் சிக்கிக் கொண்டனர்.

இதில் சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த ஒருவரும், அனுமதிப்பத்திரமின்றி வீடுகளில் கள் வைத்திருந்த நால்வரும், 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 10 வர்த்தகர்களும் உள்ளடங்குவர்.

கிளிநொச்சி மாவட்ட மதுவரிநிலையப் பொறுப்பதிகாரி றொகான் சஞ்சேராஜா தலைமையில் சென்ற உத்தியோகத்தர்கள் இங்குள்ள பல இடங்களில் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது இவர்கள் அகப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த வியாழக்கிழமை விசாரணைக்காக எடுக்கப்பட்டன. விசாரணையின் போது எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து கசிப்பு வைத்திருந்தவருக்கும், அனுமதிப் பத்திரமின்றி கள் வைத்திருந்த இருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா வீதமும், கள் வைத்திருந்த மேலும் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

21வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 10 வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## மோ.சைக்கிளில் வந்த இருவரால் பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

வலி. வடக்கு, பெப்.25

தனிமையில் சைக்கிளில் சென்ற பெண்ணிடம் இருந்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை திருடிச் சென்ற சம்பவம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வண்ணார்பண்ணைப் பகுதியில் உள்ள வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்த இருவர் குறிப்பிட்ட பெண்ணின் கழுத்தில் இருந்து தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பெண் சத்தமிட்டதைத் தொடர்ந்து பொது மக்கள் கூடிய போதிலும் திருடர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றமையால் எதுவும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ம-86)

## மதுபோதையில் இடையூறு: ரூ.6 ஆயிரம் அபராதம்

வடமராட்சி, பெப்.25

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் பொது இடம் ஒன்றில் மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அமைதிக்குப் பங்கம் விளைவித்தவருக்கு எதிராக நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து சந்தேக நபரை முற்படுத்தினர்.

வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நிதிநந்தசேகரன் உத்தரவிட்டார். (ம-8)

## ஓட்டோவின் பாகங்கள் சரியாக இன்மையால் சாரதிக்கு அபராதம்

தேய்மானம் அடைந்த ரயர் மற்றும் பிறேக் இன்றி ஓட்டோ செலுத்திச் சென்றமை போன்ற குற்றங்களுக்கான சாரதி ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபா அபராதம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸாரால் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். பழுதடைந்த ரயர், பிறேக் இன்மை ஆகிய இரு குற்றச்சாட்டுகளுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-8)



கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலிக்கிறார். (ம-135)

## கொழும்புத்துறைக்கு பவுசர் குடிதண்ணீர்

கொழும்புத்துறை, பெப்.25

கொழும்புத்துறை எழிலூர், மகேந்திரபுரம் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு பவுசர் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட இடங்களில் தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு யாழ். மாநகர சபையால் பவுசர் மூலம் நிரப்பப்படும் குடிதண்ணீரை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நடவடிக்கையால் அந்தப் பகுதியில் குடி தண்ணீருக்கு நிலவிவந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். (ம-135)

# யாழில் போக்குவரத்து விதிமுறைகளை பலரும் சரியாகப் பின்பற்றுவது இல்லை

### யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவிப்பு

வலி. வடக்கு,பெப். 25

போக்குவரத்து விதிமுறைகளை யாழ்ப்பாணத்தில் மிகப் பலரும் சரியான முறையில் பின்பற்றுவதில்லை. இதனை நான் நேரில் அவதானித்துள்ளேன்.

கொழும்பில் இருந்து விசேடமாக போக்குவரத்து பயிற்சி பெற்ற பொலிஸாரை இங்கு அழைத்து போக்குவரத்து சம்பந்தமான பயிற்சிகளையும் மற்றும் விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டப் பிரதிப் பெலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன. ஊடகவியலாளர்களுட னான வாராந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

**போக்குவரத்து தொடர்பான சோதனைகளை மிகவும் இறுக்கமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.**

நான் பொலிஸ் சேவையில் இணைந்த காலம் தொடக்கம் ஊடகவியலாளர்களுடன் நல்லுறவைப் பேணி வருகின்றேன்.

நான் பொலிஸ் சேவையில் முப்பது ஆண்டுகால சேவையை நிறைவு செய்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று தற்போது வந்துள்ளேன்.

நான் எனது கடமைக் காலத்தில் யாருக்கும் பயப்படவில்லை. அதே போன்றே ஊடகவியலாளர்களையும் பார்க்கிறேன். உண்மையாகவும் நேர்மையாகவும் செயல்பட்டால் எவருக்கும் பயப்படத் தேவையில்லை. போக்குவரத்து தொடர்பான சோதனைகளை மிகவும் இறுக்கமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

மக்கள் வாழும் பகுதிகளில் ஆபத்தை உண்டாக்கக் கூடிய இடங்கள் உள்ளன. இது சம்பந்தமாக எமக்குத் தகவல் தரும் சந்தர்ப்பத்தில் ஆபத்தை உண்டாக்கக் கூடிய விடயத்தில் கவனம் எடுப்பதுடன் அதனை அகற்றவும் பாதுகாப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சிங்கப்பூரில் ஓர் இனிப்புக் கடதாசி என்றாலும் அதைக் குப்பைக் கூடைக்குள் போடுகின்றனர். ஆனால் இங்கு மூடைக் கணக்கில் கழிவுகளை வீதிகளில் போட்டு விட்டுப் போகிறார்கள். இந்த விடயத்தில் பெரும் கவனம் எடுக்கப்படும். யாழ்ப்பாணத்து சூழல் தொடர்பாக மிகுந்த கவனம் எடுக்கப்படும்.

ஊடகம் நாட்டுக்கு நல்லதையும் செய்கின்றது கெட்டதையும் செய்கின்றது. எந்தச் செய்தியைப் பிரசுரிப்பதாக இருந்தாலும் மக்களது மனங்களைக் குழப்பாத வகையில் பிரசுரிக்க வேண்டும்.

பொலிஸார் எத்தனையோ பயன்மிக்க செயற்பாடுகளை மேற்கொண்டாலும் அது குறித்து ஊடகங்கள் கவனம் எடுப்பது இல்லை. மாறாக ஒரு சில பொலிஸார் விடும் தவறுகளை மட்டும் பெரிதுபடுத்திச் சுட்டிக்காட்டுகின்றன.

எத்தகைய பிரச்சினையாக இருந்தாலும் என்னுடன் தொடர்பு கொண்டு கேட்க முடியும். எனவே செய்திகளைப் பிரசுரிப்பதற்கு முன்னர் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திப் பிரசுரியுங்கள்.- என்றார். (ம-86)

## போதையூட்டப்பட்ட புகையிலைத் தூள் கடத்திய இருவருக்கும் விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,பெப்.25

இந்தியாவில் இருந்து கடல் வழியாகச் சட்டவிரோதமாக போதையூட்டப்பட்ட புகையிலைத் தூள் பைக்கற்றுக்களை இலங்கைக்கு கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

**புங்குடுதீவு கடற் பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் இருவரை கடற்படையினர் கைது செய்தனர்.**

இந்தியாவிலிருந்து படகில் புங்குடுதீவை அடையும் தறுவாயில் புங்குடுதீவு கடற்பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் இருவரை கடற்படையினர் சோதனை செய்தனர்.அதன்போதே அவர்களது படகில் புகையிலைத்தூள் பைக்கற்றுக்கள் இருந்தமை கண்டறியப்பட்டது.

அதனை மீட்டதோடு சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அந்தப் பைக்கற்றுக்களை பரிசோதனை செய்த போது அவை போதையூட்டப்பட்ட புகையிலைத்தூள் என்பது உறுதிப்படுத்தப்பட்டன. அவை பல இலட்சம் ரூபா பெறுமதியுடைய வை.

சந்தேக நபர்கள் பூநகரி வலைப்பாடு மற்றும் கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த சகோதர இனத்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களது படகிலிருந்து 80 கிராம் நிறையுடைய போதையூட்டப்பட்ட புகையிலைத்தூள் பைக்கற்றுக்கள் 8 ஆயிரத்து 402, 40 கிராம் நிறையுடைய பைக்கற்றுகள் ஆயிரத்து 53 என்பன மீட்கப்பட்டன.

அவை அனைத்தும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதோடு சந்தேகநபர்களும் முன்னிலைப் படுத்தப்பட்டனர். அதன் போதே இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ம-4)

## மந்திகை சந்தைக் கட்டட வேலைக்கு மேலும் 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

வடமராட்சி, பெப்.25

ஒரு சில ஆண்டுகளாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மந்திகை பொதுச் சந்தைக் கட்டட வேலைகள் மீண்டும் சுமார் 2கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன. புதிதாக நவீன சந்தை ஒன்றைக் கட்டுவதற்காக கடந்த 2008 ஆம் ஆண்டு அத்திபாரக் கல் நடப்பட்டு சந்தைக் கட்டடப் பணிகள் நடைபெற்று வந்தன.

இந்த நிலையில் புதிய சந்தைக் கட்டடம் பொதுச்சந்தைக்கு எதிரே உள்ள தனியார் காணியில் ஏற்படுத்தப்பட்ட தற்காலிக கொட்டகையில் இயங்கி வந்தது.

போதிய நிதி வசதிகள் இன்மையால் புதிய சந்தைக் கட்டடம் தளக் கட்டட-அரைகுறை வேலைகளுடன் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

இடை நிறுத்தப்பட்ட கட்டடப் பணி தொடராத நிலையில், கொட்டகையில் வசதிகளற்ற நிலையில் தம்மால் வியாபாரம் செய்ய முடியாது என வியாபாரிகள் தெரிவிதிருந்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்ற பருத்தித்துறை பிரதேச சபை, அரைகுறையாக இருந்த சந்தைக் கட்டடத்தில் சந்தை வியாபாரத்தை நடத்துமாறு அனுமதி வழங்கி அவர்களுக்குரிய இடங்களையும் ஒதுக்கிக் கொடுத்தது.

இந்த நிலையில் இரண்டு வருடங்களுக்கு மேலாக மந்திகை பொதுச் சந்தை அரைகுறைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.

தற்போது இந்த மாடிக் கட்டடத்தைப் பூர்த்தி செய்ய நெல்சிப் நிறுவனம் சுமார் 2 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. நிதி கிடைக்கப்பெற்றால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது சந்தைக்கு எதிரே உள்ள தனியார் காணியில் மீண்டும் தற்காலிக சந்தை அமைக்க பருத்தித்துறை பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது. (ம-8)

## தீவிரவாதிகள் இருவர் அஸாமில் கைது

டில்லி, பெப்.25

போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி அமைப்பைச் சேர்ந்த இரண்டு பயங்கரவாதிகள் அஸாமில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

உதால்குரி மாவட் டத்தில், கலைகான் பொலிஸ் நிலையப் பகுதியிதில் அமைந்துள்ள சஸ்த்ரபாரா கிராமத்தில் இரண்டு தீவிரவாதிகள் பதுங்கியிருப்ப தாகக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து அங்கு இராணுவத்தினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை தேடுதல் வேட்டை நடத்தினர். அதையடுத்து, அந்த கிராமத்தில் பதுங்கி யிருந்த என்.டி.எஃப்.பி.ஆர். அமைப்பைச் சேர்ந்த இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து இரண்டு துப்பாக்கிகள், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஒரு கையெறி குண்டு, 8 கையடக்கத் தொலைபேசிகள், வெடிப்பொருள்கள் மற்றும் சில ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய் யப்பட்டுள்ள தீவிரவாதிகள் துவிதன் போரோ மற்றும் ரஜனி பாசுமதாரி என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். (வ)



ஹைதராபாத்தில் குண்டு வெடித்த இடத்தை பார்வையிட்டார் பிரதமர் மன்மோகன் சிங். அவருடன் அந்த மாநில ஆளுநர் இ.எஸ்.எல். நரசிங்கம், முதலமைச்சர் கிரண் குமார் ரெட்டி ஆகியோர் கலந்துரையாடுகின்றனர்.

## காஷ்மீரில் பாதுகாப்பை அதிகரியுங்கள்

### தளபதி பிக்ரம் சிங் அறிவுறுத்து



ஜம்மு, பெப்.25

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பை மேம்படுத்துமாறு அறிவுறுத்தி உள்ளார் இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் பிக்ரம் சிங்.

இராணுவத் தளபதி நேற்று முன்தினம் ஜம்மு காஷ்மீர் மாநிலம் சென்றிருந்தார். அங்கு காலநிலை மிக மோசமாக இருந்ததால், விமானப் பயணத்தை ரத்து செய்து விட்டு வீதி வழியாக உதாம்பூர் சென்றார்.

வடக்கு கட்டளை தலைமையகமான உதாம்பூரில், அந்தப்பகுதி மூத்த தளபதிகளை அவர் சந்தித்தார். அப்போது தற்போதைய, மாநிலத்தின் பாதுகாப்பு நிலைமைகளையும், இராணுவத்தின் உஷார் நிலை குறித்தும் பாராட்டுத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக அங்கு தீவிரவாதிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளை பாராட்டிய அவர், மேலும் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் தீவிரப்படுத்த கேட்டுக்கொண்டார். (வ)

# நேபாளத்துக்கு தப்ப முயன்ற இருவர் பீகார் எல்லையில் மடக்கிப் பிடிப்பு

## ஹைதராபாத் குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகம்

ஹைதராபாத், பெப்.25

ஹைதராபாத் இரட்டைக் குண்டுவெடிப்பில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக் கப்படும் இருவர் பீகார் வழியே நேபாளத்துக்கு தப்ப முயன்றபோது சிக்கியுள்ளனர். அவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்ட புகைப் படங்கள் மூலம் மும்பை யைப் போல் ஹைதராபாத்திலும் ஒரு தொடர் குண்டு வெடிப்புக்கு சதித் திட்டம் தீட்டியிருந்தனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஹைதராபாத் இரட்டை குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஈடுபட்டோரைப் பிடிக்க தேசியப் புலனாய்வு முகா மையகம் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டிருக்கிறது.

சந்தேக நபர்கள் நாட்டை விட்டு எந்த வழியிலும் தப்பி சென்று விடாதபடி அனைத்து பகுதிகளுக்கும் எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பீகார் மாநிலத்தின் ரக்ஸுல் எல்லையில் தரைவழியே நேபாளத் துக்குள் செல்ல முயன்ற முகமது அப்துல்லா ஓமன் என்ற சோமாலிய நாட்டவரையும் முகமது ஆலம் என்ற பீகாரியும் தடுத்து நிறுத்தப்பட்டனர். இருவரும் ஹைதராபாத்தில் இருந்து தாங்கள் வருவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்களிடம் தீவிர விசாரணை நடத் தப்பட்டது.

சோமாலியாவைச் சேர்ந்த ஓமன், ஜேர்மனியில் அகதியாக தஞ்சமடைந்து அந்த நாட்டு குடியுரிமை பெற்றிருக்கிறார். அவரிடம் பிரான்ஸ் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் கைவசம் இருந்தன.

ஓமன் கடந்த ஜனவரி மாதம் காத்மண்டு வந்து அங்கிருந்து இந்தி யாவுக்குள் நுழைந்திருக் கிறார். ஆனால் இந்தியாவுக்குள் பயணம் செய்வதற்கான உரிய விசா எதுவும் அவரிடம் இல்லை. மற்றொரு நபரான முகமது ஆலம் என்ற 25 வயது இளைஞர் பீகாரைச் சேர்ந்தவர்.

அவர் ஹைதராபாத்தில் அப்துல் ஓமர் டிராவல்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். அவரிடம் இருந்த அனுமதிப்பத்திர முகவரி போலியானது என்பதும் தெரியவந்துள்ளது. அவர்கள் என்ன காரணத்துக்காக ஹைதராபாத்தைவிட்டு வெளியேறி பீகார் எல்லையில் தரைவழியே நேபாளத்துக்குச் செல்ல முயன்றனர் என்ற தகவலைத் தெரிவிக்கவில்லை.

ஆனால் அவர்களிடம் நாட்டின் மிக முக்கியமான ரயில் நிலையங்களில் ஒன்றான ஆந்திர மாநிலத்தின் செகந்திராபாத் நிலையத்தை பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகள், புகைப்படங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

தற்போது பீகார் பொலிஸாரிடம் இருவரும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் செகந்திராபாத் ரயில் நிலையத்தில் நாச வேலைக்கான சதித் திட்டத்தில் ஈடுபட்டிருந்தனரா? அல்லது சதித் திட்டத்துக்கு உடந்தையாக குறித்த புகைப்படங்களையும் வீடியோக்களையும் எடுத்துச் சென்றனரா? என்பது குறித்து தீவிர விசாரணை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

ஹைதராபாத்தில் உள்ள சாய்பாபா கோயிலில் முதலில் குண்டுவைக்க சதிகாரர்கள் திட்டம் தீட்டியதாக கூறப்பட்டது. ஆனால் அங்கு பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் வந்ததால் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை என்று கூறப்பட்டது. தற் போது செகந்திராபாத் ரயில் நிலைய காட்சிகளை சந்தேகநபர்கள் படம் பிடித்திருக்கின்றனர்.

இதனால் 1993 ஆம் ஆண்டு மும்பை குண்டுவெடிப்பு போல ஹைதராபாத்தில் ஒரு தொடர் குண்டுவெடிப்புக்கு திட்டம் தீட்டப்பட்டதா? அல்லது தொடர் குண்டுவெடிப்புக்கு சதி தீட்டப்படுகிறதா? என்பது பற்றியும் தேசிய புலனாய்வு முகாமையகம் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகிறது. (வ)

## ஹைதராபாத்தில் இயல்பு நிலை

தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்ற ஹைத ராபாத் தில்சுக் நகரில் நேற்று முன்தினம் இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது.

ஆந்திராவில் ஹைதராபாத் விஜயவாடா நெடுஞ்சாலைகளை இணைக்கும் தில்சுக் நகரில் கடந்த 21 ஆம் திகதி இரவு இரட்டை குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. அதில் 16 பேர் உயிரிழந்தனர், 119 பேர் காயம் அடைந்தனர். தில்சுக் நகரில் மாநில மற்றும் மத்திய பொலிஸார் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடு பட்டுள்ளனர். அங்கு நேற்று முன்தினம் இயல்பு நிலை திரும்பியது. கடைகள், வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்டன. வாகனங்களும் வழக்கம் போல் சேவையில் ஈடுபட்டன. (வ)

## காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு மூடப்பட்டது நெடுஞ்சாலை



ஸ்ரீநகர், பெப்.25

ஜம்மு காஷ்மீரில் பனிப்பொழிவு கடுமையாக இருப்பதால், ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக மூடப்பட்டது.

உயரமான மலைப் பகுதியில் பனிச்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. ஜம்மு காஷ்மீரில் தற்போது இரண்டாம் கட்டமாக கடும் பனிப் பொழிவு ஆரம்பமாகியுள்ளது. பகல்காம், குப்வாரா, கோகர்நாக், குல்மார்க் போன்ற இடங்களில் மலை போல் பனிப்படலங்கள் குவிந்து கிடக் கின்றன. கிராமப்புற சாலைகள் எல்லாம் பனியால் மூடப் பட்டுவிட்டன.

294 கி.மீ. நீளமுள்ள ஜம்முஸ்ரீநகர் தேசிய நெடுஞ் சாலை நேற்று முன்தினம் இரண்டாம் நாளாக மூடப்பட்டது. எல்லை வீதிகள் இயக்கத்தினரால், வீதியில் குவிந்துள்ள பனி முழுவளதையும் அகற்ற முடியவில்லை. (வ)

## கைதி வரைந்த ஹசாரே ஓவியம் இருபது ஆயிரம் ரூபாவுக்கு ஏலம்

டில்லி, பெப்.25

திகார் சிறையில் லங்கேஸ்வரன் என்ற கைதி வரைந்த அன்னா ஹசாரே ஓவியம் 20 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாகியுள்ளது. ஊழலுக்கெதிராக போராட்டம் நடத்திய சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே 2011 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 3 தினங்கள் திகார் சிறையில் அடைக்கப் பட்டபோது, கொலை வழக்குத் தொடர்பாக திகார் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் லங்கேஸ்வரன்(வயது 51) என்ற கைதி ஹசாரேயைச் சந்தித்து ஆசி பெற்றார்.

அந்தச் சந்திப்புக்குப் பின் னர், அன்னா ஹசாரேவின் உருவத்தை 'எண்ணெய் பெயிண்ட்' கொண்டு தத்ரூப ஓவியமாக லங்கேஸ்வரன் தீட்டினார்.

இந்தநிலையில் அந்த ஓவியத்தை வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் 20 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கியுள்ளதாக திகார் சிறை அதி காரிகள் தெரிவித்தனர்.

திகார் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் ஆயுள் கைதிகளுக்கு பல்வேறு கலைகளில் பயிற்சி அளிக்கப் படுகிறது. அவ்வகையில் ஓவியக் கல் லூரிகளைச் சேர்ந்த 20 ஆசிரியர்கள் திகார் சிறை வாசிகளுக்கு பயிற்சி அளித் தனர். அவர்களிடம் பயிற்சி பெற்ற 30 கைதிகளில் லங் கேஸ் வரனும் ஒருவர். அங்குள்ள கைதிகள் தீட்டும் ஓவியங்கள், டில் லியில் உள்ள நட்சத்திர விடுதிகள், பெரிய வணிக வளாகங்கள் ஆகியவற்றில் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன.

இதுபோல் லங்கேஸ் வரன் வரைந்து விற்பனைக்கு வந்த அன்னா ஹசாரேவின் ஓவியம் தான் ரூ.20 ஆயிரத்துக்கு விற்ப னையாகியுள்ளது. (வ)

## முக்கிய தடயங்கள் சிக்கின 15 பிரிவுகளில் விசாரணை

### ஆந்திர உள்துறை அமைச்சர் தகவல்



ஹைதராபாத், பெப்.25

ஹைதராபாத் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து முக்கியமான தடயங்கள் கிடைத்துள்ளன; புலன் விசாரணையை துரிதப்ப டுத்த 15 சிறப்பு படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே குற்றவாளிகள் விரைவில் பிடிபடுவார்கள் என்று ஆந்திர உள்துறை அமைச்சர் பி. சபீதா இந்திரா ரெட்டி தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மாநில தலைமைச் செயலகத்தில் முதல்வர் கிரண்குமார் ரெட்டி தலைமையில் உயர்நிலைக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர்கள், அரசு உயரதிகாரிகள், பொலிஸ் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

அதன்பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் சபீதா கூறுகையில்:

குண்டு வெடிப்பு தொடர்பாக முக்கிய தடயங்கள் கிடைத்துள்ளன. எனவே இதில் தொடர்புடைய குற்ற வாளிகளை விரைவில் கண்டு பிடிப்போம்.

இதுதொடர்பாக விசாரிக்க 15 சிறப்புப் பொலிஸ் படைகள் அமைக் கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் வெவ்வேறு பிரிவுகளில் நிபுணத்துவம் பெற்ற 10 - 15 பொலிஸார் இடம்பெற்றுள்ளனர் - என்றார். (வ)

# அமெரிக்காவில் அணுக் கசிவு

## மக்கள் மத்தியில் பெரும் பதற்றம்

வோஷிங்டன், பெப்.25
அமெரிக்காவில் அணு உலைக் கழிவுகளில் இருந்து கசிவு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதையடுத்து மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வோஷிங்டன் மாகாணத்தில் ஹன்போர்ட் அணு உலை 1943 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. உலகில் முதல் முறையாக அணு ஆயுதத்துக்கான புளுட்டோனியம் அந்த அணு உலையில்தான் உற்பத்தி செய்யப்பட்டது. அங்கு தயாரிக்கப்பட்ட புளுட்டோனியம் மூலமே அணு குண்டுகள் தயாரிக்கப்பட்டு ஜப்பான் மீது வீசப்பட்டன. எனினும் ஹன்போர்ட் அணு உலையின் செயற்பாடுகள் 1989 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டன.



அங்கிருந்த கதிர்வீச்சை ஏற்படுத்தக்கூடிய பல மில்லியன் லீற்றர் அணுக் கழிவுகள் 200இக்கும் மேற்பட்ட கலன்களில் பூமிக்கடியில் புதைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றில் 6 கலன்களில் இருந்தே அணுக் கதிர் கசிவு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆண்டு ஒன்றுக்கு ஆயிரத்து 136 லீற்றர் அணுக் கழிவு வெளியே கசிவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய அளவில் கதிர்வீச்சு காணப்படாது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ள போதும், மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து அந்தப் பிரதேசங்களில் காணப்படும் அணுக்கதிர் வீச்சை அளவிடும் பணிகளை பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.(ற)

# அதிநவீன எப்–35 விமானத்தின் பயன்பாட்டை நிறுத்தியது அமெ.

வோஷிங்டன், பெப்.25
அமெரிக்கா அதி நவீன எப்-35 ரக போர் விமானங்களைப் பயன்பாட்டில் இருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. விமானத்தின் இயந்திரத் தகடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே அவற்றின் பயன்பாடு நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிரச்சினை முற்றாக சரி செய்யப்படும் வரை விமானங்கள் மீண்டும் இயக்கப்படமாட்டாஎன்று பென்டகன் தெரிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் கடற்படையினரின் பயன்பாட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட எப்-35 ரக விமானமொன்றின் எரிபொருள் குழாய் அமைப்புடன் தொடர்புடைய உற்பத்தியில் செய்யப்பட்ட தவறு கண்டறியப்பட்டது. அதன் பிறகு அந்த வகை விமானங்கள் பயன்படுத் தப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட எப்-35 விமானங்கள் அதிக திறனுள்ள ராடார் வசதிகளைக் கொண்டதுடன், எதிரிகளின் கண்ணில் படாமல் இருக்கக் கூடிய 'ஸ்டில்த்' தொழில்நுட்பம் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளன. அத்துடன் கடற்படைக்காகத் தயாரிக்கப்படும் எப்-35 விமானங்கள், செங்குத்தாக ஓர் இடத்தில் தரையிறக்கக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

# எகிப்தில் தேர்தல் ஏப்ரலில்

கெய்ரோ, பெப்.25
எகிப்தின் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் ஜூன் வரை நான்கு கட்டங்களாக நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதுகுறித்த அறிவிப்பை எகிப்து ஜனாதிபதி முகமது மூர்சி வெளியிட்டார்.

போதுமான அளவில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இல்லாத காரணத்தால் 4 கட்டங்களாக தேர்தல் நடைபெறும். புதிய உறுப்பினர்களுடன் கூடிய நாடாளுமன்ற கூட்டம் ஜூலை 6ஆம் திகதி ஆரம்பமாகும்- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எகிப்தில் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட பிறகு முதன் முறையாக நடத்தப்படும் தேர்தல் இதுவாகும்.

எகிப்தில் இரு பிரிவினரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ள நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசின் இஸ்லாமிய ஆதரவு கொள்கைக்கு ஒரு பிரிவினர் ஆதரவாகவும் மற்றொரு பிரிவினர் எதிராகவும் செயல்படுவதால் அங்கு அரசியல் நெருக்கடி நிலவுகிறது.

தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், தேர்தலை புறக்கணிக்கப் போவதாக மதச்சார்பற்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ள எதிர்தரப்பினர் அறிவித் துள்ளனர். தேர்தல் வெளிப்படையாக நடைபெற வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கையாகும். (ற)

# தென்கொரியாவில் கூட்டுப் பயிற்சி; உடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்

## அமெரிக்காவை எச்சரிக்கிறது வடகொரியா

பியாங்யாங், பெப்.25
தென்கொரியாவுடன் இணைந்து கூட்டுப் பயிற்சிகளை நடத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் கொரிய தீபகற்பப் பகுதியில் தேவையற்ற குழப்பங்களை உருவாக்கும் - இவ்வாறு அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது வடகொரியா.

இந்த விடயம் குறித்து தென்கொரியாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளபதி ஜேம்ஸ் துர்மனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய - அமெரிக்க கூட்டுப் பயிற்சிகளுக்கு வடகொரியா கண்டனங்கள் தெரிவித்துவந்த போதிலும் நேரடியாக அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுப்பது இதுவே முதல்முறையாகும்.

அமெரிக்காவும், தென்கொரியாவும் அடுத்த மாதம் வருடாந்த போர் பயிற்சியை (போல் ஈகிள்) நடத்தப் போவதாக அறிவித்துள்ளன. அதை அடுத்தே வடகொரியா இவ்வாறு கடும்தொனியில் கருத்து வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வடகொரியா கூறியிருப்பதாவது:-

வடகொரியா மீதான விரோத மனப்பான்மை காரணமாகவே இவ்வாறான கூட்டுப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இவை போன்ற பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே கடந்த 12ஆம் திகதி அணு ஆயுத சோதனை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சிகளை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும். இதுவே பிராந்திய அமைதிக்கு வழிவகுக்கும்- என்று தெரிவித்திருக்கிறது.

கொரிய தீபகற்பப் பகுதியில் அமெரிக்கா 28 ஆயிரம் படைவீரர்களை நிலை நிறுத்தியுள்ளதுடன், தென்கொரியாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறது. (ற)

# 400 குழந்தைகளை ஆற்றில் வீசிய பெண்



லண்டன், பெப்.25
பிரிட்டன் தேசிய ஆவணகாப்பகம், கடந்த 1,770 முதல் 1934 ஆம் ஆண்டுகளில் நடந்த 25 இலட்சம் கொடுங் குற்றச்செயல்கள் குறித்த ஆவணங்களை இணைய தளத்தில் வெளியிட்டது.

அதில் அமீலியா டயர் என்ற பெண் மிக கொடூரமான இரக்கமற்ற கொலைகாரி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 58 வயதான அமீலியா டயர் தாதியாகப் பணிபுரிந்தாள். திருமணத்துக்கு முன்பே தாயாகும் பெண்கள் தங்கள் குழந்தைகளை இவளிடம் கொடுத்து பராமரித்து வந்தனர். அதற்காக அவளுக்கு பணமும் கொடுத்தனர்.

அந்தக் குழந்தைகளை வசதி படைத்த தம்பதியிடம் தத்து கொடுத்து வளர்ப்பதாக உறுதி அளித்தாள். அதை நம்பி தங்கள் குழந்தைகளை அவளிடம் ஒப்படைத்து வந்தனர். ஆனால், அமீலியா அந்தக் குழந்தைகளை தேம்ஸ் ஆற்றில் வீசி கொலை செய்துள்ளார். அமீலியா இவ்வாறு ஏறத்தாழ 400 குழந்தைகளைக் கொலை செய்தாள்.

கைது செய்யப்பட்ட அமீலியா 1896ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டாள் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



வடக்கு ஏதென்ஸில் பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வீதிகள் எங்கும் வெள்ளம் கரைபுரண்டு பாய்கிறது. வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்படும் பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியில் ஒருவர்.

# சிக்குன்குனியாவுக்கு தடுப்பு மருந்து தயார்

நியூயோர்க், பெப்.25
புதுவகையான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சிக்குன்குனியா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு மருந்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸின் மார்சேல் நகரில் உள்ள வைரஸ் துறையின் ஆராய்ச்சியாளர்கள், சிட்னி பல்கலைக்கழகத்துடன் கூட்டாக இணைந்து இதை உருவாக்கி உள்ளனர். இந்த மருந்து, சிக்குன் குனியா நோய்க்குக் காரணமான வைரஸ் பெருகுவதைத் தடுக்க உதவும். கடந்த 10ஆண்டுகளில் சிக்குன்குனியாவால் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# சாட் இராணுவம் மாலியில் அதிரடி

## வாகனத் தொடரணி நிர்மூலம்: 65 தீவிரவாதிகள் சாவு

பாமகா, பெப்.25
மாலியில் சாட் இராணுவம் தீவிரவாதிகளின் வாகனத் தொடரணி மீது மேற் கொண்ட அதிரடித் தாக்குதலில் 65 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். இராணுவத்தினரின் தரப்பில் 13 வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தகவலை மாலியில் உள்ள சாட் படைகளின் கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கு மாலியில் இபோகாஸ் மலைப்பகுதியில் இடம்பெற்ற நேரடி மோதலில் 65 இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர். அதே வேளை, இராணுவத் தரப்பில் 13 படைவீரர்கள் உயிரிழந்ததுடன் 5 பேர் காயமடைந்துள்ளனர். கிளர்ச்சியாளர்களில் 5 வாகனங்களை சாட் இராணுவம் தாக்கி அழித்தது- என்றார்.

மாலியில் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் அரசின் நடவடிக்கைக்குத் துணையாக பிரான்ஸ் படைகள் களமிறங்கியுள்ளனர். அவர்களுடன் மாலிக்கு அருகில் உள்ள சாட் நாடும் தனது படைகளை அனுப்பியுள்ளது.

இதேவேளை, தீவிரவாதிகள் மீதான தாக்குதலை இலகுவாக்கும் பொருட்டு அமெரிக்கா தனது உளவு விமானங்களை கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பகுதிக்கு நகர்த்தியுள்ளது என்று கூறப்படுகிறது. (ற)

# புதிதாக 16 அணுமின் நிலைய இடங்களை தெரிவு செய்தது ஈரான்

தெஹ்ரான், பெப்.25
அணுமின் நிலையங்களை அமைப்பதற்காக 16 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்று ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தநாட்டு அரச ஊடகம் வெளியிட்ட தகவல் குறிப்பில்-

அடுத்த 15 ஆண்டுகளில் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஈரான் திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக அணு மின் நிலையங்களை அமைப்பதற்காக நாடு முழுவதும் 16 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அடுத்த 15 ஆண்டுகளில் 20 பெரிய மின் நிலையங்கள் அவசியமாகின்றன. தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் ஈரானின் அணு சக்தி அமைப்பு ஆய்வுகளை முடித்துள்ளது. நிலநடுக்கம் மற்றும் இராணுவத் தாக்குதல்களால் பாதிக்கப்படாத வகையில் அணு மின் நிலையங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன-என்றுள்ளது.

அதேவேளை, யுரேனியம் கிடைக்கும் புதிய பகுதிகளைக் கண்டறிந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் மூலம், அந்தநாட்டின் யுரேனியக் கையிருப்பு 4 ஆயிரத்து 400 தொன்களாக உயரும் என்று கூறப்படுகிறது. (ற)

# மரண அறிவித்தல்

## பிரம்ம ஸ்ரீ சதாசிவக்குருக்கள்

(பிரதம குருக்கள், திருநெல்வேலி சிவன்கோயில்)



கல்வியங்காட்டைப் பிறப் பிட மாகவும் திருநெல்வேலி சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நீலாயதாஷி அம்பாள் சமேத காயாரோகணேஸ்வரர் கோயில் பிரதம குருக்கள் (திரு நெல்வேலி சிவன்கோயில்) பிரம்ம ஸ்ரீ சதாசிவக்குருக்கள் நேற்று (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறு திக் கிரியைகள்கல்வி யங்காடு இலங்கை நாயகிஅம்மன் கோயி லடியில் உள்ள அவ ரது இல்லத்தில் நேற்று (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன என் பதனை அறியத்தரு கின்றோம்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**குடும்பத்தினர்.**

இலங்கைநாயகி அம்மன் கோயிலடி,
கல்வியங்காடு.

(33786) (45.6.7)

**விற்பனைக்கு**

GZ-xxxx தொ I இலக்கமுடைய CD125T Benly இன மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொ ர்பு:0772719178 (33553)(4,5,6,7)

# மரண அறிவித்தல்

## செபஸ்ரியாம்பிள்ளைஅந்தோனிப்பிள்ளை



இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கடந்த வியாழக்கிழமை (21.02. 2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை-சூசானம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-மரியப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், லூர்து மேரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான டெயிசி, ஜெயா மற்றும் றஞ்சன் (கனடா), வசந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கீர்த்திசிங்கம் (ஜேர்மன்), சுதாமதி (கனடா), ஜெய்சி (இத்தாலி) ஆகியோரின் மாமனும், சுபோ (லண்டன்), சுஜித் (ஜேர்மனி), சுஜா (லண்டன்), சுகி (லண்டன்), நிவேதா ஒனேலா (கனடா), சோனியா, செலிடன் (இத்தாலி) ஆகியோரின் பேர னும், மக்சல், மரிசிந்தன், சுவோகா (ஜேர்மனி), ஜெறோம், றெகான், சுகான் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான மரியப்பிள்ளை (சீனி), சுவாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை எலிசம்மா, அந்தோனிப்பிள்ளை, அக்கினேஸ் அம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (26.02.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு அன்னாள் ஆலயத் திருப்பலியின் பின் அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனந்தாவத்தை,
இளவாலை.

தகவல்:
மனைவி (லூர்துமேரி)

(33780) (10,6,7)

## பாம்பு தீண்டி சிறுவன் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,பெப்.25

மேய்ச்சலுக்கு கட்டுவதற்காக மாடொன்றுடன் சென்ற சிறுவனை புல் வெளிக்குள் மறைந்திருந்த பாம்பு கடித்தது.

நேற்று வரணி கரம்பைக் குறிச்சியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவரும் வரணி மகா வித்தியாலய மாணவனுமான விக்கினேஸ்வரன் டினோஜன் (வயது-15) என்ற சிறுவனையே பாம்பு தீண்டியுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25.09.1953 | உதிர்வு 11.03.2009

திதி: பூரணை



## இராசரத்தினம் யசோதரன்

பாசமுள்ள அப்பாவே!
நீங்கள் - மறைந்து
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
மாறாது - உங்கள் பசுமை நினைவுகள்
வாழ்க்கைப் பயணமதில் உங்களின்
சுவடுகளில் பயணிப்போம் நாம்.

No.64,.A.V.Rd,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
021 221 1100

(33784) (10,6,7)

**பணிப்பெண் தேவை**

கொழும்பு, வெள்ளவத்தையில் வசிக்கும் 4 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலைகளுக்கு உதவுவதற்கு 25 வயதிற்கு மேற்பட்ட பொறுப்புகள் அற்ற பணிப்பெண் தேவை.

தொ ர்பு: 0776568168 (C/6668)(6,7,11)

**பணியாள்கள் தேவை**

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.

உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்பு: 077 3033 803 (27694) ,6,7,11)

# மரண அறிவித்தல்



## சுப்பையா கேதீஸ்வரன்

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா கேதீஸ்வரன் அவர்கள் 23.02.2013 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-பாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-சௌந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், கோணேஸ்வரன் (கனடா), மகேஸ்வரன் (சுவிஸ்), சுமதி (ஆசிரியை, நீர்கொழும்பு, விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), கோமதி, ஸ்ரீமதி (கனடா), ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினிதேவி, ரஜனி, சுரேந்திரன், உதயஜீவன், ரவி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், வகிஷா, ஜெகிஷா, சஹானா, துஷன், அபிநயன், ஆதித்தியன், நவீனன், சஞ்சய், கிருஷினா, வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

(c/6663) (10,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

# துன்பம் வரும்போது தோள் கொடுங்கள்........



திருமதி வ.அற்புதன்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கவலை, சோகம், வருத்தம் வரத்தான் செய்கிறது. அந்த நேரத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் ஆறுதல், அவர்களின் அன்புக்குரியவர்களிடமிருந்து கிடைக்கும் ஆறுதலான வார்த்தைகளும், அனுசரனையான அக்கறையும்தான்.

குறிப்பாக உங்களது துணை வருத்தத்திலோ அல்லது கவலையிலோ இருக்கும் பொழுது நீங்கள் அவருக்கு தோள் கொடுத்து ஆறுதல் அளிக்கும்போது அவருக்குக் கிடைக்கும் நிம்மதியும், மகிழ்ச்சியும் சொல்லில் வடிக்க முடியாதது.

அன்பாலும், பாசத்தாலும், அக்கறையாலும், பரிவாலும் உங்களது வார்த்தைகளால் அவரது புண்ணுக்கு நீங்கள் போடும் மருந்து மிகப் பெரிய நிவாரணமாக அமைகிறது. நமக்கென்று ஒரு தோள் இருக்கிறது, நமக்காக ஒரு உயிர் இருக்கிறது, நம்மை தூக்கிச் சுமக்க ஒரு சுமை தாங்கி இருக்கிறது என்ற நினைப்பே பலருக்கு சோர்வையும், சோகத்தையும் தூக்கிப் போட்டு விட உதவுகிறது.

உங்களது துணைக்கு உடல் நலம் சரியில்லையா, மன வருத்தத்தில் இருக்கிறாரா அல்லது ஏதாவது பயத்தில் இருக்கிறாரா.. கவலையேபடாதீர்கள், ஆறுதலாக நாலு வார்த்தை பேசுங்கள். அப்படியே பறந்து போய் விடும் அவரது கவலைகள்.

**கட்டி அணைத்து ஆறுதல் சொல்லலாம்...**

இது ஒரு உபாயம்.சிலருக்கு கட்டி அணைத்து தோளோடு தோள் சேர்த்து, தலையை வருடிக் கொடுத்து, முதுகைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறும்போது அதை அவர்கள் விரும்புவார்கள். இது எல்லோருக்குமே பிடித்தமான விஷயமும் கூட. இது ஒரு வகையான பாசம் பரிவு கலந்த அரவணைப்பு. எத்தகைய துன்பத்தில் இருந்தாலும் இந்த கட்டியணைப்புக்கு முன்பு எல்லாமே கால் தூசுதான். எனவே வருத்தமெல்லாம் அப்படியே கரைந்து போய் விடும்.

உனக்காக நான் இருக்கிறேன் கண்ணம்மா, கண்களில் ஏன் இந்தக் கவலை. எல்லாவற்றையும் மறந்து விடு, நிம்மதியாக இரு. உனக்கான தோள் நான். என் மீது உன் பாரத்தை ஏற்றி விட்டு, நிம்மதியாக இரு என்று சொல்லும் போது அவர்களுக்குக் கிடைக்கும் அந்த பாதுகாப்பு உணர்வுக்கு ஈடு இணையே கிடையாது.

**கவனத்தைத் திருப்புங்கள்**

சிலருக்கு தேவையில்லாத பயம், கவலை வந்து மனதை வருத்தும். அதுபோன்ற சமயங்களில் அவர்களை அந்தப் பிரச்சினையிலிருந்து திசை திருப்ப முயற்சியுங்கள். மகிழ்வாக ஏதாவது பேசுங்கள், வேறு தலைப்புக் குறித்து அவர்களது சிந்தனையை திருப்புங்கள். அதையே நினைத்துக் கொண்டு பயப்படாதே என்று தட்டிக்கொடுங்கள். அவர்களுக்கு ஊக்கமாக, பக்கபலமாக இருந்து, அவர்களின் பயத்தைப் போக்குங்கள். அவரது மனதுக்கு இதமாக ஏதாவது பேசிக் கொண்டிருங்கள்.

**மனம் விட்டுப் பேசச் சொல்லுங்கள்**

சிலருக்கு பிரச்சினையை யாரிடம் சொல்லி அழுவது என்ற குழப்பம் இருக்கும். அப்போது அவரிடம் உங்களைப் புரிய வையுங்கள். என்னிடம் கொட்டிவிடு, எல்லாவற்றையும் வெளியில் போட்டு விடு, பிரச்சினையை சொல் நான் தீர்வு சொல்கிறேன் என்று நம்பிக்கை அளியுங்கள். அவர் சொல்லும்போது அக்கறையுடன் கேட்டு அவருக்குப் பொருத்தமான தீர்வை சொல்லுங்கள். நிச்சயம் அவருக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் துணையின் கண்களிலிருந்து நீர் வழியும்போது அதை வேடிக்கைப் பார்க்காமல், அதைப் பரிகாசம் செய்யாமல், உண்மையான பாசத்தோடும், நேசத்தோடும், காதலோடும், அன்போடும் நீங்கள் அணுகும்போது தானாகவே அந்தக் கண்ணீர் நின்று போகும். அன்பைக் கொட்டி நீங்கள் தரும் ஆதரவு அவருக்கு ஒரு தாயின் மடியைப் போலவே காட்சி தரும்.எனவே உங்கள் துணை சோர்ந்திருக்கும்போது நீங்கள் தாயாக மாறி அவருக்கு இளைப்பாறுதலைக் கொடுங்கள்...!

# மனசெல்லாம் வலிக்கிறதா? மனம் விட்டு சிரியுங்கள்



அ.பிரேமினி

என்னால் எனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை... எனது சிந்தனைகளுக்குக் கடிவாளம் போட முடியவில்லை...இது பலரது புலம்பலாக உள்ளது. ஆனால் மனதைக் கட்டுப் படுத்தினால் எதையும் சமாளிக்கலாம்.

ஒவ்வொரு மனிதனுமே ஏதாவது ஒரு உணர்வுக்கு அடிமையானவன்தான். அது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி. இந்த உணர்வுகளில் ஒன்றுக்கு, அவன் அல்லது அவள் ஆட்பட்டவராகவே இருக்க முடியும். கோபம், சந்தோஷம், துக்கம், ஏமாற்றம் என இந்த உணர்வுகளில் ஏதாவது ஒன்றுக்கு உட்பட்டுத்தான் வாழ முடியும்.

ஒவ்வொருவரையும் இந்த உணர்வு தான் உந்தித் தள்ளி வழி நடத்துகிறது. ஆனால் இந்த உணர்வுகளை சமாளித்து, நாம் தடுமாறாமல் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் நாம் கீழே விழ மாட்டோம். மாறாக, உணர்வுகளுக்கு முற்றிலும் அடிமையாகி விட்டால், நாம் தடுமாறிப் போகும் நிலை ஏற்படுகிறது.

சிலருக்குக் கோபம் பெரும் பிரச்சினையாக இருக்கலாம் சிலருக்கு சநதோஷம் சில வகை சங்கடங்களைத் தரலாம். பலருக்கு ஏமாற்றம் பெரும் கவலையை ஏற்படுத்தலாம். ஏமாற்றம் எதனால் வருகிறது.. எதிர்பார்ப்பதால்தான். எதிர்பார்ப்புகள் எங்கு அதிகம் இருக்கிறதோ அப்போது கூடவே ஏமாற்றமும் வந்து நிற்கும். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும்போது ஏமாற்றத்தின் தாக்கமும் அதிகமாகவே இருக்கும்.

எதிர்பார்ப்பே இல்லாமல் இருக்கப் பழகும்போது ஏமாற்றத்தின் வலி குறையும் வாய்ப்புள்ளது.

சரி இப்படி ஒவ்வொரு உணர்வும் நம்மைத் தாக்கும்போது அதிலிருந்து மீளுவது எப்படி?... இதை எப்படி சமாளிக்கலாம்?.. கீழே விழாமல் நிற்பது எப்படி?... என்ன சொல்கிறார்கள் உளவியலாளர்கள்...?

உணர்வுகள் உங்களைத் தாண்டிப் போக விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உணர்வுகளை நீங்கள் அடிமையாக்க வேண்டும். உந்தித் தள்ளும் உணர்வுகளுக்குப் பலியாகி விடாமல் எதிர்த்துப் போராட வேண்டும்.இதற்கு சில எளிமையான பயிற்சிகள் இருக்கிறது. அதைச் செய்தாலே போதும் நிச்சயம் பெரும் பலனைப் பெறலாம்.

மன அழுத்தம் வருகிறதா.. கவலையே படாமல் சத்தம் போட்டு பாட்டுப் பாடுங்கள்.

மனசெல்லாம் வலிக்கிறதா... வாய் விட்டு நன்றாகச் சிரியுங்கள்.

சோர்ந்து போவது போல உணர்கிறீர்களா... எங்காவது போய் ஜாலியாக சுற்றி விட்டு வாருங்கள்.


மனதைப் போட்டு ஏதாவது நினைவு உலுக்குகிறதா... சந்தோஷமாக ஒரு படம் பாருங்கள்.

எதையாவது நினைத்து ஏமாற்றமாக உணர்கிறீர்களா... அதைச் சுத்தமாக மறந்து விட்டு அடுத்த வேலையைப் பார்க்க முயலுங்கள்.

மனிதனின் மூளை மற்றும் மனதை விட மிகப் பெரிய மாஸ்டர் இல்லை என்பது உளவியலாளர்களின் கருத்து. மூளை சொல்வதை கேட்பதா, மனசு சொல்வதை கேட்பதா என்ற கேள்வி வரும்போது, கேட்கப்பட்ட கேள்விக்கு நாம் என்ன பதிலளிப்பது என்பது குறித்துத்தான் நாம் முதலில் கவலைப்பட வேண்டும் என்றும் இவர்கள் சொல்கிறார்கள். நம்மைப் போலவே மற்றவர்களும் சிந்திக்க வேண்டும், நம்மைப் போலவே அவர்களும் நினைக்க வேண்டும், நம்மைப் போலவே அவர்களும் இருக்க வேண்டும் என்று நினைப்பது முட்டாள்தனம். அந்த எதிர்பார்ப்பே முதலில் பெரும் தவறு என்று கூறும் உளவியலாளர்கள், உங்களைத் தாண்டி உணர்வுகளைப் போக விடாதீர்கள். கடிவாளம் போட வேண்டிய இடத்தில் அதைச் செய்தால் மட்டுமே அதிலிருந்து நீங்கள் தப்ப முடியும் என்றும் அறிவுரை கூறுகிறார்கள்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .




பெண்கள் புரியாத புதிரல்ல
புரிந்து கொள்ளக் கூடிய
புதுக் கவிதைதான்.
தேய்பிறையை சந்திக்கும் நிலவல்ல
நிலையாய் விண்ணில் மின்னும்
விண்மீன்கள்!
பெண்கள் அடிமைகள் தான்
அதிகாரத்திற்கல்ல
அன்பிற்கு மட்டும்.
பெண்கள் கண்ணாடி அல்ல
ஆனால், நாட்டின் கண்கள்.
பெண்கள் புரியாத புதிரல்ல
புரிந்து கொள்ளக்கூடிய
புதுக் கவிதைதான்.

கிருஷ்ணவேணி

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021- 222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா மொபைல்ஸ்' - மாலுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 024490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## முக்காடு போட வேண்டிய நிலை

''குடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்'' என்ற பழமொழியை இப்போது மாற்றிக் கொள்ள வேண்டும் போல் தெரிகிறது. ''எடுக்கிற தெய்வமும் கூரையைப் பிய்த்துக் கொண்டே எடுக்கும்'' என்று சொல்வது இப்போதைய சூழலுக்கு மிகப் பொருத்தம். இலங்கை அரசின் இக்கட்டான நிலையைப் பார்க்கும்போது இந்த வரிகளே உங்களுக்கும் ஞாபகம் வந்திருக்கக் கூடும்.

இலங்கைத் தீவில் மஹிந்தவின் ஆட்சி மிக முக்கியமானது. மூன்று தசாப்தங்களாக தமது விடுதலைக்காகப் போராடிய ஓர் இனத்தின் அடையாளமாக கொள்ளப்பட்டிருந்த விடுதலை அமைப்பின் கதைக்கு மஹிந்தவின் ஆட்சியிலேயே முற்றுப்புள்ளி விழுந்திருந்தது. இந்த முற்றுப்புள்ளிக்காக இலங்கை அரசு மேற்கொண்ட எத்தனங்கள் சொல்லிமாளா.

யார் யாரிடமெல்லாம் என்னென்ன எல்லாம் வாங்க முடியுமோ அவ்வளவற்றையும் வாங்கிக் குவித்தது அரசு. ஆலய அபிஷேகங்கள் தொடர்பான அறிவித்தலின் போது '' அடியார்கள் பாலாகவோ, தயிராகவோ, இளநீராகவோ, பணமாகவோ தமது காணிக்கைகளைச் செலுத்தி இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்ற ஒரு வாக்கியமும் தவறாது இடம்பெறுவதுண்டு. அதேபோன்றுதான் படைகளாகவோ, ஆயுதங்களாகவோ, பொருளாகவோ, தொழில்நுட்ப உதவிகளாகவோ, வேவுத் தகவல்களாகவோ, செய்மதிப் படங்களாகவோ, மேலதிகப் பயிற்சிகளாகவோ காணிக்கைகளைக் கடனாக வாங்கிக் கொண்டது இந்த அரசு.

இந்த இரவல் தனத்தின் மூலம் வீரியம் கொண்டதாக போர் முனையில் உருவெடுத்த அரச படைகளுக்கு மக்களை மட்டுமே நம்பி போராடிக் கொண்டிருந்த ஓர் அமைப்பை நசுக்குவது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. ஆனால் இதன்போது குறித்த அமைப்பைத் தவிர அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களையும் சேர்த்தே போர் கொன்று தின்றது. இரு தரப்புமே மக்களின் உயிர்களைப் பற்றி கவலை கொண்டிருக்கவில்லை. அதிலும் அரச படைகள் அதிஉச்ச மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக பொது மக்களும், சர்வதேச அமைப்புக்களைச் சார்ந்தோரும் இறுதிப் போரில் பங்குபற்றி மனம் வெறுத்து விலகியுள்ள படையினரும் சொல்கிறார்கள்.

இந்த நிலையிலேயே ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கைக்கு எதிரான அழுத்தங்கள் தரக்கூடிய பிரேரணை ஒன்றை அமெரிக்கா முன்வைக்கவுள்ளது. இந்தப் பிரேரணைக்கு வலுச்சேர்ப்பது போல புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் படையினரால் பிடிக்கப்பட்ட பின்பே கொல்லப்பட்டார் என்பதை உறுதிப்படுத்தும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. இதுதவிர அரச படைகள் இறுதிப்போரில் சரணடைந்த முன்னாள் பெண் போராளிகள் மீதும், அப்பாவிப் பெண்கள் மீதும் புரிந்த பாலியல் கொடுமைகளை- குற்றங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்று அடுத்த அடியாக இப்போது அரசுக்கு விழுந்துள்ளது. இதேபோன்று இன்னும் பல அடிகள் காத்திருப்பதாக சர்வதேச அமைப்புக்கள் மிரட்டத் தொடங்கியுள்ளன. ஒரு காலத்தில் ''உலகிலேயே முதன்முறையாக பயங்கரவாதத்தை வேரோடு ஒழித்தவர் நாம்'' என்று மார்தட்டியவர்கள், இப்போது சால்வையால் முக்காடு போட்டு மறைத்துக் கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

# கழுத்துப்பிடியில் உறுப்பு நாடுகள் விழி பிதுங்கி நிற்கிறது இலங்கை

*சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையில் இருந்து*
■ கோகுலன்

### மனித உரிமைப் பேரவை இன்று கூடுகிறது

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது மாநாட்டில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக தாக்கல் செய்யவிருக்கும் இரண்டாவது தீர்மானத்தின் உள்ளடக்கம் இப்பொழுது ஓரளவுக்கு வெளிப்படையாகியுள்ளது. என்றாலும் அதில் மேற்கொண்டும் மாற்றங்கள் செய்யப்படுவதற்கான சாத்தியம் இருக்கின்றது. அவைகளில் சில வருமாறு.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அரசின் தேசிய செயற்றிட்டங்கள் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக போதிய அளவில் கவனம் செலுத்தவில்லை.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டு வரும் விடயங்கள் குறித்து தீர்மானத்தில் கவலை தெரிவிக்கப்படவிருக்கிறது. இதில் நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் சட்ட ஆட்சி முதலியவை மீறப்படுவது தொடர்பாகவும், பிரதம நீதியரசர் பதவி நீக்கம் , வலுக்கட்டாயமாக ஆள்கள் காணாமல் போயுள்ளமை, சட்டத்துக்கு மாறான படுகொலைகள் , சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் கூட்டம் கூடும் சுதந்திரம் நசுக்கப்படுதல் , மனித உரிமைகளை பாதுகாக்க முனைவோர் அச்சுறுத்தப்படுதல், தாக்கப்படுதல் போன்றவற்றுடன் மாகாணங்களுக்கு அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் அரசியல் அதிகாரம் பகிரப்படும் என்று பகிரங்கமாக கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை முதலியவை தீர்மானத்தில் உள்ளடக்கப்படவிருக்கின்றன.

மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் இலங்கையில் நிலவும் மனித உரிமை சூழ்நிலை குறித்து தாக்கல் செய்த அறிக்கையையும், நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை நிறைவேற்றும்படி வலியுறுத்தியுள்ளமையையும் தீர்மானம் வரவேற்கின்றது.

> மாகாணங்களுக்கு அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் அரசியல் அதிகாரம் பகிரப்படும் என்று பகிரங்கமாக கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை முதலியவை தீர்மானத்தில் உள்ளடக்கப்படவிருக்கின்றன. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் இலங்கையில் நிலவும் மனித உரிமை சூழ்நிலை குறித்து தாக்கல் செய்த அறிக்கையையும், நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை நிறைவேற்றும்படி வலியுறுத்தியுள்ளமையையும் தீர்மானம் வரவேற்கின்றது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆக்கப்பூர்வ பரிந்துரைகளை விரைவாக செயற்படுத்தும் படியாகவும், அதற்குப் பொருத்தமான சட்ட கட்டப்பாடுகளையும் நிறைவேற்றும் படி கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதோடு நீதி, சமத்துவம், பொறுப்புக் கூறல் போன்றவற்றை உறுதிப்படுத்த நம்பகரமான சுயேச்சையான, அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. சர்வதேச சட்டமீறல் மற்றும் இலங்கையர் அனைவரையும் மீள் இணக்கத்தில் சேர்த்துக் கொள்ளல் ஆகியனவும் இதில் அடங்கும்.

விசேஷ ஆணை பெற்ற ஐ.நா. அதிகாரிகள் வருவதற்கு கட்டுப்பாடற்ற வகையில் அனுமதிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்டுள்ள முக்கிய கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும். விசேஷமாக ஐ.நா.வின் அறிக்கையாளர்கள் நீதிவான்களின் சட்டவாளர்களின் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் கருத்து சுதந்திரம், கூட்டம் கூடுவதற்கான சுதந்திரம், சட்டவிரோத , பாரபட்சமான மற்றும் விசாரணையற்ற கொலைகள் சிறுபான்மை யோர் பிரச்சினைகள் மற்றும் பெண்கள் மீதான பாகுபாடு முதலியன பற்றி இவர்கள் ஆராய்வதற்கு இடமிருக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவை இன்று கூடுவதற்கு 72 மணித்தியாலத்திற்கு முன்பு தான் பேரவைக்கான இலங்கைக் குழுவுக்கு அமைச்சர் ஒருவர் தலைமை வகிப்பவர் என்ற செய்தி வெளியாயிற்று. பேரவைக்கான தமது குழுக்களை பல்வேறு சர்வதேச அமைப்புகளும் நாடுகளும் தமது பேராளர் குழுக்களை ஏற்கனவே ஜெனிவாவுக்கு அனுப்பிவைத்துவிட்டன.

பிரிட்டனை தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் உலக தமிழ் பேரவை தனது மூன்றாவது வருடாந்த மாநாட்டை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் குழுக்கள் அறையில் புதன் கிழமை நடத்தவிருக்கின்றது. பிரிட்டிஷ் பிரதி பிரதம மந்திரி நிக்கிளெக், சிரேஷ்ட இராஜாங்க வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் அமைச்சர் பாரனஸ் வார்ஸி, எதிர்க்கட்சித்தலைவர் எட் மில்லிபான்ட் , நோர்வேயிலிருந்து எரிக்சொல்ஹெய்ம் , ஐ.நா.நிபுணர் குழுவில் பங்கேற்றிருந்த தென்னாபிரிக்காவைச் சேர்ந்த யஸ்மின் சூக்கா, வடஅயர்லாந்து இராஜாங்க செயலர் தெரேசா வில்லியம்ஸ் முதலியவர்கள் இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்த விருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் எம்பி, காணாமல் போன பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் பாரியார் சந்தியா எக்னெலிகொட இப்பொழுது சுவீடனில் இருக்கும் ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய போன்றவர்கள் இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைப் பேரவை மற்றும் கொமன் வெல்த் மாநாடு தொடர்பான பிரிட்டனின் நிலைப்பாடு கடந்த வருடம் பிரதமர் கமரோன் உலக தமிழர் பேரவைக்கு அனுப்பியிருந்த செய்தியில் அடங்கியிருந்தது.

இலங்கையில் அமைதி நிலை பெற வேண்டுமானால் நீதி, சட்ட ஆட்சி அரசியல் உடன்பாடு மற்றும் பாதிக்கப்பட்ட சகல தரப்பினருக்கும் இடையிலான நல்லிணக்கம் முதலியவற்றின் மீதே அது கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்த கமரோன் குறிப்பாக மனித உரிமை மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு முறையாக விசாரணை நடத்த வேண்டும். மற்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து பொறுப்பேற்க செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான அமைப்பு விடுத்துள்ள நீண்ட ஒரு அறிக்கையில் 2012 ஆம் ஆண்டுப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிக முக்கியமான முதல் படியாகும்.

2013 ஆம் ஆண்டு மிகக் கடுமையான தீர்மானம் ஒன்றின் மூலம் இது பலப்படுத்தப்பட வேண்டும். இருந்தாலும் மேலும் செயற்பாடுகள் தேவை. குற்றம் செய்து விட்டு தப்பித்துக் கொள்ளும் விடயங்களில் இறுக்கமான மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். என்று வலியுறுத்தப்பட வேண்டும். இதன் மூலம் சட்ட ஒழுங்கு நிலைநாட்டப்படுவதோடு சட்ட மீறல்கள் மற்றும் இரு தரப்பினராலும் போரின் இறுதி மாதங்களில் நிகழ்த்தப்பட்ட நம்பகமான போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆய்வுகள் நடத்தி முடிந்த அளவில் சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காண்பதற்கு மனித உரிமை ஆணைப் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

கொமன்வெல்த் மாநாடு தொடர்பாக கருத்து வெளியிடுகையில் கொமன் வெல்த் செயலாளர் நாயகமானவர் இலங்கை தொடர்பாக முறையாக கொமன் வெல்த் அமைச்சர்கள் செயற் குழுவுக்கு அறிவுறுத்தி இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனத்தை நிலைநாட்டும்படி வற்புறுத்தல் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. மறுக்கப்படுமானால் கொழும்பில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை வேறு ஒரு நாட்டுக்கு மாற்ற வேண்டும். அல்லது மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் பிரதிநிதிகளின் தரத்தையாவது குறைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் எதேச்சதிகாரம் நோக்கிய நகர்வு ஆழமாக ஆபத்தான விதத்தில் போய்க்கொண்டிருப்பதால் இலங்கையுடன் தொடர்புகள் வைத்துக்கொண்டுள்ள நாடுகளும் பல்வேறு நிறுவனங்களும் தமது நிலைப்பாட்டை மீள் செய்து பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் இலங்கை மீது மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை எடுத்து போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த சுயாதீனமான ஓர் அதிகார அமைப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுள்ளது. ★

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.



**இடபம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.



**மிதுனம்:** வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு. முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர் பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**கடகம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.



**சிங்கம்:** வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாளுங்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதத்தைத் தவிர்க்கவும்.



**கன்னி:** மனதில் பட்டதை பளிச் சென்றுபேசி அனைவரையும் ஆச்சரியப் படுத்துவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையைக் கையாள்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**நாளை**

மாசி- 14 செவ்வாய்க்கிழமை 26.02.2013
திதி: பிரதமை பி.இ 02.39 வரை
நட்சத்திரம்: பூரம்சித்தம் பி.இ. 03.10 வரை
சுபநேரம்: 10.59- 12.29 வரை
இராகுகாலம்: 03.29- 04.59 வரை



**துலாம்:** சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**விருச்சிகம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**தனுசு:** இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து நீங்கும். உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனம் நோகும்படி பேசாதீர்கள். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.



**மகரம்:** உங்களின் குறிக்கோளை எட்டிப் பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிட்டும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிட்டும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.



**கும்பம்:** அதிரடி திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.



**மீனம்:** அதிகாரப்பூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 1 | | | | 3 | | |
| | | | 5 | | | 8 | 2 | 7 |
| 4 | | | 3 | 6 | 8 | | | 1 |
| | 9 | 3 | | | 5 | | 4 | |
| 6 | | 8 | | | | 7 | | 5 |
| | 5 | | 4 | | | 1 | 3 | |
| 3 | | | 7 | 8 | 9 | | | 2 |
| 7 | 1 | 9 | | | 2 | | | |
| | | 4 | | | | 6 | 7 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 |
| 2 | 7 | 5 | 4 | 1 | 6 | 9 | 8 | 3 |
| 6 | 8 | 4 | 9 | 3 | 7 | 5 | 2 | 1 |
| 8 | 5 | 6 | 1 | 7 | 2 | 3 | 9 | 4 |
| 7 | 3 | 9 | 6 | 8 | 4 | 2 | 1 | 5 |
| 4 | 1 | 2 | 5 | 9 | 3 | 8 | 6 | 7 |
| 9 | 6 | 8 | 3 | 4 | 5 | 1 | 7 | 2 |
| 5 | 2 | 7 | 8 | 6 | 1 | 4 | 3 | 9 |
| 3 | 4 | 1 | 7 | 2 | 9 | 6 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**காணி விற்பனைக்கு**

A-9 வீதி, முகமாலையில், எழுதுமட்டுவாழ் ரெயில்வே ஸ்ரேஷனுக்கு 50m அருகில் உள்ள காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778759401

(33803)(6.7.11)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979, மகம், செவ்வாய்க் குற்றமற்ற, 55 பாவம் உடைய அமெரிக்காவில் பொறியியலாளராகக் கடமையாற்றும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு பட்டதாரி, அழகான மணமகள் தேவை.

தொடர்பு:
tmsk1979@hotmail.com
# 6479323871

(33777)(6.7.11)

**விற்பனைக்கு**

வீட்டு, அரைக்கும் ஆலை, தொலைத் தொடர்பு, வெல்டிங், உணவகம், ரயர்வேக்ஸ், வாகனசுத்திகரிப்பு என்பனவற்றுக்கான பாவனைப் பொருள்கள், கண்ணாடி Show case, முன்கண்ணாடி பிற்றிங், Delica L300 டீசல் வான் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771746101, யாழ்ப்பாணம்

(33808)(6.7.11)

**The Royal College of Jaffna**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்க பயில மற்றும் ஆங்கில இலக்கணம்
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம் (சனி ஞாயிறு),
பிளாக் வீதி, சங்கானை, (மாலை வகுப்புக்கள்)
Tel-077 6751649

(33782)(6.7.11)

**காணியும் வீடும் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மருதடி வீதி, பொஸ்கோ பாடசாலை, இந்தியத் தூதரகத்துக்கு அருகில் 3 பரப்பு, 12 குளி காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 9006700, 0779144791.

(33809)(6.7.11)

# மரண அறிவித்தல்

## திருமதி நவரத்தினம் தங்கச்சிப்பிள்ளை



வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி நவரத்தினம் தங்கச்சிப்பிள்ளை நேற்று முன்தினம் (23.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், யோகராசா, றஞ்சினிதேவி, சுசீலா தேவி, பரமானந்தராசா, கோமளாதேவி, இலக்குணராசா, குலதேவ ராசா ஆகியோரின் பாசமிகு தாயும், றஞ்சிதமலர், பாரதிதாசன், நித்தியானந்தன், சுலோசனா, பத்மஸ்ரீ, சிறீதா, விஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரியதர்சன், நிலக்ஷன், கஜீவன், யதுமிலன், பகீத், வினோஷா, துஷிபுவன், தினேஷா, நிறோஷா, நிவிசன், நிஜிதன், சாம்பவி, சுகீர்த்தனா, தனுஷ், ஜெலக்ஸ், ஹரிப்பிரியா, ஹரிஷன், மோகனப்பிரியா, நவமிதுலன், அஸ்வினி, விதுர்சன், அம்ரிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 021 3207 910

வாதரவத்தை,
புத்தூர்.

(33779) (45.6.7)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வழிபாட்டு அழைப்பும்

## நீரார் விழியொடு நினைத்தேயிருப்போம்

அமரர் திருவாட்டி
**செல்வமலர் சற்குணராசா**

மண்மகிழ
20.01.1962



கண்நெகிழ
26.01.2013



காரை நகர்கருங் காலி தோன்றி
சீரார் கல்வியை சிறப்பொடு கற்றே
கணித பாடம் கச்சித மாயே
பணி புரி பாட சாலைகள் தோறும்
அணிசெய் விதமாய் அனைவரும் போற்ற
தணிகை யிறையாற் தரணி தந்தீர்
சற்குண ராசாத் தலைவனை மணந்தே
அற்புத வாழ்வை அவனியிற் கண்டீர்

செந்தூ ரனினொடு செல்வப் பெண்ணாய்
வந்தே யிணைஅபி நயாவை யுற்றீர்
மாடி மனையொடு மக்கள் செல்வம்
தேடி யாளிடு செல்வ மலரே
நேரார் வாழ்வை நிலத்தே துறந்தோர்
காரார் மாதம் கடந்த போதும்
பாரார் வாழ்வு பலிக்கு மட்டும்
நீரார் விழியொடு நினைத்தே யிருப்போம்

எமது குடும்பத் தலைவியின் இழப்பின் துயரில் ஆழ்ந்த வேளை பல்வேறு வகையிலும் உதவியோருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று 25.02.2013 திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு அழைக்கின்றோம்.

இல.23, 6ஆவது ஒழுங்கை
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

(33744) (5.7.45)

**குடும்பத்தினர்**




இலங்கை கண்தான சங்கத்தின் ஏற்பாட்டில், கண்பார்வையற்றவர்கள் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், நிர்வாக அதிகாரிகள் என பல்வேறு பதவிகளில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஹம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விருதுகளை வழங்கினார்.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான 4 ஆம் கட்ட தலைமைத்துவப் பயிற்சி

### 8,500 மாணவர்களுக்கு

கொழும்பு,பெப்.25

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான 4 ஆம் கட்டத் தலைமைத்துவப் பயிற்சி எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பயிற்சி எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைபெறும் என்று உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்தப் பயிற்சிக்காக சுமார் 8,500 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தலைமைத்துவ பயிற்சிகள் மாதுறுஓயா, மின்னேரியா, தியத்தலாவ, திருகோணமலை, எம்பிலிப்பிட்டிய, பூசா, தொபிகொட, ரன்தம்பே ஆகிய பகுதிகளிலுள்ள பயிற்சி முகாம்களில் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 4ஆம் திகதி குறிப்பிட்ட பயிற்சி முகாம்களுக்கு செல்லுமாறு உயர்கல்வி அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் மூன்று கட்டங்களாக மட்டுமே தலைமைத்துவப் பயிற்சிகள் நடத்தப்பட்ட நிலையில், இந்த முறை நான்காவது கட்டமும் நடத்தப்படவுள்ளமை விசேட அம்சமாகும் என்று உயர்கல்வி அமைச்சு கூறியுள்ளது. (ச)

## இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும்

### விசேட குழு மூலம் விவரங்கள் திரட்டப்படும் என்கிறார் கெஹலிய



கொழும்பு,பெப்.25

இலங்கையில் உள்ள ஊடகவியலாளர்கள் தமது சொத்துக்களை வெளிப்படுத்தவேண்டும் என்று அரசு கோரியுள்ளது.

அதற்காக விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் ஊடகவியலாளர்களின் சொத்து விவரங்கள் திரட்டப்படவுள்ளன என்று இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

விசேட குழுவைக் கண்காணிக்க ஊடகத்துறை அமைச்சிலும் ஒரு குழு ஒன்று அமைக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்தை மூன்று மாத காலப் பகுதிக்குள் நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது என்று அவர் கூறினார்.

இலங்கையில் 3000 ஊடகவியலாளர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முழுநேர, பகுதிநேர மற்றும் மாகாண ஊடகவியலாளர்கள் என்று வகுக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மாத்தறை எலும்புக் கூடுகள் ஐ.நாவின் விசாரணை அவசியம்

### ஆசிய சட்டவள நிலையம் வலியுறுத்து

கொழும்பு,பெப்.25

மாத்தளையில் தோண்டியெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பில், ஐக்கிய நாடுகளின் விசாரணைகள் அவசியம் என்று ஆசிய சட்டவள நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமர்வின்போது எழுத்து மூல கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் ஆசிய சட்டவள நிலையம் தெரிவித்துள்ளது.

மாத்தளை வைத்தியசாலையில் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக தோண்டப்பட்ட குழியிலிருந்து இது வரை 200 இற்கும் மேற்பட்டவர்களின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் சர்வதேச தரத்தைக் கொண்ட விசாரணைகள் அவசியம் என்று ஆசிய சட்டவள நிலையம் வலியுறுத்தியுள்ளது. தோண்டப்படும் எலும்புக்கூடுகள்யாவும் 1987- 1991 ஆண்டு காலப்பகுதியில் கைது செய்யப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்களின் உடையதாக இருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள் ளது என்று ஆசிய சட்டவள நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## ஏற்றுமதிப் பயிர்களை பயிரிடுவதற்குத் திட்டம்

கொழும்பு,பெப்.25

இந்த வருட இறுதிக்குள் 3,190 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயத் திணைக்களத்தின் ஏற்மதிப் பிரிவின் பணிப்பாளர் டபிள்யூ. டி. எல். குணரட்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரம் ஏக்கரில் கறுவா செய்கை செய்யவும், 770 ஹெக்ரேயரில் மிளகுச் செய்கையும், 420 ஹெக்ரேயரில் கோப்பிச் செய்கையும் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்பொழுது செய்கை பண்ணப்பட்டிருக்கும் ஏற்றுமதி பயிர்களின் அறுவடையைப் பெருக்குவதற்கு, உற்பத்தித் திறன் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.-என்றார். (ச)

## ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் போலி குற்றச்சாட்டுகள் முறியடிக்கப்படும்

### திஸ்ஸ விதாரண நம்பிக்கை

கொழும்பு,பெப்.25

ஐ.நா. மனித உரிமை சபையில் போலிக் குற்றச்சாட்டுகள் முறியடிக்கப்படும்.

-இவ்வாறு மூத்த அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழு ஜெனிவா சென்றுள்ளது. இந்தக்குழு இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதில்களை வழங்கி, குற்றச்சாட்டுகளிலிருந்து நாட்டை விடுவிக்கச் செய்யும்.

கடந்த வருடங்களில் நடைபெற்ற மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர்களில் இலங்கையின் சார்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கலந்துகொண்டார். இந்த முறையும் அவர் தலைமையிலான குழு ஜெனிவா சென்றிருப்பதால் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு பதில்களை வழங்கும்.

சர்வதேச ரீதியில் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையிலும், சில சர்வதேச சக்திகள், இலங்கைக்கு எதிராகப் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

இலங்கைக்கு எதிரான பிரேரணைகளைக் கொண்டு வந்து நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவருவதற்கும் சர்வதேச சக்திகள் முயற்சிக்கலாம். எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அரசு தகுந்த பதில்களை வழங்கும். அதற்கு



அரசு தயாராகவே உள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அது குறித்து இலங்கைக் குழுவினர், சர்வதேச சமூகத்தினருக்குத் தெளிவு படுத்துவர்.-என்றார். (ச)

## சீதாவக்க அரண்மனையின் சிதைவுகள் கண்டுபிடிப்பு

கொழும்பு,பெப்.25

சீதாவக்க அரண்மனையின் சிதைவுகளை தொல்பொருள் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது.

சீதாவக்க ஒல்லாந்தர் கோட்டையில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது, அரண்மனையின் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று திணைக்களத்தின் பணிப்பாளர் செனரத் திஸாநாயக்க தெரிவித்தார்.

வரலாற்றுச் சாசனங்களில் இந்த அரண்மனை தொடர்பிலான தகவல்கள் காணப்பட்ட போதிலும், அது மறைந்திருந்த இடம் இதுவரை காலமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவர் கூறினார். (ச)

# ‘டெக்ஸ்ரோ மெதோபன்’ இரசாயனப் பதார்த்தம் சேர்க்கப்பட்டுள்ள மருந்து வகைகளுக்குத் தடை

### மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பணிப்பாளர் தகவல்

கொழும்பு,பெப்.25

இருமலுக்காகப் பயன்படுத்தப்படும் பாணி மருந்து வகைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ‘டெக்ஸ்ரோ மெதோபன்’ எனும் இரசாயனப் பதார்த்தம் சேர்க்கப்பட்டுள்ள சகல மருந்து வகைகளையும் தடை செய்வதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

‘டெக்ஸ்ரோ மெதோபன்’ என்ற இரசாயனப் பதார்த்தம் அடங்கிய மருந்து வகைகள் பாதுகாப்புக் காரணங்கள் கருதி தடை செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று தேசிய அழகு சாதனப் பொருள்கள் மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இருமலைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் ‘டெக்ஸ்ரோ மெதோபன்’ என்ற பதார்த்தம் இருமல் பாணி வகைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்தைப் பயன்படுத்தியதால் அண்மையில் பாகிஸ்தானின் லாகூர்,குஜ்ரல்வாலா ஆகிய பிரதேசங்களில் சுமார் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலருக்கு பக்கவிளைவுகளும் ஏற்பட்டிருந்தன.

அது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. இந்த எச்சரிக்கையை அடுத்தே குறிப்பிட்ட இரசாயனப் பொருள் அடங்கிய மருந்துப் பாணிகளைத் தடைசெய்ய அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்படுகின்ற இருமலுக்கான இந்தப் பாணி மருந்தில் பயன்படுத்தப்படுகின்ற ‘டெக்ஸ்ரோ மெதோபன்’ இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் இறுதியில், இந்தியாவில் தயாரிக்கப்படும் ‘டெக்ஸ்ரோ மெதோபன்’ என்ற இரசாயனப் பதார்த்தத்தில் லிவோமெதோபன் என்ற நச்சு கலந்த இரசாயனப் பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வேறு நாடுகளில் தயாரிக்கப்படுகின்ற மருந்து வகைகளுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படுவதால் குறித்த ‘டெக்ஸ்ரோ மெதோபன்’ ஏனைய நாடுகளுக்கும் விநியோகிக்கப்பட்டிருக்கலாம். இதனால் ‘டெக்ஸ்ரோ மெதோபன்’ என்ற பதார்த்தத்தின் தரம் தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.-என்றார். (ச)



## சங்கானை நிகரையம் பதி ஞானவைரவர்

### ஆலய மாசிமக உற்சவ பூர்த்தி பெருவிழா

இன்று (25.02.2013) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று பிற்பகல் ஒரு மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். மாலை 6.00 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன் திருப்பொன்னூஞ்சல் இடம்பெற்று விசேட மேள வாத்தியங்களுடன் சாமுண்டாதேவி சமேத ஞானவைரவப் பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருள்வார்.

வட்டூர் கலைஞர்களின் புரவி நடனம், விசேட மேள வாத்திய சகிதம் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை:
Air Com Travels and Tours
No.03, Charambiady Lane,
Stanly Road,
Jaffna. T.P: 0212219113

உபயகாரர்:
நிகரை இந்து இளைஞர் மன்றம்

(c/6661) (10,6,7)

## அட்டவணைப்படுத்தப்படாத பதவி நிலைகளில் மாற்றம்

### உள்ளூராட்சி சபை ஊழியர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், பெப்.25

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளில் காணப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பதவி நிலைகளில் மாற்றம் செய்யப்பட்டதால் ஊழியர்களிடையே அதிருப்தி நிலை காணப்படுகிறது.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதப் பிரகாரம் அட்டவணைப் படுத்தப் படாத பதவிகள் சில ஒன்றிணைக் கப்பட்டுள்ளன.

இதனால் வெவ்வேறு பதவிகளில் பணியாற்றிய ஊழியர்கள் ஒரே பதவிக்கு உரிய நியமனக் கடிதங்கள் வழங்கப் பட்டதை அடுத்து அதிருப்தி நிலை காணப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி திணைக்கள உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதப் பிரகாரம் உள்ளூ ராட்சி சபைகளில் கடமையாற்றிய அலு வலகத் தொழிலாளர்கள், சந்தைத் தொழி லாளர்கள், சுகாதார வேலை யாள்கள் ஆகியோர் சுகாதாரத் தொழி லாளி என்ற பதவி நிலைக்கு உள் வாங் கப்படல் வே ண்டும் என குறி ப்பிடப் பட்டுள் ளது.

கடந்த பத்து வரு டங்களுக்கு மேலாக அலுவலக தொழிலா ளர்களாகவும் சந்தைத் தொழிலா ளர்களாகவும் கடமை யாற்றியவர்கள் சுகா தாரத் தொழிலாளி பதவிக்கு உள்வாங் கப்பட்டமைக்கான நியமனக் கடிதங்கள் உள்ளூராட்சி சபைகளில் வழங் கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள அதி ருப்தியடைந்த நிலை குறித்து மேன் முறையீடு செய்ய வுள்ளதாகத் தெரி வித்தனர். (ம-9)



## அகவை அறுபதில் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

### சதாசிவம் கோகிலராஜா

(M.S.O)

(தபாற்கந்தோர் – சாவகச்சேரி)

25.02.2013

அகவை அறுபதில்
மணிவிழா நாயகனே-எம்
குடும்ப அகல் விளக்கே...
ஏணியாய் எமை ஏற்றிவிட்டு
துணையாய் நிற்கும் எம் தந்தையே
நீவிர் நீடூழி காலம் வாழ
இறையாசி வேண்டிப் பிரார்த்தித்து
வாழ்த்துகின்றோம் - இந் நன்னாளில்
வாழ்க பல்லாண்டு.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி.

(27853) (10,6,7)

## 10 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### சாருன்

றெக்சன் டொனாட் – றெஜிதா தம்பதியரின்


செல்வப் புதல்வன் சாருன் தனது 10 ஆவது பிறந்த தினத்தை இன்று (25.02.2013) திங்கட்கிழமை தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மம்மா–ரதி, அத்தைமார்–சுசி, சுகில், சுவிற்றி, மச்சாள்மார்–தீபிகா, டினுக்கா ஆகியோர் இறைவன் அருள் பெற்று பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

பாடசாலை வீதி, ஆறுகால் மடம்,
யாழ்ப்பாணம்.

(33792) (6-7.11)

கோபி, சுசி

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### இளையவி சின்னத்தம்பி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.05.1920 | 25.01.2013 |

கடந்த 25.01.2013 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்இன்று (25.02.2013) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மல்லாகத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்துஇடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்:
சி.ருக்குமணி, சி.நடராசா, சி.சிவராசா,
சி.தர்மராசா, சி.நாகராசா

சோடாக்கம்பனி ஒழுங்கை,
மல்லாகம்.

(C/6660)(6.7.11)

## அலங்காரத் திருவிழா சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,பெப்.25

வண்ணை நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீஞானவைரவர் ஆலய அலங்காரத்திருவிழாவின் இறுதி நாளான இன்று காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் முற்பகல் 11 மணிக்கு காரை எம்.பி.அருளானந்தனின் "காவல் தெய்வம்" எனும் பொருளிலான தெய்வீகப் பேருரையும் இடம் பெறும்.

நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சலும் சுவாமி உள் வீதி யுலா வருதலும் நிகழ்வதுடன் விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (ம)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

### அமரர் தம்பு சிவஞானசுந்தரம்

(ஓய்வுபெற்ற உபதபாலதிபர் ஏழாலை, அத்தியடி முருமகமூர்த்தி கோயில் ஏழாலை அறங்காவலர்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 27 |
| 05 | 01 |
| 1930 | 2013 |

கடந்த 27.01.2013 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் நாளை (26.02.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

குடும்பத்தினர்.
மனைவி-021 3737992
மதனி(சுவிஸ்) -0612713408
அருள்முருகன் (ஜேர்மனி)
004942169310204
சண்முகராசா - 0771189210
(இளைப்பாறிய தபாலதிபர்)

(33791) (10,6,7)






## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
27.03.1924

மறைவு
24.01.2013

அமரர்

### சதாசிவம் மகேசு

(ஓய்வுபெற்ற அதிபர்)

24.01.2013 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவர் சதாசிவம் மகேசு அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் வியாழனன்று (21.02.2013) கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.02.2013) வட்டுக்கோட்டையிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுக்கோட்டை தெற்கு.

குடும்பத்தினர்.

(33781) (10,6,7)

# குவைத் அரசு கிழக்கில் முதலீடு

## மாகாணஅமைச்சரிடம் தூதர் உறுதி



திருகோணமலை,பெப்.25

கிழக்கு மாகாணத்தில் முதலீடுகளை மேற்கொள்ள குவைத் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று இலங்கைக்கான குவைத் தூதர் யாகூப் வை.அல்அதீகி கிழக்கு மாகாண அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

கிழக்கு மாகாண விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமத்துக்கும் இலங்கைக்கான குவைத் தூதருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே தூதர் உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி, சிறு கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி, சுற்றுலா ஆகிய துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு குவைத் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தூதர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் விவசாய, கால்நடை உற்பத்தி, சிறுகைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்குரிய சாத்தியங்கள் குறித்து குவைத் தூதுவருக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் விளக்கமளித்தார்.

இலங்கை மற்றும் குவைத் நாடுகளுக்கு இடையில் உறவுகளை மேம்படுத்துவது தொடர்பிலும் அவர் கலந்துரையாடியுள்ளார்.

**இலங்கையின் அபிவிருத்தி மற்றும்** நலன் தொடர்பில் **குவைத்** மிக நீண்ட கால**மாக** நட்புடன் செயற்பட்டு **வருகின்றமையை** அவர் **சுட்டிக்காட்டினார்.** இந்தச் சந்**திப்பில்** அமைச்சர் ஹாபிஸ் **நஸீருக்கு** குவைத் தூதர் **நினைவுச்** சின்னமொன்றை **வழங்கிக்** கௌரவித்தார்.(ச)

## 14,000 கிலோ கழிவுத் தேயிலை சிக்கியது

கண்டி,பெப்.25

கண்டி, தவுலகல பகுதியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 14 ஆயிரம் கிலோகிராமுக்கும் அதிகமான கழிவுத் தேயிலையை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தவுலகல, தெல்அத்த பகுதியில் அனுமதியின்றி கட்டடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த கழிவுத் தேயிலையே இவ்வாறு கைப்பற்றப்பட்டது என்று தவுலகல பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தத் தேயிலையை மறைத்து வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தவுலகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## விபத்தில் மூவர் சாவு

நுவரெலியா,வியாங்கொடையில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து வியாங்கொடை, ஒலுவவில் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

காரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ச)

## உன்னிச்சைக்குள நீர்ப்பாசனம் மூலம் 11,520 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

மட்டக்களப்பு,பெப்.25

இந்த ஆண்டு உன்னிச்சைக் குளம் நீர்ப்பாசனத் திட்டத்தினூடாக 11,520 ஏக்கர் விவசாய நிலத்தில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் இடம்பெற்ற சிறுபோகச் செய்கை தொடர்பான கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் 11,520 ஏக்கர் விவசாய நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்துக்கான அங்கீகாரத்தை பிரதேச செயலகமும், மாவட்ட அரச அதிபர் அலுவலகமும் வழங்கியுள்ளன.

இந்தக் கூட்டத்தில் முதல்

**விவசாய வேலைகளை எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானிக் கப்பட்டுள்ளது.**

மூன்றரை மாத நெல் இனங்களை விதைக்க வேண்டும், விவசாய வேலைகளை எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா, மாகாணசபை உறுப்பினர்களான கே.துரைராஜசிங்கம், இரா.துரைரெட்ணம், பிரசன்னா இந்திரகுமார், வவுணதீவுப் பிரதேச சபைத் தலைவர் கா.சுப்பிரமணியம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## வெடி பொருள்கள் மீட்பு

மட்டக்களப்பு,பெப்.25

மட்டக்களப்பு, திருக்கோவில், தம்பட்டம் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட வெடி பொருள்கள் திருக்கோவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## இனந்தெரியாதோரால் லொறி தீக்கிரை

கண்டி,பெப்.25

கண்டி, கட்டுகஸ் தோட்டை பிரதேசத்தில் லொறி ஒன்று இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி, கட்டுகஸ் தோட்டை, உடுவாவல பிரதேசத்தில் உள்ள வியாபார நிலையம் ஒன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பேக்கரி தயாரிப்புகள் ஏற்றப்பட்ட லொறியை காலையில் வியாபாரத்துக்காகக் கொண்டு செல்வதற்கு வியாபார நிலையத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த லொறி நேற்று

**லொறி நேற்று முன்தினம் சனிக்கிழமை இனந்தெரியா தோரால் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளது**

முன்தினம் சனிக்கிழமை இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று லொறியின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

அதனையடுத்து சம்பவம் தொடர்பில் கட்டுகஸ் தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அட்டாளைச்சேனை பிரதேச ஒலுவில் மாவட்ட வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் சென்று வைத்தியசாலையின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

## திருமலையில் பௌர்ணமி தின நிகழ்வு

திருகோணமலை,பெப்.25

திருகோணமலையிலிருந்து வெளிவரும் 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழின் அனுசரணையுடன் பௌர்ணமி தின கலை நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் மாணவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ச-40)

## கடலில் மூழ்கி ஒருவர் சாவு

பொத்துவில்,பெப்.25

பொத்துவில், கோமாரி முகத்துவாரம் கடல் பிரதேசத்தில் நண்பர்களுடன் நீராடச் சென்ற அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது என்று பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்

அக்கரைப்பற்று, 7ஆம் பிரிவைச் சேர்ந்த மோகனதாஸ் மயூரன் (வயது-21) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடலில் நீராடிக்கொண்டிருந்த போது குறித்த இளைஞர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இந்தநிலையில் கடற்படையினரின் சுழியோடிகள் சடலத்தை மீட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ச)

## இனவாதத்தைத் தூண்டும் முயற்சி

### அமைச்சர் உதுமாலெப்பை சொல்கிறார்



இலங்கை பல்லின மக்களுக்கும் சொந்தமான நாடு என்பதை மறந்துவிடக்கூடாது. இனவாத சிந்தனை உள்ள சிலர், பௌத்த மக்களையும் சிறுபான்மையினரையும் பிரித்து இனக்கலவரத்தைத் தூண்டும் நோக்கத்துடன் இந்த நாடு பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தம் என்று கூறுவது வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு கூறினார் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை.

தற்போதைய நிலைமை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனவாதத்தை வளர்ப்பவர்கள் அதே இனவாதத்தால் அழிந்து போவார்கள் என்ற பொதுவான நம்பிக்கை எம்மிடம் இருக்கின்றது. அரசியல் வரலாற்றில் இனவாதம் பேசி இனவாதத்தைத் தூண்டியவர்கள் எல்லாம் அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட்டுவிட்டனர்.

பல்லின மக்கள் வாழுகின்ற நாட்டில் தத்தமது மதத்தைப் பின்பற்றி மார்க்க வழிபாட்டில் உணவுகளை உண்ணுவதற்குரிய உரிமைகள் எல்லோருக்கும் உள்ளது.

நாம் நமது மார்க்க வழி முறைகளைப் பின்பற்றி வாழ வேண்டும். முன்னர் **இனவாதத்தைத்** தூண்டி**விட்டதால்,** நமது நாடு பல **அழிவுகளைச்** சந்தித்தது என்**பதை** மறந்துவிடக்கூடாது.

**முஸ்லிம்களின் ஹலால் உணவு** தொடர்பாக அண்மைக்**காலமாக** இனவாத உணர்**வுகளை** சிலர் ஏற்படுத்தி **வருகின்றனர்.** முஸ்லிம்க**ளின் மார்க்கத்தில்** அனுமதிக்**கப்பட்ட** உணவை சாப்பிடு**வதை ஹலால்** உணவு என **அறிவிக்கப்பட்டுள்ளது.** ஹலால் **உணவை** ஏனையவர்கள் **விரும்பினால்** சாப்பிடலாம். **ஆனால்ஏனையவர்களும்ஹலால் உணவை** சாப்பிடுங்கள் என்று **முஸ்லிங்கள்** கூறவில்லை. **முஸ்லிம்கள்** கட்டாயமாக **ஹலால் உணவை** உண்டே ஆக **வேண்டும்.** அது முஸ்லிம்களின் **உரிமையாகும்.**-என்றார். (ச)

## சுருக்குவலை மீன்பிடியால் கரைவலை மீனவர் பாதிப்பு



அம்பாறை,பெப்.25

அம்பாறை,பொத்துவில், குடாக்கள்ளி கடல் பகுதியில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலையை உபயோகித்து மீன்பிடிப்பதால் கரைவலை மீனவர்களின் தொழில் பாதிப்படைகிறது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறிய கண்களைக் கொண்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை அரசு தடை செய்துள்ளது. இந்தநிலையில் பொத்துவில், குடாக் கள்ளி பகுதி கடற்பரப்பில் சிலர் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பல முறை தெரிவித்தும், இதுவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கரைவலை மீனவர்கள் கூறுகின்றனர்.

## வீடு வாடகைக்கு

ஒட்டுமடம் மானிப்பாய் வீதியில் நான்கு அறைகளுடன் சமையல் அறை விசாலமான ஹோல் உட்பட வீடு வாடகைக்குண்டு.

தொ.பே இ: 077 4837 637

(33667) (45.7)

## ஆள்தேவை

பிரபல்யம் வாய்ந்த ஹோட்டலுக்கு அனுபவமுள்ள கொத்துரொட்டி வேலையாள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 0779858957

## விற்பனைக்கு

VVxxxx இலக்க ஹீரோ ஹொண்டா பஷன் புறோ (நீலம்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0773549811 (சாவகச்சேரி)

## தவறிவிட்டது

64/2, வைமன் வீதி, யாழ்ப்பாணம என்னும் முகவரியுடைய சோமசுந்தரம் கஜரூபன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (791670713V) மற்றும் இராணுவ அ.அ, லைசன்ஸ், வங்கி அட்டை என்பன அடங்கிய பேஸ் சின்னக்கடை (குருநகர்) சந்தையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (0778608045)
சன்மானம் வழங்கப்படும்


## விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சி,பெட்க

தென்மராட்சி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நால்வர் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீசாலைப் பகுதியில் வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்த மீசாலை தெற்கைச் சேர்ந்த திரவியநாயகம் சத்தியராஜ் (வயது- 17) என்பவரும், எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் சைக்கிளுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் பளை வண்ணான் கேணியைச் சேர்ந்த செல்லையா கணேசலிங்கம் (வயது -53) என்பவரும், மற்றும் நல்லூரைச் சேர்ந்த விநாயகமூர்த்தி ஜெயகாந்தன் (வயது 23) ,மீசாலை தெற்கைச் சேர்ந்த தெய்வேந்திரன் கபிலன் (வயது -16) ஆகியோரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் தி.சத்தியராஜ் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதே வேளை பூநகரி, வெட்டுக்காடு, பரமன் கிராயைச் சேர்ந்த நாச்சான் சசிகரன் (வயது -27) என்பவர் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)


## வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் இயங்கும் இலத்திரனியல் தனியார் நிறுவனம் ஒன்றின் கிளைக்கு SHOWROOM ASSISTANT தேவைப்படுகிறார்.
தகுதி:- க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி.
18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.
உங்களுடைய சுயவிபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விண்ணப்ப முடிவு திகதி 01.03.2013

SOFTLOGIC
227A,B, K.K.S. ROAD,
பெரியமதவடி, சுன்னாகம்,
021 567 4129


# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை தம்பிராசா (நவரத்தினம்)



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் நவமணி ஸ்ரோர்ஸ் வர்த்தகருமாகிய தம்பிப்பிள்ளை தம்பிராசா நேற்று (24.02. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இளையபிள்ளை தம்பதியாரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - சின்னம்மா தம்பதியாரின் அன்பு மருமகனும் இராசமணியின் பாசமிகு கணவரும் ரதி, சுபா, மலர், ராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரூபகாந்தன், ஜெயநாதன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனும் கீர்த்தனன், ருபேதா, நிரோஜன், சாருகா, திவ்வியா, டானியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அன்னலெட்சுமி மற்றும் பரமேஸ்வரி, சற்குணம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.ஜெயநாதன் (மருமகன்)
ஐங்கரன் பல்பொருள் வாணிபம்,
அராலி தெற்கு.)

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

## கிறிஸ்டீனா இராசம்மா சின்னையா

(இளைப்பாறிய ஆசிரியை யா/ஏழாலை ஸ்ரீமுருகன் மகாவித்தியாலயம்)



சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்டீனா இராசம்மா சின்னையா நேற்றுமுன்தினம் (23.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னத்தங்கம் தம்பதியாரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னம்மாவின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற இராஜேந்திரத்தின் மைத்துனியும் இம்மானுவேல் ஜெயராசா, ஜெயானந்தன் (கனடா), ஜெயபாலன் (ஜேர்மனி), ஜெயரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் சிறியதாயும் பிரேமராணி, யசிந்தா, லில்லி ஆகியோரின் ஆசை மாமியும் தினேஸ் - சாளினி, சோபனா, தீபன், ஜெனா- குமரன், ரோனி, ஜீவன், ரெனோஸ், ரெஸ்மி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (25.02.2013) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சூராவத்தை புனித திரேசாள் ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் ஏழாலை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

advt@uthayan.com 0215671111

# மரண அறிவித்தல்கள்



## நல்லையா அரசம்மா

அல்வாய் வடமேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கேணியடி திருகோணமலையினை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா அரசம்மா நேற்றுமுன்தினம் (23.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் (ஓய்வுநிலை தபால் தரம்பிரிப்பு உத்தியோகத்தர், திருகோணமலை), அன்பு மனைவியும், கௌரியோகதேவி(அல்வாய் வடமேற்கு), முரளியோகேஸ்வரன்(திருமலை), அருள்யோகேஸ்வரன்(லண்டன்), செந்தகுமார்(ஆசிரியர், தி/புனித சூசையப்பர் கல்லூரி), சந்திர குமாரி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), கௌசல்யாதேவி(ஆசிரியை, திருமலை), தயாநிதி (லண்டன்), தமிழ்ச்செல்வி (ஆசிரியை, தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), நவநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும், இராசநாயகம், தர்மகுலசிங்கம், மகேந்திரதேவி, மன்னிருதராம், இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அல்வாய் வடமேற்கில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மகேந்திரா வாசா"
மாறாம்புலம்,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 043693
021 490 9155

## சின்னத்தம்பி சபாரட்ணம்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சபாரட்ணம் கடந்த (22.02.2013) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதியாரின் அன்பு மகனும் துரையப்பா - பார்வதிப்பிள்ளை தம்பதியாரின் அன்பு மருமகனும் பிரேமாவதியின் அன்புக் கணவரும் அருட்குமரன், உமாதேவி, அரிகரன், ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவனா, நந்திவர்மன், சுகிதா, மதிவெண்ணன் ஆகியோரின் அன்பு மாமனும் அஸ்வின், பிரியந்த், யசிந்த், மர்விந், டிலானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.


## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



15 வருட அசைக்க முடியாத நம்பிக்கையுடன்

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் அதி விஷேட கட்டணங்கள்.
- மருந்துப்பொருட்கள், கடலுணவு, மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகளை ஏற்று வெளிநாடுகளில் ஒப்படைக்கும் விசேட சேவை.
- குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.



மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

சகல நாடுகளிற்குமான விமானபயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.


## திருமுறை முற்றோதல் இன்று நிறைவு நிகழ்வு

கொழும்புத்துறை, பெப்.25

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவு நிகழ்வு ஆலயத் தலைவர் வே.இரகுநாதன் தலைமையில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலய முன்னாள் பிரதி அதிபர் க.சிவராசா திருமுறை முற்றோதலில் கலந்து கொண்டவர்களை மதிப்பளிப்பார். (3-135)

## தேரேறி வரும் கன்னாதிட்டி காளி அம்பாள்.....



யாழ்ப்பாணம், கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. சித்திரத் தேரில் அம்பாள் பவனி வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்தார். (7-135)

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பற்றிய விளக்கமளிப்பு

கொழும்பு,பெப்.25

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தொலைக் கல்வித் திட்டத்தின் கீழ் வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கு பதிவு செய்து கல்வி பயில்வது பற்றிய விளக்கங்களை வழங்குவதற்காக அந்தப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பேராசிரியர் ச.சச்சிதானந்தம் இலங்கை வந்துள்ளார். யாழ்பாணத்தில் அவர் இந்தப் பட்டப்படிப்புகள் பற்றிய விளக்கங்களை வழங்கி பதிவு நடவடிக்கைகளையும் முன்னெடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


அண்ணாமலைப் பல்கலைக்கழக தொலை தூரக் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ், ஆங்கிலம், மொழியியல், வர்த்தகவியல், வணிகவியல், பொருளியல், அரசியல், உளவியல், ஊடகவியல், கணிதவியல், கணக்கியல், கல்வியியல், வங்கியியல், சந்தையியல், முகாமைத்துவம், தத்துவவியல், சமூகவியல், சட்டவியல், கணினியியல், நிதியியல், நூலகவியல், பொது நிர்வாகவியல், மனித உரிமையியல், சைவசித்தாந்தம், பரதநாட்டியம், சங்கீதம், வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நட்டுவாங்கம், நாதஸ்வரம், தேவாரப் பண்ணிசை ஆகிய துறைகளில் இள மாணி, முதுமாணி, இளங்கலாநிதி, கலாநிதி மற்றும் உயர் பட்டயம், பட்டயம், சான்றிதழ் பட்டங்களுக்குப் பதிவு செய்து போதனை பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பேராசிரியர் ச.சச்சிதானந்தனின் கல்வித் திட்ட விளக்கங்களை இல. 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நாளை செவ்வாய் முதல் வியாழன் வரை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம். அலுவலக நேரங்களில் 0778271006 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சந்திப்பு நேரத்தை ஒதுக்கமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

## தவக்காலம் சுய விளம்பரத்தின் காலமா?

தவக்காலம்என்பது சிலருக்கு சுய விளம்பரம் தேடும் காலமாக அமைந்திருக்கின்றது. காரணம் சிலர் தாங்கள் இந்தக் காலத்தில் காலை உணவை தவிர்த்து ஒரு நேர உபவாசமிருப்பதாகவும், வேறு சிலர் தாங்கள் இந்தக் காலத்தில் மாமிச உணவைத் தவிர்த்து மரக்கறி உணவை உட்கொள்வதாகவும், இன்னும் சிலர் தாங்கள் இந்தக் காலத்தில் மது, புகைத்தல், வெற்றிலை போன்றவற்றை தவிர்த்து வருவதாகவும் அயலவர்களுக்குத் தங்களைப் பற்றிப் பெருமையாக கூறி தாங்கள் தான் உண்மையான சமயப்பற்று உள்ள கிறிஸ்தவ பெருமக்களென்று பறை சாற்றிக் கொள்ளுகின்றார்கள்.

ஆனால் இத்தகையோரது செயற்பாட்டைப் பற்றி திருத்தூதர் யாக்கோப்பு என்ன கூறுகின்றார் என்றால் தாம் சமயப்பற்றுடையோர் என எண்ணிக்கொண்டிருப்போர் தம் நாவை அடக்காமலிருப்பாரென்றால் தம்மையே ஏமாற்றிக் கொள்கின்றனர். இத்தகையோரது சமயப்பற்று பயனற்றது (யாக் 1:26) அதாவது நாம் சமயப்பற்றுடையவர்களாகவும் அதனைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கவேண்டும் என்றால் நாவை அடக்கி நாம் மேற்கொள்ளுகின்ற உபவாசம் மற்றும் ஒறுத்தல் முயற்சிகளை அடுத்திருப்பவர்கள் அறியாவண்ணம் மேற்கொள்ள வேண்டும்.




மேலும் நாம் மேற்கொள்ளும் உபவாசம், ஒறுத்தல் முயற்சிகளினால் நிச்சயம் எமக்கு ஒரு சிறு பணம் சேமிப்பாகும். இந்தப் பணத்தை நாம் என்ன செய்யப்போகின்றோம்? இதுபற்றி திருத்தூதர் யாக்கோப்பு தொடர்ந்து கூறுவதாவது தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும், மாசற்றதுமான சமயவாழ்வு எதுவெனில் துன்புறும் அநாதைகளையும், கைம்பெண்களையும் கவனித்தல். (யாக் 1:27) ஆகவே இன்று எம்மத்தியிலே போர் பிரசவித்த அநாதைகள், கைம்பெண்கள், அங்கவீனர்கள் பலர் உள்ளனர். இப்படிப்பட்டோருக்கு நாம் மேற்கொள்ளும் உபவாசம் ஒறுத்தல் முயற்சிகளின் மூலம் சேமிப்பாகும் பணத்தை பகிர்ந்தளிக்கவேண்டும்.

நாவை அடக்கி விளம்பரத்தைத் தவிர்த்து உபவாசம், ஒறுத்தல் முயற்சிகளினால் சேமிப்பாகும் பணத்தை துன்புறுவோருக்கு வழங்கும் போதுதான் அது முழுமை நிறைந்த, அர்த்தமுள்ள, தந்தையாம் கடவுளுக்கு ஏற்ற தவக்காலமாக அமையும். அல்லது வெளி விளம்பரக் காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று ஆண்டவர் எம்மைப் பார்த்து கூறுவது நிச்சயம்.

-க. அருள்நேசன், குருநகர்-

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
04.07.1931

உதிர்வு
26.01.2013

அமரர் வேலுப்பிள்ளை பொன்னையா

கடந்த 26.01.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது தந்தையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.02.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி வீதி, கொடிகாமம். (C/6625)(8.7.11) குடும்பத்தினர்.

## வீட்டினுடைய கட்டடம் விற்பனைக்குண்டு

கந்தர் மடத்தில் பழைய வீட்டினுடைய கட்டடத்தொகுதி விற்பனைக்குண்டு (33785)(8.7.11)

தொடர்பு: 0773614630

## விற்பனைக்கு

★ MITSUBISHI, DELICA, PETROL VAN JAPAN 20-4xxx, முதல்பதிவு 1991, Power steering, முழுமையாக Tinkering Painting செய்யப்பட்ட வானும்,

★ Honda CB 125 மோட்டார் சைக்கிள் V I-4xxx, Japan முதல் பதிவு 2010, முதலாவது உடைமையாளர் கொண்ட மோட்டார் சைக்கிளும் உடன் விற்பனைக்குண்டு.

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 071 221 4114




01-03-2013 இல்
மாணிக்க விழாவினைக்
கொண்டாடும்

The Express Institute இனை

வாஞ்சையோடு
வாழ்த்துகின்றோம்.

தரணியில் உதித்து எட்டுத்திக்கெல்லாம் புகழ் பரப்பிய எமது நிறுவனம் 'எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்' என்றென்றும் வாழ வாழ்த்துகின்றோம்.

ஹம்டன் லேன்,
கொழும்பு - 06.

வாழ்த்துவோர்,
V.T. இராஜேந்திரா
குடும்பம்.




## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றினூடாக மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும்.
உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.
இல. 06, [illegible]
கிளை: இல. 30/27, [illegible]
Tel: 021 222 8680, 0775925088, 0750407430 (சி/6183)(2.6)

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் - இறப்பினும் வாழ்வான்

## 15 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 17 . 09 . 1940
மறைவு 14 . 01 . 1998

அமரர்
சவிரியான் டேவிட் செல்வம்

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் 18 . 08 . 948
மறைவு 26 . 01 . 2013

அமரர்
செல்வம் ராஜேஸ்வரி

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (25.02.2013) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு புனித மரியன்னைபேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவர்களின் ஆன்ம இலைப்பாற்றுக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 45,
மவுண்கார்மேல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(33767) (45.6.7)

## இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசைவிழாவின் நான்காம் நாள் நிகழ்வுகள்

### 25.02.2013 திங்கட் கிழமை

மாலை 5.00 மணிக்கு
பாட்டு : சாரங்கம் இசைக் கல்லூரி மாணவர்

மாலை 5.20 மணிக்கு
பாட்டு : செல்வி.S. மதுராங்கி
வயலின் : திரு.K. சுகபரன்
மிருதங்கம் : திரு.S. துரைராசா

மாலை 5.50 மணிக்கு
வயலின் கச்சேரி
வயலின் : திரு.R. ராதாகிருஷ்ணன்
திருமதி சைந்தவி நிசாகரன்
தவில் : திரு.T. உதயசங்கர்
மிருதங்கம் : திரு.V. ரமணா
கெஞ்சிரா : திரு.N. சிவசுந்தர சர்மா
முகர்சிங் : திரு.S. செந்தூரன்

மாலை 8.50 மணிக்கு
பாட்டு : திரு.S. பத்மலிங்கம்
வயலின் : திரு.S. கோபிதாஸ்
மிருதங்கம் : திரு.M. சிதம்பரநாதன்
முகர்சிங் : திரு.N. சதீஸ்குமார்



விழா சிறக்க வாழ்த்துவோர்: பரஞ்சோதி ரதிரூபனின்
லயபிருந்தம் இசைக்கல்லூரி-கனடா

(33697) (10.6.7)

# மரண அறிவித்தல்கள்

## சிவம் இந்திராவதி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவம் இந்திராவதி நேற்று (24.02. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவத்தின் (லான்ட்மாஸ்டர் சிவம்) அன்பு மனைவியும் தாரணி, நட்சாயினி, ஜீவிதன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தேவி மற்றும் சறோஜினி தேவி (கஞ்சி- சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியநாதன், கமலச்சந்திரன், பாலசுப்பிரமணியம், சிவயோகதேவி, சரஸ்வதிதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2013) நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பழனி கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ஐயாத்துரை தில்லைநாயகி



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வதிவிடமாக வும் கொண்ட திருமதி ஐயாத்துரை தில்லைநாயகி நேற்று (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் தட்சணாமூர்த்தி, இராசாத்தி, கணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரசோதி, ஸ்ரீநடராஜா, சிவபாதம், தர்மராஜா, சற்குணராஜா, ஜெயராஜா, மலர்சோதி, ஜீவமலர், சந்திரமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2013) திங்கட்கிழமை கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (33788) (10,6,7)

தகவல்:
சத்தியமூர்த்தி ஜீவமலர்
குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15.02.1942



மறைவு
22.02.2005

அமரர் **வைரவன் கதிரவன் (குஞ்சையா)**

*(மிருசுவில் கண்ணகை அம்மன் கோயில் தர்மகர்த்தா)*

*குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து*
*எம்மை அன்புடன் அரவணைத்து ...*
*நன்னெறி காட்டி வாழ வைத்த*
*எங்கள் அன்புத் தெய்வமே!*
*ஆண்டுகள் எட்டு அல்ல*
*எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்*
*உம்மை மறப்போமா...*
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தவசிக்குளம்,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## இந்திய மீனவர் அத்துமீறல் மன்மோகன்சிங்கிற்கு மனு

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்தக்கோரிய மனுவொன்று யாழ்.மாவட்ட கடற்றொழிலார் கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தினால் இந்தியப் பிரதமர் மன்மேகன் சிங்கிற்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற கச்சதீவு திருவிழா உற்சவத்தின் போது பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா இந்த மனுவை பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கையளிக்கும் முகமாக இந்திய தூதுவர் அசோக் கே. காந்தாவிடம் கையளித்தார்.

இதன்போது இலங்கை, இந்திய மீனவர்களை அழைத்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றும் அமைச்சரால் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. (16)

## சத்தியவான் சாவித்திரி நாடகம் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.25

கீரிமலை சிவபூமி அறக் கட்டளை மடத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நாட்டார் வளக்கியல் மன்றத்தினர் நடத்தும் சத்தியவான் சாவித்திரி நாடாகம் இன்று பிற்பகல் 5 மணிக்கு சிவபூமி அறக் கட்டளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் இசை நாடகம் தொடர்பான சிறப்புரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்கவுள்ளார்.

மாதந்தோறும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் நாட்டார் வளக்கியல் மன்றத்தின் ஏற்பாட்டில் கீரிமலை சிவபூமி அறக் கட்டளை மடத்தில் இசை நாடாக நிகழ்வுகள் இடம்பெறும் என சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார்.

## தவறிவிட்டது

வீமன்காமம், தெல்லிப்பழை எனும் முகவரியுடைய [illegible] ந்திரன் என்பவரின் தேசிய அ.அட்டை (893531289V), JOB Ic, கொமர்ஷல் வங்கி ATM காட், சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் சம்பந்தமான ஆவணங்கள் என்பன அடங்கிய [illegible] 22.02.2013 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible] இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:0772479365 (33784)(6,7,11)

## விற்பனை உதவியாளர்கள் தேவை

அச்சுவேலியில் அமையவுள்ள மருந்தகத்திற்கும் பான்ஸி கடைக்கும் முறையே A/L, O/L படித்த பெண்பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 0777165579

## மரண அறிவித்தல்

**வித்துவான் பண்டிதர் வல்லிபுரம்பொன்னம்பலம்**

*(அதிபர், கொழும்பு விவேகானந்தா, தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி, சீனன் கலட்டி)*

மறவன் புலோ, கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், அம்பனை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான வித்துவான் பண்டிதர் வல்லிபுரம் பொன்னம்பலம் கடந்த (23.02.2013) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராணியின் (ஆசிரியை, பத்தாவத்தை இளவாலை) அன்புக் கணவரும், கேமா(லண்டன்), ஆனந்தன் (லண்டன்), நளினி(ஆஸ்திரேலியா), நந்தினி(கொழும்பு), சாந்தி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 428, Clay Hall Essex Lodon இல் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. அருணாச்சலம்,
(ஆசிரியர் மறவன்புலோ கைதடி நாவற்குழி)

கேமா- 020 85144279
ஆனந்தன்- 00442085519470

advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## திருவேங்கடம் இராஜநாதன்

*(ஓய்வுபெற்ற ஊழியர் விலை மதிப்பீட்டு திணைக்களம்)*



யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஒட்டுவெளி (Ottuvely) மிருசுவிலை வசிப்பிடமாகவும், சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருவேங்கடம் இராஜநாதன் நேற்று (24.02. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவேங்கடம்- பாக்கியலட்சுமி தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், தபேசன், தவரதன், திலீபன், தனுசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராகினியின் மாமனும், புருசோத்தின் பேரனும், காலஞ்சென்ற பரமநாதன், தில்லைநாதன், இராமநாதன் மற்றும் பஞ்சநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2013) திங்கட்கிழமை அவரது வசிப்பிட முகவரியான சில்லாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு- 0778918524,
0775283100

தகவல்:
பிள்ளைகள்.

## சிறிதரன் பிருந்தினி (பிருந்தா)



போயிட்டி அச்செழு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிறிதரன் பிருந்தினி நேற்று (24.02.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2013) திங்கட் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்செழு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போயிட்டி, அச்செழு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

வையத்தின் மைந்தனாக
12.06.1967



தெய்வத்தின் சொந்தமாக
28.02.2010

அமரர் **முதலி உதயகுமார்**

*(நாவற்காடு, வரணி)*

*ஆண்டு மூன்று சென்றதுவே எமை*
*மறந்து நீர் உறங்கி...*
*வாழ்வெனும் அலை கடலில் தவிக்கின்றோம்*
*துடுப்பாக நீர் இன்றி*
*எம்மிடம் பொய் கூறிவிட்டீர்*
*காலம் முழுவதும் எமைச் சுமப்பேன் என்று...*
*இன்று நாம் சுமக்கின்றோம் உம் நினைவை*
*ஆறுதல் சொல்ல கண்ணீர் மட்டுமே எமக்கு*
*உம் அன்பிற்காய் ஏங்கி நிற்கின்றோம்*

நாவற்காடு, வரணி.
0773635866

குடும்பத்தினர்.

# பாலச்சந்திரன் படுகொலையில் ஐ.நா.,சர்வதேசத்துக்கும் பங்கு

## அவற்றிடம் நீதி கேட்டுப் பயனில்லை - மார்க்ஸிச கட்சி

இறுதி யுத்தத்தின்போது, மனிதாபிமான யுத்தம் என்னும் பெயரில் முன்னெடுத்த கொடூர இராணுவ நடவடிக்கைகளின் படுபாதகச் செயல்களை எத்தகைய பொய்கள், புனைவுகளாலும் மூடிமறைக்க முடியாது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது பாலகனின் படுகொலை செய்யப்பட்ட படங்கள் வெளியானதன் மூலம் யுத்தத்தின் கொடூரங்களும் யுத்த விதிகளின் மீறல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- இவ்வாறு தெரிவித்துள்ள புதிய ஜனநாயக மார்க்ஸச-லெனினிசக் கட்சி, இதனை மிக வன்மையாகக் கண்டித்தும் உள்ளது.

பாலச்சந்திரன் போன்ற இளம் தளிர்களின் கொலைகளுக்கு ஐ.நா. மற்றும் இந்தியா, அமெரிக்க உள்ளிட்ட உலக நாடுகளும் பங்குதாரிகளாக உள்ளனர் என்றும் இவர்களிடம் நீதி கோருவதில் அர்த்த? மில்லை என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இக்கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை இறுதிப்போரில் இராணுவம் அரங்கேற்றிய கொடூரங்கள் பற்றிய தகவல்கள் - ஆதாரங்கள் ஏற்கனவே சர்வதேச ஜனநாயக மனித உரிமை அமைப்புகளால் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவற்றின் தொடர்ச்சியாக அண்மையில் சனல் - 4 தொலைக்காட்சி பிரபாகரனின் பன்னிரண்டு வயது மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டமை பற்றிய படங்களை வெளியிட்டுள்ளது. ஒரு பச்சிளம் பாலகன் பழிவாங்கும் நோக்குடன் கொல்லப்பட்டிருப்பதானது ஒவ்வொரு தாய் தந்தையரையும் அனைத்து மக்களையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

இப் படங்கள் காலம் கடந்து வெளிவந்திருப்பினும் அதன் ஊடாக யுத்தத்தின் கொடூரங்களும் யுத்த விதிகளின் மீறல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதனை எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

மஹிந்த சிந்தனை அரசு முன்னெடுத்த இறுதி நாட்களிலான கொடூர யுத்தத்தில் முல்லைத்தீவின் கடலோரப் பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்டனர். அவர்களில் வயோதிபர்கள் நோயாளிகள் பெண்கள், குழந்தைகள், இளைஞர் - யுவதிகள், பச்சிளம் பாலகர்கள் என பலதரப்பட்டோரும் உள்ளடங்கியிருந்தனர்.

அத்தகைய பாலகர்களில் ஒருவராகவே பிரபாகரனின் பன்னிரண்டு வயது மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டிருக்கிறார். இப்படுபாதகச் செயல் மனித நேயத்திற்கும் மனித தர்மத்திற்கும் அப்பாலான பழிவாங்கும் வக்கிரத்தோடு செய்யப்பட்டிருக்கும் படுகொலையாகும். இது உள்நாட்டுயுத்தச் சட்டவிதிகளுக்கோ அல்லது எற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச யுத்த ஒழுங்கு விதிகளுக்கோ உட்பட்டதல்ல.

மேலும் சிறுவர்களைப் படைகளில் சேர்ப்பதைப் பற்றியும் சிறுவர் உரிமைகளுக்காகச் செயற்படுவதாக உள்நாடு முதல் உலக நாடுகள் வரை உரத்துக் கூறி வந்தவர்களான இவ் ஆட்சியினர், இறுதி யுத்தத்தில் பன்னிரண்டு வயதுப் பாலச்சந்திரன் போன்று எத்தனை இளம் தளிர்களைத் தமது துப்பாக்கி ரவைகளுக்கு இரையாக்கி இருப்பார்கள் என்றே சிந்திக்க வைக்கிறது.

எனவே, அரசே இதற்கான முழுப் பொறுப்பையும் பதிலையும் கூறவேண்டும். ஆனால், அரசின் பேச்சாளர்களும் பாதுகாப்புச் செயலாளரும் மறுப்பு நியாயங்களே கூறி வருகின்றனர். அதேவேளை, ஐ.நாவும், மனித உரிமைகள் பேரவையும், அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும், இந்தியாவும் இறுதி யுத்த கால மனித உரிமை மீறல்களுக்கோ அல்லது பாலகன் பாலச்சந்திரனின் படுகொலைக்கோ நீதியும் நியாயமும் தேடித் தருவார்கள் என நம்புவது அர்த்தமற்றவொரு எதிர்பார்ப்பாகவே இருக்க முடியும்.

ஏனெனில் இறுதி யுத்தத்தின் பேரழிவுகளுக்கும் பலச்சந்திரன் போன்ற இளம் தளிர்களின் கொலைகளுக்கும் இதே நாடுகளும் பொறுப்புதாரிகளேயாவர். எனவே, இக் கொலைகளுக்கு நியாயம் பெற வேண்டுமாயின் ஒரே மாற்றுவழி அரசால் திசை திருப்பி வைக்கப்பட்டுள்ள சிங்கள மக்களைச் அரசியல் ரீதியில் சிந்திக்க வைத்து. அவர்களை அரசிடம் கேள்வி கேட்டு நிற்க வைப்பதே உரிய வழியாகும்.

நாளை சிங்கள மக்களுக்கும், இளைஞர் - யுவதிகளுக்கும், பச்சிளம் பாலகர்களுக்கும் இதே கதி ஏற்படவே செய்யும் என்பதை சிங்கள உழைக்கும் மக்களுக்கு எடுத்துரைப்பது நமது கடமையாகும்.- இப்படி அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## களனி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.25

களனி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாண்வர்கள் விடுதி வசதிகள் குறித்தும் மாணவர் சங்க உறுப்பினர்கள் இருவர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதை கண்டித்துமே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனினும் பல்கலைக்கழக நிர்வாகக்குழு மாணவர் சங்கத்துடன் கலந்துரையாட மறுத்துவிட்டதாக மாணவர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

(ஒ)

## 39ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி நல்லதம்பி தங்கரத்தினம்

தோற்றம் 02 06 1933



மறைவு 18 01 2013

18.01.2013 (வெள்ளிக்கிழமை) அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தாயின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ்.வீதி,
இணுவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கலாவதி அதிஷ்டரட்ணம்



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி அதிஷ்டரட்ணம் நேற்று (24.02.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அதிஷ்டரட்ணத்தின் (பொபி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு -மீனாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், குலரட்ணம், குலேந்திரன், வித்தியா, ரவீந்திரன், உஷா, சித்ரா, ரூபேந்திரன், யமுனா, கங்கா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.02.2013) திங்கட்கிழமை முதலியார் மகேசன் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 4 மணியளவில் நவாலி கரியம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலியார் மகேசன் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


## தேவை

யாழ். பிரதான வீதியிலுள்ள பாமசிக்கடைக்கு வேலைக்கு பெண் பணியாளர் தேவை. அதனை அண்மித்த பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 8592027


## மரண அறிவித்தல்கள்

### சேனாதிராசா தவத்துரை (Engineer)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா தவத்துரை நேற்றுமுன்தினம் (23.02. 2013) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சேனாதிராசா -அன்னமுத்துபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற Dr.பூலோகசுந்தரம் -தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், Dr.மனோரஞ்சிதத்தின்(Retd, Medical Officer), பாசமிகு கணவரும், துஸ்யந்தன் (Engineer,), Dr.பிரியந்தன், வத்சலா( Accountant) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.செல்லப்பாவின் அன்பு சகோதரரும், Dr. பூலோகசுந் தரம், கயிலாயநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், Dr.சந்திரிக்கா, Dr. நிவேதிதா, ஆகியோரின் அன்பு மாமனும், யஸ்ரியாவின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2013) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தர் வளவு,
சுழிபுரம்.
தொ.பே. 077 6284439

தகவல்:
Dr.பூலோகசுந்தரம்
கயிலாயநாதன்(மைத்துனர்)

### கணபதிப்பிள்ளை சிறிகுமரன்



செட்டிச்சோலை அளவெட்டிவடக்கைப் பிறப்பிப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிறிகுமரன் நேற்றுமுன்தினம் (23.02. 2013) சனிக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் நாகேந்திரராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் -நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சசிகுமாரின் ( யா/அருணோதயாக் கல்லூரி) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் , சிறிகாந்தன்(ஜேர்மனி), சந்திரசேகரன் ஆகியோ ரின் அன்புச் சகோதரனும், ஜெயச்சந்திரன், சரவணபவன்-இலங்காதேவி, டலாஜா, தாரணி(ஜேர்மனி), கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்பு மைத் துனரும், மனோலயாவின்(குடும்பநல உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சித்தப்பாவும், இலக்கியா, ஆதிதா(ஜேர்மனி) ஆகியோரின் பெரியப்பாவும், கேசிகா, சானுஜன் , கிசிகா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2013) திங்கட்கிழமை மு.ப. 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகமுத்து சந்திரன் (கிளி)



கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சந்திரன் நேற்றுமுன்தினம் (23.02.2013) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து (மந்திரி) -தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து- இராசமணி தம்பதியரின் மருமகனும், கனகம்மாவின் (தேவி) அன்புக் கணவரும், றமேஸ், ரதீஸ், சுஜாதா (லண்டன்), சுஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானசீலன் (லண்டன்), சுகேந்திரன், சுஜீவா, மாலினி ஆகியோரின் பாசமிகு மாமனும், தம்பிராசா, கணேசமூர்த்தி, முருகையா, லலிதாதேவி, சுசிலா, சகுந்தலா, லீலா, இந்திரன் (பிரான்ஸ்), சூரி, விஜயன் (லண்டன்), காலஞ்சென்ற நாகேஸ்வரன் (முருகண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கருணாநிதி (பீற்றர்), பேராநந்தம் (பேரின்பம்), கோமதி, சிவராசா, இரத்தினசிங்கம், சிவலிங்கம், கமலாதேவி, சுந்தரேஸ்வரி, சாந்தினி (கனடா), சந்திரா, வசந்தி, பவானி, காலஞ்சென்றவர்களான உதயகுமார் (சின்னத்தம்பி), ரேவதி, கருணாநிதி ஆகியோரின் மைத்துனரும், டல்சிகா, அஜய் (லண்டன்), அக்ஷய் (லண்டன்), மபீஷா, கர்னிகா, சஜீஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்.
0779037546, 0778173860

தகவல்:
குடும்பத்தினர்.

# சிந்து,ஐக்கியம் அணிகள் தாச்சிப் போட்டியில் சம்பியன்

**ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி 4 புள்ளிகளையும், ஆலடி சிந்து 'பி' அணி 3 புள்ளிகளையும் பெற்றது. ஆட்ட முடிவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி 8:6 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.**

கைதடி,பெப்.25

விறுவிறுப்பாக நடந்த தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணியை ஆலடி சிந்து 'ஏ' அணி இரண்டு புள்ளிகள் கூடுதலாகப் பெற்று சம்பியனானது.

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பெருமளவு அணிகள் பங்குபற்றிய போதும் இறுதிப் போட்டிக்கு பலம் வாய்ந்த அணிகளை வீழ்த்தி ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியும், ஆலடி சிந்து 'பி' அணியும் தெரிவாகின.

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இரு அணிகளும் ஏட்டிக்குப் போட்டியாக மோதிக்கொண்டன.

இடைவேளை வரை நடந்த போட்டியில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக'ஏ' அணி நான்கு புள்ளிகளையும், ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணி 3 புள்ளிகளையும் பெற்றனர். இடைவேளையின் பின் நடைபெற்ற போட்டியிலும் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி 4 புள்ளிகளையும், ஆலடி சிந்து 'பி' அணி 3 புள்ளிகளையும் பெற்றது. ஆட்ட முடிவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி 8:6 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற 45 வயதுக்கு மேற்பட்டோருக்கும் 45 வயதுக்கு கீழ்ப் பட்டோருக்கும் இடையேயான தாச்சிப் போட்டியில் 45 வயதுக்கு மேற்பட்டோர் அணியில் சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் 45 வயதுக்கு கீழ்ப் பட்டோருக்கான அணியில் நவாலி சென்.றோக்ஸ் அணியும் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியில் வயது போனாலும் நாம் சளைத்தவர்கள் அல்ல என்பதனை சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 6:3 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகி நிரூபித்தது.

வெற்றியீட்டிய கழகங்களுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், கிருபாலேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (23-288)

# யாழ்.உதைபந்து லீக் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ் உதைபந்தாட்டலீக் தனது அங்கத்தவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

ஆட்டங்களின் முடிவுகள் சிலவருமாறு.

கடந்த வெள்ளிக் கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

இதில் மாயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகஅணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சனிக்கிழமை நாவாந்துறை சென்.நீக்கிளஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும், இடையில் போட்டி இடம்பெற விருந்தது. யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழகம் சமூகம் தராமையினால் நாவாந்துறை சென்.நீக்கிளஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிவழங்கப்பட்டது.

நேற்று ஞாயிறுக் கிழமை இடம்பெற்றஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி 3:1என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ-23)

### ஹொக்கிப் போட்டி

இலங்கைப் பாடசாலை அணிகளுக்க இடையேயான தேசிய மட்டத்தில் நடைபெறும் ஆண்கள் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் 7ஆம் 8 ஆம் 9ஆம் திகதிகளில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெற வுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் மேற்கொண்ட முயற்சி காரணமாக இம் முறை பாடசாலைகளுக்கு இடையேயான தேசிய ஹொக்கிப்பொட்டி யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் மேற் கொண்டுள்ளது. (ஐ-86)

# யாழ். கரம் அணிகளுக்கிடையேயான போட்டியில் பல்கலை அணி சம்பியன்



வலி வடக்க பெப் 25

யாழ் மாவட்ட கரம் சங்கத்தின் ஏற்பாட்டில் மணி விளையாட்டுக் கழகம் நடத்திய மணிவதனன்,ஜெய்சித்திரா சகோதரர்களின் 18 ஆவது ஆண்டு ஞாபகார்த்த சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட கரம் அணிகள் பங்குபற்றின. இதில் யாழ்.பல்க லைக் கழக அணி மாவட்ட மட்டச் சம்பியனாகியது

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதிக்கொண்டது.

இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகளாக காணப்பட்டதுடன் இறுதி வரை எந்த அணி வெற்றியைப் பெறும் எனக் கூற முடியாதவாறு இரு அணிகளும் மாறி மாறி வெற்றியைப் பெற்றுக் கொண்டன.

மூன்று ஒற்றையர் சுற்றுக்களையும் இரண்டு இரட்டையர் சுற்றுக்களையும் கொண்ட சுற்றுப் போட்டிகளில் 3:2 என்ற நிலையில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

முதலில் இடம் பெற்ற ஒற்றையர் சுற்றில் பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ஆர்.ஜி.சி.ஜெயதில காவை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சலிஸ்ரன் மோதிக் கொண்டார்கள்.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை சோந்த சலிஸ்ரன் 25:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வி.டினேஸ் குமாரவும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த எ.அமலசுஜீவனும் மோதிக் கொண்டனர்.

இருவரும் இறுதி வரை ஆதிக்கம் செலுத்திய போதிலும் இறுதியில்யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டினேஸ் குமார் 23:20 பள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் பல்கலைக் கழகத்தைச் சோந்த எம்.அன்ரனியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சோந்த என். அபிரொணியும் மோதிக்கொண்டனர்..

இதில் அன்ரனி 25:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்

தொடர்ந்து இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் யாழ்.பல்கலை கழக அணியைச் சோந்த எப்.அன்ரனியும் எப.ஆர்.துஷ்யந்தனுடன் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சலிஸ்ரன், எஸ்.சுஜிபனும் மோதிக் கொண்டனர்.

இந்த சுற்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த சலிஸ்ரன் சுஜிபன் அணியினர் 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்கள்.

இரண்டாவது இரட்டையர் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியைச் சேர்ந்த ஆர்.ஜி.சி.ஜெயதிலக்காவும், எம் கருணாரத்தினாவுடன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த எ.அமல சுஜீவனும் எஸ்.றொசானும் மோதிக்கொண்டனர்.

இந்தச் சுற்றில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர்கள் 18 :16 புள்ளிகள் என்ற அடிப்படையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வெற்றி பெற்றது. (ஐ-23-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.25

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் விக்ரம், ராஜன் கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு-

**காலை 8.30**

சென்றலைட்ஸ் வி.க எதிர் ஜொலிஸ்ரார் வி.க

**மதியம் 1 மணிக்கு**

ஜொனியஸ் வி.க எதிர் யாழ்.பல்கலைக்கழக .வி.க (த-86-23)

# பாஷையூர் அன்ரனிஸை வீழ்த்தியது ஊரெழு றோயல்

வலி.வடக்கு, பெப்.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் காலிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது.

வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

போட்டியின், முதல் பாதி ஆட்டத்தில் 4 கோல்களைப் பெற்றுக் கொண்ட றோயல் விளையாட்டுக்கழக அணி இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் 3 கோல்களைப் பெற்று ஆட்ட நிறைவில் 7 :0 என்ற கோல் கணக்கில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியைத் தோற்கடித்து வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. (த-86)

# பொன் அணிகள் மோதும் 25 ஆவது ஒரு நாள் ஆட்டம்

யாழ்ப்பாணம் பெப் 25

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே 25ஆவது ஆண்டாக நடைபெறும் ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று திங்கட்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 18 போட்டிகளிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 6 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளது.

பொன் அணிகளின் போரில் ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்தை யார் சுவீகரிப்பர் என்ற கேள்விக்கு பதில் இன்று மாலை தெரியவரும். (ஐ-23)

# சதுரங்கப் போட்டி முடிவுகள்



கரணவாய்,பெப். 24

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கச் சுற்றுப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் 20 வயதுப் பிரிவுகளிலும் சம்பியன்களாகின.

இந்தப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்றன.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு ஆண்கள்**

முதலாமிடம்: பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, மூன்றாமிடம் நெல்லியடி மத்திய கல்லூரி.

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் நெல்லியடி மத்திய கல்லூரி, மூன்றாமிடம் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

**15 வயது பெண்கள்**

முதலாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**19 வயது பெண்கள்**


முதலாமிடம் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. (த-400)

# மண் கௌவியது பாகிஸ்தான்

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்கா அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட 3 ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் தோல்வியை பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் பெற்றுக்கொண்ட 409 ஓட்டங்களுக்குப் பதிலளித்தாடிய பாகிஸ்தான் அணி, தனது முதலாவது இன்னிங்ஸில் 156 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

முதலாவது இலக்குக்காக பாகிஸ்தான் அணி 46 ஓட்டங்களைப் பகிர்ந்தபோதிலும், அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்து தடுமாறியது. யுனிஸ் கான் இறுதி வரை போராடி இறுதி இலக்காக ஆட்டமிழந்தார்.



துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக யுனிஸ் கான் 33 ஓட்டங்களையும் இம்ரான் பர்ஹத் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக அறிமுக வீரர் கைல் அபாஸ் 39 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளையும் வேர்ணன் பிலான்ரர் 2 இலக்குகளையும் ஸ்ரெய்ன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.



பொலோ ஒன் முறையில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பாகிஸ்தான் அணி, துடுப்பாட்டத்துக்காகக் களமிறங்கியது. பாகிஸ்தானின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மொஹமட் ஹபீஸ் முதலாவது பந்திலேயே ஸ்ரெய்னின் பந்துவீச்சில் ஆட்டமிழந்திருந்தார். பின்னர் அஸார் அலியுடன் யுனிஸ்கான் இணைந்து ஆட்டத்தைத் தொடரவே, அணி 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஸ்ரெய்னின் பந்துவீச்சில் யுனிஸ்கான் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து களம்புகுந்தார் இம்ரான். இருவரும் நிதானமாக ஆட்டத்தைத் தொடர்ந்த போதும், அணி 93 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அஸார் அலி 27 ஓட்டங்களுடன் ரண்அவுட்டானார்.

பின்னர் பாகிஸ்தான் அணியின் இம்ரான் 43 ஓட்டங்களுடனும், மிஸ்பா 5 ஓட்டங்களுடனும், சபிக் 6 ஓட்டங்களுடனும் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து பவிலியனுக்கு திருப்பியனுப்பப்பட்டனர். பின்னர் அகமட்-அஜ்மல் இணைந்து, அணியின் நிலைமை அறிந்து நிதானமாக ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இருப்பினும் தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சாளர்களின் பந்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் பாகிஸ்தான் அணி தனது அடுத்த இலக்கையும் இழந்தது. ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த அஜ்மல், ஸ்ரெய்னின் பந்தில் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து களமிறங்கிய அடில் களத்தில் இருக்கவே அகமட் 40 ஓட்டங்களைப் பெற்று ஸ்ரெய்னினால் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து அடில் 12 ஓட்டங்களுடனும், ரொகாட் அலி 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 235 ஓட்டங்களைப் பெற்றுத் தனது சகல இலக்குகளையும் இழந்தது பாகிஸ்தான்.


பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும், கைல் அபாஸ், கிளின்வெல்ட் தலா 2 இலக்குகளையும், பீற்றர்சன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். தென்னாபிரிக்க அணி 3-0 எனத் தொடரைக் கைப்பற்றியது.

ஆட்டநாயகனாக கைல் அபாஸ் தெரிவானார்.

# ஆஸிக்கெதிராக இந்தியா அதிரடி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று இந்தியா அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது.

நான்கு போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டி சென்னை சிதம்பரம் மைதானத்தில் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி சகல இலக்குகளையும் இழந்து 380 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் இந்தியா அணி இரண்டாம் நாளான நேற்று முன்தினம் 3 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சச்சின் டெண்டுல்கர் 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையிலும், ஹோலி 50 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். 3 ஆம் நாளான நேற்று ஆட்டம் ஆரம்பமாகியது. சிறப்பாக துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த டெண்டுல்கர் 81 ஓட்டங்களுடன் வெளியேறினார்.



தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி ஹோலியுடன் இணைந்து அதிரடியாக ஆட்டத்தைத் தொடர்ந்தார். டோனி இரட்டைச் சதம் அடிக்க மறுமுனையில் விராட்ஹோலியும், தனது பங்கிற்கு சதம் அடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை சரமாரியாக அதிகரித்தனர். இறுதியில் மூன்றாம் நாளான நேற்றைய ஆட்டநேர முடிவில் இந்திய அணி 515 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை மாத்திரம் இழந்து துடுப்பெடுத்தாடி வருகிறது. இதில் விராட் ஹோலி (107) ஆட்டமிழந்தார். டோனி ஆட்டமிழக்காது 206 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். ஆஸ்திரேலிய அணி சார்பில் பற்றின்சன் 4 இலக்குகளையும், லயோன் 3 இலக்குகளையும், ஹென்றிகியூஸ் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

## இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டி முடிவுகள்

இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டிகளில் புல்ஹாம், ஆர்சனல், நோர்விச், மன்செஸ்டர் யுனைட்டட், விகான் அத்லட்டிக், வெஸ்ட் ப்ரோம்விச் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

புல்ஹாம் அணிக்கும் ஸ்ரோக் அணிக்குமிடையிலான போட்டியில், புல்ஹாம் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக 45 ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது.

ஆர்சனல் அணிக்கும் அஸ்டன் வில்லா அணிக்குமிடையிலான போட்டியில் ஆர்சனல் அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆர்சனல் சார்பாக 6 ஆவது, 85 ஆவது நிமிடங்களிலும், அஸ்டன் வில்லா சார்பாக 68 ஆவது நிமிடத்திலும் கோல்கள் பெறப்பட்டன.

நோர்விச் அணிக்கும் எவேர்ட்டன் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் நோர்விச் அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

எவேர்ட்டன் சார்பாக 39ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டபோதிலும், நோர்விச் சார்பாக 84 ஆவது, 90 ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன.

மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கும் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணிக்குமிடையிலான போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.


மன்செஸ்டர் யுனைட்டட் அணி சார்பாக 23 ஆவது, 80 ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன.

விகான் அத்லட்டிக் அணிக்கும் ரெடிங் அணிக்குமிடையிலான போட்டியில் விகான் அத்லட்டிக் அணி 3 - 0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக 44 ஆவது, 45 ஆவது, 48 ஆவது நிமிடங்களில் கோல்கள் குவிக்கப்பட்டிருந்தன.

வெஸ்ட் ப்ரோம்விச் அணிக்கும் சன்டர்லான்ட் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் வெஸ்ட் ப்ரோம்விச் அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வெஸ்ட் ப்ரோம்விச் சார்பாக 35 ஆவது, 75 ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு, சன்டர்லான்ட் சார்பாக 80 ஆவது நிமிடத்தில் கோல் பெறப்பட்டிருந்தது.

# சிம்பாப்வேயை தோற்கடித்தது மேற்கிந்தியத் தீவுகள்

சிம்பாப்வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் சிம்பாப்வே அணிக்கு மிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.



கிரெனடா தேசிய கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 4இலக்குகளை இழந்து 337 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது இலக்குக்காக 168 ஓட்டங்கள் குவிக்கப்பட்டதோடு, மூன்றாவது இலக்குக்காகக் களமிறங்கிய டெரன் பிராவோவும் சிறப்பாக ஆட, மேற்கிந்தியத் தீவுகள் அணி சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஜோன்சன் சார்ள்ஸ் 111 பந்துகளில் 130 ஓட்டங்களையும் டெரன் பராவோ 71 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும் கெரன் பவல் 88 பந்துகளில் 79 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக கிறிஸ் மோபு 2 இலக்குகளையும் கைல் ஜார்விஸ், நற்சாய் முஷாங்வே ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.


338 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 156 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பம் முதலே இலக்குகளை இழந்த அந்த அணியால் விரைவாகத், துடுப்பெடுத்தாடத் திணறியது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக மல்கொம் வோலர் 75 பந்துகளில் 51 ஓட்டங்களையும் கிரெய்க் ஏர்வின் 51 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக சுனில் நரைன் 3 இலக்குகளையும், டுவைன் பராவோ, அன்ட்ரே ரசல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கேமர் ரோச்சி, ரீனோ பெஸ்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஜோன்சன் சார்ள்ஸ் தெரிவானார்.




# தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து

நியூஸிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் வெற்றிகொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளதையடுத்தே தொடர் இங்கிலாந்து வசமானது.

ஒக்லான்டில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 43.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 185 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. ஆரம்பம் முதலே இலக்குகளை இழந்த அந்த அணி, ஒரு கட்டத்தில் 11 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. 4 ஆவது இலக்குக்காக 53 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அதன் பின்னரும் இலக்குகள் இழக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக பிரென்டன் மக்கலம் 68 பந்துகளில் 79 ஓட்டங்களையும், றோஸ் ரெய்லர் 52 பந்துகளில் 28 ஓட்டங்களையும், கிரான்ற் எலியட் 48 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்டீவன் ஃபின் 3 இலக்குகளையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் மற்றும் கிரேம் ஸ்வான் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ஜேம்ஸ் அன்டர்சன் மற்றும் கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

186 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய இங்கிலாந்து அணி 37.3 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது இலக்குக்காக 42 ஓட்டங்கள் பகிரப்பட்டதோடு, இரண்டாவது இலக்குக்காக 67 ஓட்டங்கள் பகிரப்பட இங்கிலாந்து அணியின் வெற்றி இலகுவானது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரெயர் குக் 67 பந்துகளில் 46 ஓட்டங்களையும், ஒய்ன் மோர்கன் 24 பந்துகளில் 39 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 44 பந்துகளில் 38 ஓட்டங்களையும், ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், இயன் பெல் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 3 இலக்குகளையும், அன்ட்ரூ எலிஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.





என்னிடம் வாருங்கள்

கொழும்பிலிருந்து வருகை தரும்
சகோ.
**லலீத் பெரேரா**
குழுவினரால் நடத்தப்படும்

**தவக்காலத் தியானங்களும், குணமாக்கல் வழிபாடுகளும்**

மார்ச் 01-வெள்ளி- தும்பளை லூர்து அன்னை திருத்தலம்
மாலை 4 மணிமுதல் 7.30 மணிவரை

மார்ச் 2 சனி, மார்ச் 3 ஞாயிறு தினங்களில்
காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை
**இறை தியான இல்ல மண்டபம்**
(34, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்)
ஞாயிறு மாலை 4 மணிக்கு திருப்பலியோடு நிறைவுபெறும்

மார்ச் 4 -திங்கள்- குருக்கள், கன்னியர்,
துறவிகள், குருமடமாணவர்களுக்கு
காலை 9.00 மணி முதல் பகல் 12.30 மணி வரை
34, பழைய பூங்கா வீதியிலுள்ள இறைதியான இல்லத்தில்

தவக்காலத்தில் இறைவார்த்தையால் நிறைந்து பாவத்திலிருந்தும் நோய் பிணிகளிலிருந்தும் விடுதலைபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இறைதியானக் குழுவினர்.**



**விசேட வகுப்பு** 1000 பயிற்சிகளுடன்
**பெறுகை, தேற்றம்**
ஆரம்பம்:- 01:03:2013 4:00 PM
வகுப்பு நேரம்:- சனி, ஞாயிறு 4-6 PM
Note:- A/L 2013, Day, G.A.Q.
ஆகியோர் பங்குபற்றலாம்
என்.பிரதீபன்
**ACADEMY OF LOGIC**
பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி.



After A/L **STUDY in UK**
G.C.E O/L தகைமை போதுமானது.
பகுதி-நேர வேலைவாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பு.
மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.
வீசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும் உங்களிடத்திலிருந்து அறவிடப்படமாட்டாது.
தகுதியான மாணவர்களிற்கு, கல்லூரிக்கட்டணம் மற்றும் Sponsor ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவு செய்கின்றது.
Full package முறையில் கடந்த சில மாதங்களில் எம்நிறுவனத்தினூடாக LONDON சென்ற மாணவர்கள் விபரம்.



IELTS அல்லது CITY & GUILDS B1 பரீட்சையில் சித்தியடைந்துவரும் FIRST CLASS மாணவர்களிற்கு குறைந்த செலவில் Full package முறையில் Student VISA ஒழுங்குகள் செய்துதரப்படும்.



பெற்றோரின் நம்பிக்கையையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் அடிப்படையாகக்கொண்டு எமது நிறுவனம் இவ்வாறான வீசா-ஆலோசனை நடைமுறையை மேற்கொண்டுவருகின்றது.
**சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்.**
0779 265 447 Forward Your CV at: chec.usr@gmail.com
WORLD EDUCATION CONSULTANCY WEC
சங்கத்தானை சாவகச்சேரி.



**M.Tec**

கலை வர்த்தகக் கல்லூரி, கிளிநொச்சி.
க.பொ.த. (உ/த) - வர்த்தகப் பிரிவு
முன்னணிப் பெறுபேறுகள் - 2012

| பெயர் | பெறுபேறு | மா.நிலை |
| --- | --- | --- |
| கஜீபன் | 3A | 2 |
| பகீரதன் | 3A | 3 |
| கௌசிகா | 3A | 6 |
| சங்கீதன் | 3A | 7 |
| நிரோஜன் | 3A | 9 |
| அசிந்தா | 3A | 10 |
| பவிதரன் | 3A | 11 |
| கோபிகா | 3A | 15 |
| கவிதா | 2A,B | 17 |
| டிலானி | 2A,B | 19 |
| பானுசியா | A2B | 22 |
| மயூரன் | A2B | 23 |
| சாருபன் | A2B | 25 |
| கஸ்தூரி | 2A,B | 28 |
| லக்ஷன் | A2B | 29 |
| சயந்தனா | 3B | 30 |
| கீர்த்தனா | 3B | 31 |
| குகாயினி | A2B | 33 |
| நிதர்சன் | A2B | 36 |

சிறந்த பெறுபேறுகளைப் பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.
G. பரணிதரன், யசோதரன் - கணக்கீடு.
T. திவ்வியரூபன், T. கேதீஸ் - பொருளியல் N. நவீ - வணிகக் கல்வி
கல்லூரி மாணவர்கள் - 2013, 2014, 2015


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.